சீரணி

காந்தி
நூற்றாண்டு விழா
மலர்

அக்டோபர்
1969

35
காசு

சேலத்தில் அண்ணா சிலை

சீரணி

(கிராம நலம்)

கதிர் 15] அக்டோபர் 1969 [நெல் 1



அண்ணல் காந்தி இதழ்

தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத்
திங்கள் வெளியீடு

இணைக்குநர்கள் :
திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்

திரு. ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர்

* * *

பதிப்பாளர் :
திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ.

* * *

ஆண்டுச் சந்தா ரூ. 3-50

தனி இதழ் விலை

35 காசு

* * *

கதை, கட்டுரை, கவிதை, செய்திகள் அனுப்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், சிரணி,
கோட்டை, சென்னை-9

* * *

சந்தா மற்றும் நிர்வாகம் குறித்துத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

மக்கள் தொடர்பு அதிகாரி
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
கோட்டை, சென்னை-9

* * *

ஆசிரியர் :
திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்
1.	நூற்றாண்டவர்க்கு நூற்றாண்டு விழா -	3
2.	இறவாப் புகழ் பெற்றார் - -	4
3.	தங்கக் கதை - -	9
4.	நம்பிக்கை நல்லொளி - -	12
5.	திட்டப்பணிகளின் அடித்தளம் - -	17
6.	சத்தூட்டத் திட்டத்திற்கு சத்தூட்டுவோம்	19
7.	தமிழ்ப் பண்பால் உயர்ந்தவர் - -	23
8.	காந்தி அண்ணல் - -	25
9.	தமிழ் நாட்டில் காந்தியடிகள் - -	29
10.	குடும்ப ரகசியம் - -	32
11.	வானொலியும் வளர் அறிவும் - -	37
12.	அண்ணாமலை அமுது - -	41
13.	வையத்துள் வாழ்வாங்கு வாழலாம் -	46
14.	அண்ணலின் அடிச்சுவட்டில் தமிழ்நாடு -	53
15.	கள்ளத்தோணிகளில் இலங்கைக்குச் செல்லுதல் - -	57
16.	மருத்துவத்திலும் இலக்கியத்திலும் கரும்பு	59
17.	வறட்சி நிவாரணப் பணி ஒரு மனிதாபிமானப் பிரச்சினை - -	65
18.	நாடிவந்த சுழற்கேடயம் - -	68
19.	'பஞ்சாயத்து ராஜ்' இதழிலிருந்து -	70
20.	ஊராட்சி அரசிதழ் - -	78
21.	தமிழ்நாடு குடிநீர் வழங்கல், வடிகால் வாரியம் அமைத்தல் - -	82
22.	43 ஊராட்சிகள் பேரூராட்சிகளாகத் திருத்தியமைக்கப்படுகின்றன - -	84
23.	தேள்க்கடியும் பாம்புக் கடியும் - -	86
24.	பார்த்தோம் - படித்தோம் - பட்டதைச் சொல்கிறோம் - -	88

நூற்றண்டவர்க்கு நூற்றண்டு விழா

நூல் நூற்று மக்களின் உள்ளங்களை ஆண்ட உலகப் பெரியார் காந்தியடிகளின் நூற்றுண்டு விழா நாடெங்கணும் பொலிவுடன் கொண்டாடப்படுகிறது. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்''

என எழுதிச் சென்ருர் திருவள்ளுவர்.

இவ்விலக்கணத்துக்கோர் இலக்கியமாய் வாழ்ந்து வழிகாட்டி உலகத்தார் உள்ளத்து



ளெல்லாம் உயிரோவியமாய்த் திகழும் பேறு பெற்ருர் அண்ணல் காந்தியடிகள்.

அவர் தன்னலம் கருதாது பிறர் நலம் பேணிய பெருந்தகையாளர்; மன்னுயிர் காக்கத் தன்னுயிரீந்த மாபெரும் தலைவர்; நெஞ்சக் கரவகற்றிய நேர்மையாளர்; பொய்யுரையாத புண்ணியர்; பிறர்க்கின்னு செய்யாத பேராளர்; காலத்தின் அருமையுணர்ந்த கடமையாளர்.

அவருக்கிருந்த பெருமையெல்லாம் அவருடைய படிப்பாலோ, பதவியாலோ, பண பலத்தாலோ அல்ல; பின் எதனுல்? — மனத் திண்மையால்! சொன்னுர், சொற்படி நடந்தார் என்பதால்!

அவருடைய பிறந்த நாள் கருத்தாக 'நல்லதை எண்ணுவோம்; நல்லதையே சொல்வோம்; நல்லதையே செயற்படுத்துவோம்!' என்ற உறுதிகொண்டு, அதன் வழி ஒழுகுவோமாக!

— ஆசிரியர்

இறவாப் புகழ் பெற்றார்



[1967 அக்டோபரில், காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் வானொலியில் நிகழ்த்திய உரை.]

இன்று உலக உத்தமர் காந்தி அடிகளின் பிறந்தநாள். நாடெங்கும் இந்நாள், நன்னுளாகக் கொண்டாடப்படுகிறது! அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தி அடிகளுக்குத் தம் அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர். அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும், அவர் புகழ்பற்றிய பாடல்களை இசைத்தும், பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணி புரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

அவர் ஒரு தூயவர், நம் மார்க்கத்தில் மாசு துடைத்திட வந்த மகான் என்பாரும்;

அவர் ஒரு விடுதலை வீரர், நம் நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்;

அவர் ஒரு வேதாந்தி, பழய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர் என்பாரும்;

அவர் ஒரு சமதர்மவாதி, ஏழை பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழி வகுத்தவர் என்பாரும்;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும்; ஆக

இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவார் பல்வேறு வகையினர் உளர். இவர்களில், எவருடைய பார்வையில் முழுக் காந்தியடிகள் தெரிகிறார் என்பது காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்னையாகும். காரணம், ஒரு தனி மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர் அவர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தி அடைய விரும்பினால் அவருடைய அறப்போர் மாண்பினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்துவிடத் தோன்றும்.

ஆனால் அரசியல் துறையிலே மட்டும் அரும்பெரும் வெற்றிபெற்று, மற்றத் துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்ல அவர்.

பேரறிஞர் அண்ணா

எல்லாத் துறைகளிலும் தன் முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார்! எமக்

காகவே பணிபுரிந்தார்! என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும் தொண்டும் அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்தநாள் எல்லாத்துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்; ஒரே ஒரு துறைக்கு மட்டும் அல்ல; எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே, அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்கவேண்டும். ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு, அடிக்கடி கிடைக்காது; ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு, இந் நாட்டுக்குக் காந்தி அடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவே தான், இந்நாள், ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த ‘நற்காலம்’ என்ற முறையிலேயும் சிறப்புப் பெறுகிறது.

மகான்கள், மாவீரர்கள் ஆகியோரின் பிறந்த நாட்களைக் கொண்டாடும் கவர்ச்சி மிகுந்த நாடு நம் நாடு. புகழ் பாடுவதில், பூசைகள் நடாத்துவதில் வல்லவர்கள் நாம். ஆனால் யாருக்காகத் திருநாள் நடத்துகிறோமோ, எவருடைய திருநாமத்தைப் பாடுகிறோமோ, எவருடைய ஆற்றல் பற்றிப் புகழ்ந்து பேசுகிறோமோ, அவர்கள் காட்டிய நெறியிலே நடக்கின்றோமோ என்றால், இல்லை என்ற பதிலையே ஏக்கத்துடன் பெறமுடிகிறது.

இன்று இராட்டை சுழலுகிறது—நாளை? எத்தனை பேர்?

இன்று சேரிகளிலே சென்று சேவை செய்கிறோம்—நாளை?

இன்று வகுப்பு ஒற்றுமை பற்றிப் பேசுகிறோம், எழுச்சியுடன்—நாளை?

இன்று கிராமங்களிலேதான் நாட்டின் இதயம் இருக்கிறது என்று உணர்ந்து பேசுகிறோம்; ஆனால் மறுநாள்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு நாளையும், மறுநாளும், பிற நாட்களிலும் நம் எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிடவேண்டும். இந்நாள், அவர் புகழ்பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல; அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவையாக்கிட உறுதி பூணும் நாளாகும். மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! விழாக்களின் பலன் நம் செயலிலே இழைந்திடும் மாண்பில்!

அவருடைய பிறந்தநாள் நாமெல்லாம் நற் கருத்தும், சீரிய செயலும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும். அதற்கான முறையில் நாம் நடந்து கொள்கின்றோமா என்ற கேள்வியை எழுப்புகிறேன். நம் முன் உள்ள மிகப் பெரிய கேள்வி இது.

மகான்களையும் மாவீரர்களையும் கொண்டாடுவதிலே வல்லவர்கள் நாம் என்றேன்; அவர்கள் குறித்த அற்புதங்களை, மகிமைகளை, கதைகளாய், கவிதைகளாய் ஆக்கி மகிழ்வதிலும் நாம் மிக மிக வல்லவர்கள்.

அவர் கடலை அடக்கினார்; காற்றை விரட்டினார்; கருநாகத்தை மாலையாக அணிந்தார்; கந்த மூலமே அவருக்கு உணவு; தொட்டார்,பட்ட மரம் துளிர்த்தது; பார்த்தார், மலடி தாயானாள், குருடன் பார்வை பெற்றான் - இப்படிப்பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடு நம் நாடு.

இந்த மகிமைகளையும் அற்புதங்களையும் வியந்து பேசுவது, பிறகு எதற்குப் பயன்படுகிறது? அவர் மகான்; ஆகவே அப்படிச் செய்தார். நாம் சாமான்யர்கள்; நம்மால் முடியுமா அவர் செய்ததைச் செய்ய? என்று பேசி, நம் செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக்கொள்ளவே அது மெத்தவும் பயன்படுகிறது.

அந்த முறையிலே காந்தி அடிகளின் பிறந்தநாளை நடத்துபவர்களிலே நாம் இருந்துவிடக்கூடாது என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன். அவரை அவதார புருடர்களிலே ஒருவர், பூசைக்கு உரியவர், அவர் பிறந்தநாளன்று அவர் பற்றிய மகிமையை, அற்புதத்தைத் பேசுவது போதும் என்று இருந்துவிடாமல், அவர் காணவிரும்பிய சமுதாயம், அவர் எடுத்துக்காட்டிய இலட்சியம், அவர் விளக்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றை நினைவிலே கொண்டு, அதற்கான முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால் ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேச

வைத்தார்; உரிமை முழக்கமிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார். ''அஞ்சி அஞ்சிச் சாவார் அவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே'' என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினாரே பாரதியார், அந்த அச்சத்தைத் துடைத்தார். ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணி வகுப்பை நிறுத்திக் காட்டினார். சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார். நம்மால் என்ன ஆகும் என்ற ஏக்கத்தை விரட்டினார். நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் என்ற உறுதி எழச் செய்தார்; போர் முகாம் அமைத்து அல்ல - எளிய குடில் அமைத்து; வெட்டச் சொல்லி அல்ல - வெட்டுண்டவர் போக ஏனையோர் அறப்போர்ப் பாதை நடந்திடுக என்றுரைத்து; ஆத்திரம் ஊட்டி அல்ல - அன்பினை ஊட்டி. மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்ல அவர். காந்தி அடிகள் நடத்திய அற்புதத்தை நாம் நம் கண்களால் கண்டோம். அந்த 'அரை ஆடை' மனிதர் கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததை விட, 'அற்புதம்' வேறு என்ன இருக்கமுடியும்?

இவரா இந்தியாவின் தலைவர் என்று எண்ணி நகையாடியவர்கள், அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு இவரன்றோ தலைவர் என்று புகழ்ந்தனர். இந்நாட்டுக்கு மட்டுமல்ல, அடிமைத்தளை உடைத்திட விரும்பும் எந்நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது என்று இன்று ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

இந்தியா என்றொரு நாடுண்டு, அங்கு ஏலம் கிராம்பு பெறுவதுண்டு, பொன்னும் பொருளும் மிக உண்டு, போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில் பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது இந்தியா என்றொரு நாடுண்டு, அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக் காடு என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது. விடிவெள்ளி தோன்றுவதுபோலத் திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தி அடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே இந்தியாஎன்றொரு நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு என்று உலகம் அறிந்துகொள்ளமுடிந்தது. காந்தி அடிகளின் புகழொளி மூலமே உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னல

மற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தி அடிகளால்தான் உண்டாக்க முடிந்தது. அதற்கு முன்பெல்லாம் விடுதலை கோரி மனுச்செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை. ஆனால் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

அவருடைய பொதுப்பணியிலேஒரு கடுமையான சொல், ஒரு நேர்மையற்ற செயல், ஒரு சுயநலத்திட்டம் இருந்ததில்லை. அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக்கூடிய அளவுக்குப் பரப்பிற்று. அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர். அவர் மண் குடிசையிலே தங்கினால், அது மதிப்பளிக்கக் கூடியதென்று எண்ணினர் மன்னர் மன்னர்கள்.

''சுயராஜ்யம்''—ஓர் இலட்சியத்துக்கு வாய்ப்பு என்றே அவர் கருதினார்! ஒரு நாட்டுக் காதையிலே பொன் ஏடு அது; ஆனால் கடைசி ஏடு அல்ல என்பதை வலியுறுத்தினார்.

நாடும் மக்களும் எந்த நிலைபெற வேண்டுமோ அதற்கு அடிமைத்தனம் தடையாக இருக்கிறது; ஆகவே எந்த விலை கொடுத்தேனும் அதை அகற்றியாக வேண்டும் என்றே அவர் கூறினார். அடிமைத்தளை அகற்றப்பட்டது. ஆனால் அவர் எந்த நிலையிலே நாடும் மக்களும் இருந்திட வேண்டும் என்று கருதினாரோ, அந்த நிலையை ஏற்படுத்தி விட்டோமா? இல்லை என்பதைச் சொல்லக் கூச்சப்படத் தேவை இல்லை. ஏற்படுத்தியாக வேண்டும் என்ற உறுதியைப் பெற்றிட இந்நாள் உணர்ச்சி அளித்திட வேண்டும்.

அச்சம் அகற்றினார் - ஆங்கில அரசிடம் கொண்டிருந்த அச்சத்தை. அச்சம் பிற துறைகளிலே இருந்து அகன்றதா? இல்லையே! சமுதாயத்தில் மேலோர், கீழோர்; செல்வர், வறியர்; எளியோர், வலியோர் இருக்குமட்டும், அச்சம் எங்ஙனம் அகலும்?

பசி அச்சுறுத்துகிறது; பற்றுக்குறை பயமூட்டுகிறது; குரோத உணர்ச்சி விரட்டுகிறது; அச்சம் அகலவில்லை! அச்சம் அகலவேண்டும்; அறநெறிதழைக்கவேண்டும்! அண்ணாவின் பிறந்த நாள் விழா நடாத்திடும் போது இதற்கான உறுதி பெற்றிட வேண்டும்.

ஒரு புறம் செல்வம், அதனைச் சூழ வறுமை!

ஒருபுறம் பளபளப்பான பட்டினங்கள், கோடியிலே வறுமை நெளியும் சேரிப்புறங்கள்!

ஒரு புறம் தொழிற்கூடங்கள், மற்றொருபுறம் வேலையில்லாதோர் கூட்டம்!

ஒரு புறம் அறநெறி நிலையங்கள்; பிறிதொரு புறம் சுரண்டல்காரர், சூது மதியினர், பதுக்கல்காரர், கள்ளச் சந்தையினர்!

இதைக் காண அல்ல, அவர் காலமெல்லாம் உழைத்தது; இந்தக் கேடுகளற்ற ஒரு தூய நாட்டையே அவர் காண விரும்பினார். கொலையும், களவும், சூதும், குடியும் நிரம்பிய இடம் நாடு அல்ல; காடு—காடுகூட அல்ல, அங்கு மது விற்பதற்காக ஓர் ஏற்பாடும் இல்லை; கொடுமையை மறைத்திடப் பட்டாடை இல்லை; பாதகத்தைச் செய்து தப்பித்துக் கொள்ளப் பணம் எனும் ஆயுதம் இல்லை!

காந்தியடிகள் இந்தியாவை, மாண்புமிகு நாடு ஆக்கிட விரும்பினார், சூதற்ற, சுரண்டலற்ற, வகுப்பு பேதமற்ற நாடாக ஆக்க விரும்பினார்; அவர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் காணும் நாடு எத்தகைய நிலையில் இருக்கிறது.

வகுப்புக் கலவரம்
தீண்டாமைக் கொடுமை
வலியோர்சிலர் எளியோர்தமை
வதைபுரியும் கொடுமை
கவலை ததும்பும் கிராமங்கள்

அரசியல் சூதுகள்
சமுதாயச் சதிகள்

எல்லாம் நெளிகின்றன, அடக்குவார் எவர் உளர் என்று கொக்கரித்தபடி.

ஜனநாயகம் நடக்கிறது—மொழி ஆதிக்கச் சண்டை கூட ஓயவில்லை.

காந்தி அடிகளின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம். கள்ளுக்கடை ஒழிப்பிலேகூட வெற்றி காணாமல், கடைகளைத் திறந்து வைக்கவும் துணிந்த நிலையில்! காந்திஅடிகள் மகான், அற்புதம் நடத்தினார், மறைந்தார் என்ற முறையிலே எண்ணிக் கொள்ளுகிற வரையில் இந்த நிலை மாறாது.

காந்தி அடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிறார், நம்முள் இருக்கிறார், நம்முடன் கலந்து விட்டார் என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மடிந்திடவில்லை; அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திட வேண்டும்.

மறைந்த காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்க வேண்டும். அவர் இறவாப்புகழ் பெற்றார் என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமல்ல இது, அவருடைய எண்ணங்களை ஏற்றுக் கொண்டவர் நாங்கள், எனவே அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம் என்ற உறுதி பெற உரமூட்டும்நாள் இது.

அவருடைய நாட்களில் அவர் குரல் கேட்டு, அன்னிய அரசு வெருண்டோடிற்று; ஆனால் ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன.

'' பொய்ம்மையும்
கயமையும்''

'' கல்லாமையும்
இல்லாமையும்''

'' சாதிப்பித்தமும்
வகுப்பு மாச்சரியமும்''

வெருண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும்

'' தூய்மையும்
வாய்மையும்''

'' அஞ்சாமையும்
பணியாற்றும் தன்மையும்''

நம் ஒவ்வொருவருக்கும் இன்று பிறந்திட வேண்டும்; அதற்கே இன்று காந்தி அடிகள் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்பது இருக்கக் கூடாது; எல்லாச் சமூகத்தினரும் இணைந்து வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்.''

இதுவே உலக உத்தமர் காந்தி அடிகளின் இலட்சியம் என்று பண்டித நேரு அவர்கள் கூறியதை இங்கு நினைவு படுத்துகிறேன்.

தங்கக் கதை

பள்ளிப் பருவத்தில் ஒரு கதை படித்திருக்கிறோம். பொன்னாசை பிடித்த ஒரு மன்னன், தான் தொட்டதெல்லாம் பொன்னாக மாற வேண்டும் என்று தவமிருந்து இறைவனிடம் வரம் பெற்றானாம். அதற்குப் பிறகு அவன் தொட்டதெல்லாம் பொன்னாக மாறி ஒளிவீசியதாம். அரண்மனைத் தூண்கள் - அலங்கார மேடைகள் - அணிமணிகள் அனைத்தும் பொன் மயம். சிந்தை குளிர்ந்துபோன மன்னன் சாப்பிட உட்கார்ந்தான்; உணவைத் தொட்டான். அதுவும் பொன்னாகிவிட்டது...

பசி வயிற்றைக் கிள்ள, தவமாய்த் தவமிருந்து பெற்ற வரத்தால் உணவும் பொன்னாக, 'எனக்கு இந்த வரம் வேண்டாம் - வரம் வேண்டாம்' என்று மன்றாடத் தொடங்கிவிட்டான்.

இது கதைதான். ஆனாலும் பல சிறந்த கருத்துக்களை இது நமக்கு உணர்த்துகிறது. பேராசை கூடாது என்கிறது. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்கிறது. அது மட்டுமா? நாம் விரும்பி வேண்டி நிற்கும் எந்தப் பொருளும் அளவுக்கு அதிகமாகக் கிடைத்துவிட்டால், அதனாலேயே தொல்லைகள் மிகுந்து, 'வேண்டாம் - வேண்டாம்; போதும் - போதும்' என்று கலங்கவும் வைத்துவிடும் என்று எடுத்துக்காட்டுகிறது.

தேசிய குடும்பநலத் திட்ட இரு வார விழாவை ஒட்டி முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் வழங்கியுள்ள சிறப்புச் செய்தி

இந்தத் தங்கக் கதையை நான் நினைவு கூர்ந்ததற்குக் காரணம் - குழந்தைகள் அனைவருமே தங்கக் கட்டிகளுக்குச் சமம். இன்னும் சொல்லப்போனால் தங்கத்தை விடவும் எவ்வளவோ மேல். தங்கத்திற்கு ஒரு விலை மதிப்புச் சொல்லலாம். அந்த விலை மதிப்பும் நிலையாய் இல்லாமல் கூடும்-குறையும். ஆனால் குழந்தைச் செல்வம் என்பது விலை மதிப்பிட முடியாததாயிற்றே!

அந்த விலை மதிப்பற்ற செல்வம் கூட அளவோடு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று வரம் கேட்ட மன்னனின் கதைதான்.

வாழ்க்கை என்பது வாழ்வதற்காகத்தான். அந்த வாழ்க்கையில் குழந்தைகளைப் பெறாவிட்டால் அது முழுமை பெறாத மூளி வாழ்க்கை. ஆனால் அதற்காக எண்ணற்ற குழந்தைகளைப் பெற்று இடர்ப்படுவது முன்யோசனையற்ற குறை வாழ்க்கை.

குழந்தைகளுக்கு நல்வாழ்வு தருவது பெற்றோர்களின் கடமை. ஓரிரு குழந்தைகள் இருந்தால் உயர்வான வாழ்வு தரலாம். நிறையக் குழந்தைகளைப் பெற்றுவிட்டு, பொருளாதார இடிபாடுகளினால் திகைப்பதும், திண்டாடுவதும் அறிவுடைமை ஆகாது.

அப்படியானால் செல்வம் மிகுந்தவர்கள் நிறையக் குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாமா? என்னும் கேள்வி எழும். வாழ்க்கை வசதிகளுக்கும் - குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் மட்டும் தொடர்பு வைத்துப் பேசக்கூடாது. ஒரு தாய் - தந்தையின் உடல் நலத்தையும் பொறுத்த பிரச்னை இது. அது மட்டுமன்று - இஃது ஒரு தேசியப் பிரச்னையும் ஆகும். விநாடிக்கு விநாடி நம் சமுதாயத்தின் வாய்கள் அதிகரித்துக்கொண்டு போனால், நம் நாட்டின் பொருளாதார நிலை என்னாவது என்பதையும் கவனத்தில் கொண்டுதான் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும்.

1921இல் நம் நாட்டில் ஆயிரம் பேருக்குப் பிறப்பு விகிதம் 49, இறப்பு விகிதம் 48. ஆனால் இப்போது பிறப்பு விகிதம் 40, இறப்பு விகிதம் 15 தான்.

இறப்பு விகிதம் குறைந்துவிட்டதே என்று நாம் கவலைப்படவில்லை. மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் இறப்பு விகிதம் குறைந்ததுபோல் பிறப்பு விகிதம் குறையவில்லையே என்பதுதான் கவலை.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் பல்வேறு வகைப்பட்ட சுகாதாரப் பணிகளின் பயனாக மக்களின் ஆயுட்காலம் அதிகரித்து வந்துள்ளது. 1950இல் இங்கு மக்களின் சராசரி ஆயுட் காலம் 30 ஆண்டுகள் தான். ஆனால் இப்போது 52 ஆண்டுகளாக இஃது உயர்ந்திருக்கிறது.

இவ்வாறு இறப்பு விகிதம் குறைந்திருக்கும் இந்த வேகத்தில், பிறப்பு விகிதமும் குறைந்தால்தான் மக்கள் தொகையானது ஒரு கட்டுப்பாடான அளவில் இருந்துகொண்டிருக்கும். அப்படியில்லாமல் மக்கள் தொகை பெருகுவதிலேயே இருந்தால் அது சம்பந்தப்பட்ட அந்தந்தப் பெற்றோர்களுக்கு மட்டும் பிரச்னையாக இல்லாமல் தேசியப் பிரச்னையாகவும் உருவெடுக்கிறது.

எனவே குழந்தைகள் பிறக்கும் எண்ணிக்கையைக் குறைத்து வீட்டிலும், நாட்டிலும் மகிழ்ச்சி பொங்கச் செய்வதுதான் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்திற்குத் தற்பொழுது தமிழ்நாட்டில் நல்ல ஆதரவு கிடைத்து வருவது நம்பிக்கையின் சின்னமாக விளங்குகிறது.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் படிப்படியே வெற்றிகரமாகச் செயல்படவேண்டும் என்பதற்காக, அரசு செலவு செய்யும் நிதியும் படிப்படியே அதிகரித்து வந்துள்ளது. மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் சுமார் 171இலட்ச ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டில், அதாவது 1968-69இல் மட்டும் 123 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

குடும்பக் கட்டுப்பாடுத்திட்டத்தின் வெற்றி இப்படி இலட்சக்கணக்காகச் செலவு செய்வதில் மட்டுமில்லை.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள அரசுப் பணியாளர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் ஆகியோரின் செயல் திறனில் இதன் வெற்றி அடங்கியிருக்கிறது.

அதற்கும் மேலாக மக்களின் ஆதரவில் - ஒத்துழைப்பில் அடங்கியிருக்கிறது.

எனவே, இத்திட்டத்தின் உயர்ந்த நோக்கத்தை உணர்வீர்! வெற்றிக்கு உதவுவீர்! என்று கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

(சென்னை வானொலி நிலையத்தில் 16-9-1969 அன்று ஒலிபரப்பப் பட்டது.)

மதுரை மாவட்டத்தில் மா பெரும் பணிகள்

மதுரை மாவட்டம், மேலூர் தெற்கு ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்கண்ட வளர்ச்சி வேலைகள் நடைபெற்றுள்ளன.

1 வேளாண்மை: வேளாண்மைத் திட்டத்தின் கீழ் நெல் விதைகள் ஐ ஆர் 8 உட்பட 26 டன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன 8 660 கி கி. காய்கறி விதைகள் விநியோகிக்கப்பட்டு 5 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப் பட்டுள்ளன மேலும் 79½ கிலோ துவரை விதைகள் விநியோகிக்கப்பட்டு 15 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்டுள்ளன கடந்த மாதத்தில் 5430 பண்ணைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன 1969-70ஆம் ஆண்டில் தீவிர விவசாய உரக் கடன் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் தொகை ரூ 1,50,000 வழங்கப்பட்டு விட்டது.

2. கால்நடை: கால்நடைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் 3 தனியார் கோழிப்பண்ணைகளுக்கு 146 வெள்ளை லக்கான் கோழிகள் மானியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன கால்நடை மருத்துவ மனைக்குக் கூடுதல் வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தெறகுத் தெருக் கிராமததில் மீன்பண்ணை வேலை முடியும் தருவாயிலுள்ளது.

3 கடன் வசதிகள்: விவசாயிகளுக்கு முழுக்கடன் திட்டத்தின்கீழ் கடந்த மாதத்தில் சென்னை அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் மூலம் 16 பம்பு செட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

4 கல்வி: மேலூர் தெற்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த புதுச் சுக்கான்பட்டி கிராமத்திலும் இ மலம்பட்டி கிராமத்திலும் புதிதாக ஆரம்பப் பள்ளிகள் திறக்க மாவட்டக் கல்வி அதிகாரியிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. மதிய உணவு மையங்கள் 14 பார்வையிடப்பட்டுள்ளன.

5. குடிதண்ணீர்த் திட்டம்: காந்தி நூற்றாண்டு விழாத் திட்டத்தின் கீழ் 8 குடி தண்ணீர்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

6. சிறுசேமிப்பு: கடந்த மாதத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 25,410 வசூல் செய்யப்பட்டுள்ளது.

7. குடும்பக்கட்டுப்பாடு: இத்திட்டத்தின்கீழ் தகுதி வாய்ந்த 32 ஆண்களுக்கும் 2 பெண்களுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது; தடுப்புச் சாதனங்கள் 631 விநியோகிக்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் 1969ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடியச் சிறு சேமிப்புத்திட்டத்தின் கீழ் ரூ 1 35,220 வசூலிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏரக்கோட்டைப்பட்டியில் 18 8-69ஆம் நாள் குழந்தைகள் கண்காட்சி நடைபெற்றது சிறந்த குழந்தைகளுக்குப் பரிசுகள் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவரால் வழங்கப்பட்டன ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊர்ப்பொதுமக்கள், ஆணையாளர், விரிவாக்கப்பணியாளர்கள் ஆகியோர் இவ் விழாவில் கலந்துகொண்டனர்.

நம்பிக்கை நல்லொளி

அளவான குடும்பமே அளப்பரிய மகிழ்ச்சிக்கு அரண் செய்வதாகும் என்ற கருத்தைப் பரப்பிச் செயல் ஆற்றி வரும் குடும்பநலத் திட்டம் இன்று 'இரு வார' விழா காண்கிறது.

இப்பொழுது நம் நாட்டில், மக்கட்பெருக்கத்தால் ஏற்படும் அவதிகளைப்பற்றிப் பலரும் ஓரளவுக்கு உணரத் தலைப்பட்டுவிட்டனர் என்றுதான் கூறவேண்டும். மக்கள் தாங்களாகவே அவதிகளை உணரத் தலைப்படாவிட்டாலும், அவதிகள் அவர்களை உணர வைக்கத் தொடங்கி விட்டன. நாட்டில் நலம் பயக்கும் நல்ல பொருளியல் செழிப்பும், நிலையான எதிர்கால நல்வாழ்வும் நிலவ வேண்டுமானால், இயற்கை வளங்களுக்கு ஏற்ப மக்கள் தொகையின் அளவு இருக்கவேண்டி யிருக்கிறது என்பதையும், வளமான நிலத்திற்கு ஏற்பத்தான் வளமான மக்களின் வாழ்வு அமைகிறது என்பதையும், நாட்டின் பொருளுற்பத்திக்கு ஏற்பத்தான் பிள்ளைகளின் உற்பத்தி இருக்கவேண்டி யிருக்கிறது என்பதை

தேசிய குடும்ப நலத்திட்ட இருவார விழாவை ஒட்டி நலத் துறை அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழங்கியுள்ள சிறப்புச் செய்தி.

யும் சிறுகச் சிறுக நாட்டவர்கள் உணரத் தலைப்பட்டிருப்பது, நல்ல எதிர்காலத்தைக் காட்டுவதற்கான அறிகுறியாகும். இந்தியாவில் மக்கள் குடும்பக் கட்டுத்திட்டக் கருத்தை ஏற்றுக்கொள்ள இசைகிறார்களா, இல்லையா என்பது இப்பொழுது பிரச்னையாக இல்லை; மிகப் பிற்போக்கான நிலையிலுள்ள மக்களும் எளிதாகப் புரிந்துகொண்டு எளிதாகக் கடைப்பிடிக்கக்கூடிய கருத்தடை முறை என்ன என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது. மேலும் மேலும் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டிருக்க வேண்டாம் என்ற உணர்வும், விருப்பமும் பெரும்பாலான பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களில் பலரும் அதற்கான வழி வகைகளைக் காணமாட்டாமல் தவிக்கிறார்கள்.

இந்நாட்டின் மக்கள் தொகை ஆண்டொன்றுக்கு 130 இலட்சம் வீதம் மிகவும் அச்சமூட்டும் வகையில் ஏறிக்கொண்டே போகிறது. மூன்று விநாடிகளுக்கு இரு குழந்தைகள்-அதாவது ஒரு நிமிடத்திற்கு 40 குழந்தைகள்-இந்தியாவில் பிறக்கின்றன. பொறுப்புள்ள குடிமகன் யாருக்குமே இது ஒரு மாபெரும் அறைகூவலாகும். வேளாண்மைச் சிறப்பும் உணவு உற்பத்திப் பெருக்கமும் மக்கள் பெருக்கத்தில் கடலில் கரைத்த பெருங்காயமாகின்றன. கல்வித் துறையிலும், நலவழித்துறையிலும், மற்றும் சீரமைப்பு வளர்ச்சித் துறைகளிலும் அரசு மேற்கொள்ளும் அத்துணை நன்மைத் திட்டங்களும் போதிய பயனளிக்காமல் போகின்றன. 1941க்கும் 1951க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நாட்டில் மக்கள் தொகை ஆண்டுதோறும் 1·2 சதவிகிதத்தில் ஏறிக்கொண்டே வந்தது. இப்போதைய மக்கள் தொகை ஏற்றமோ ஆண்டொன்றுக்கு 1·5 சதவிகிதமாகும். பெரும் அளவில் மனித உயிர்களைப் பலிகொண்ட கொள்ளை நோய்கள், தொற்று நோய்கள் முதலியன பொதுநல மருத்துவப் பேருதவிகளால் ஒழிக்கப்பட்டிருக்கின்ற வகையால், இறப்பு விகிதமும் குறைந்துகொண்டே வந்துவிட்டது. 1921இல் ஆயிரத்துக்கு 42ஆக இருந்தது, இப்போது ஆயிரத்துக்கு 15ஆகக் குறைந்துவிட்டது என்னும் இது வரவேற்கத்தக்க நிலையேயாகும். இளமைச் சாக்காட்டைக் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்படுத்தியிருக்கிறோம். எல்லாமாகச் சேர்ந்து இந்நாட்டு மக்களின் சராசரி ஆயுள் 27 ஆண்டுகள் என்றிருந்த நிலை மாறி 52 ஆண்டுகளாக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்திய நாட்டின் மக்கள் தொகை 52 கோடியை எட்டிப் பிடித்துவிட்டது.

இந்நிலையில் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தவேண்டியது அவசியமும் அவசரமும் ஆகிறது. அளவான குடும்பங்கள் அமையாத வரையில் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதென்பது எளிதான செயலன்று.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்றார் வள்ளுவர். புகழ் பரக்க-பெருமை சேர வாழவேண்டும்; அத்தகைய வாழ்வுக்கு வாய்ப்பும் வசதியும் இருந்தால் மட்டுமே பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும்.

"ஈன்று புரந்தருதல் என்தலைக் கடனே -
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

என்பதாகச் சங்க காலப் பெண்பாற் புலவர் ஒருவர் கூறினார். முட்டின்றிச் சீராட்டி, பாராட்டி வளர்த்துக் காப்பாற்றவும், சங்கடமின்றிச் சான்றோனாக்கவும் வளமும், வாய்ப்பும் உள்ளோர் மட்டுமே பிள்ளைப் பேற்றை நினைக்கத் தக்கோராவர். நன்முறை வளர்ப்பிலும் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் தவழும் பிள்ளைகளே காலப்போக்கில், சங்க காலப் புலவர் விரும்பிய "களிறு எறிந்து பெயர்தலுக்கு" உரியவராவர்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்றாரே திருவள்ளுவர். அத்தகைய நன்மக்கள் இரண்டொருவரை மட்டும் தோற்றுவிப்பதே பெற்றோர்களின் கடமையாக இருத்தல் வேண்டும். "அறிவறிந்த மக்கட்பேறு",

''பழிபிறங்காப் பண்புடை மக்கள்'' என வள்ளுவர் கருதிய மக்கட் செல்வமே நாட்டுக்குத் தேவை.

திட்டமிட்ட அளவான குடும்பங் களில்தான் இத்தகு பீடுபெறு பிள்ளை கள் தோன்றிச் சிறப்பது இயலுவ தாகும்.

நாம் மேற்கொண்டுள்ள குடும்ப நலத் திட்டம் அனைத்துலகிலேயே மாபெரும் திட்டமாகும். இதுவரை யில் நடந்திருக்கும் ஏற்பாட்டு முயற்சி களால் நம்பிக்கையூட்டும் சில பலன் கள் கிடைக்காமலுமில்லை. ஆடவரும் பெண்டிருமாக ஏறத்தாழ 8 இலட்சம் பேர் இதுவரை தமிழ்நாட்டில் கருத் தடைத் திட்டத்துக்கு உட்பட்டிருக் கின்றனர் என்று தெரியும்போது, அந்த அளவுக்குப் பிள்ளைப்பேற்றுத் தொகை சுருங்கக் கூடுமென்று நம்ப லாம். நம்பிக்கை நல்லொளிக்கு நடைமுறை துணை செய்கிறது. குடும்ப நலத் திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படை, பொதுமக்களின் மன மொன்றிய ஒத்துழைப்பும் ஈடுபாடு மாகும். குறிப்பிடத்தக்க அளவில் இவற்றை எய்தப் பெறுவோமாகில், திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம் என்ற கருத்து எல்லோ ராலும் உணரப்படுமாகில், திட்டத் தில் பெரும்பகுதி வெற்றி கண்டோம் எனக் களிக்கூத்தாடலாம்.

[சென்னை வானொலி நிலையத்தில் *17-9-1969* அன்று ஒலிபரப்பப் பட்டது.]

தனிச் சிறுரகக் கைத்தொழில் வாரியம் அமைப்பு

மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இத் தொழிற்பெருக்கத்துக்கான யோசனைகள் கூறவும், அரசாங்கச் சிறு ரகத் தொழில்-கைவினைத் தொழில்வாரியம் ஒன்றைத் தமிழ்நாடு அரசாங்கம் அமைத்துள்ளது. இந்த வாரியத்தில் அங்கம் வகிப் பவர்கள் விவரம் வருமாறு:

தொழில் அமைச்சர், இந்த வாரியத்தின் தலைவராக இருப்பார்.

தொழில் வளர்ச்சித்துறைச் செயலாளர், வேளாண்மைத்துறை இயக்குநர், மாநிலச் சிறு தொழில் நிறுவன நிர்வாக இயக்குநர், வேளாண்மைத் தொழில் நிறுவன நிர்வாக இயக்குநர், தொழில் முதலீடு நிறுவனச் செயலாளர், சிறு தொழில் பணி நிறுவன இயக்குநர், தேசியச் சிறு தொழில் நிறுவன வட்டார நிர்வாகி, இந்திய ரிசர்வ் பாங்க் தொழில் நிதித்துறைப் பொறுப்பு அலுவலர் ஆகியோர் இந்த வாரியத்தில் அதிகாரச் சார்பு உறுப்பினர்கள். தொழில் வர்த்தகத்துறை இயக்குநர், உறுப்பினர்—செயலாளராக இருப்பார்.

தொழில்களைச் சேர்ந்தவர்கள் வகையில், மாநிலத் தொழிற் பேட்டைகள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர், மாநிலச் சிறு தொழில் சங்கத் தலைவர், இந்தியச் சிறு தொழில் பேராயத் துணைத் தலைவர் திரு எம். எஸ் பார்த்தசாரதி, அம்பத்தூர் தொழிற் பேட்டையைச் சேர்ந்த திரு. மாத்யூ குஞ்செரியா ஆகியவர்கள் உறுப்பினர்களாவர்.

அதிகாரச் சார்பற்ற உறுப்பினர்கள் வகையில் சேலம் மாவட் டம் குமாரபாளையம் திரு எம் எஸ் எம். சுப்பிரமணியம், பட்டுக் கோட்டை 'மக்கள் அரசு' இதழ் ஆசிரியர் திரு. முத்துக்குமார சாமி ஆகியவர்கள் உறுப்பினர்களாவர்.

இந்த வாரியத்தில் தொழில்களைச் சேர்ந்தவர்கள், அதிகாரச் சார்பற்றவர்கள் ஆகிய உறுப்பினர்கள் பதவிக்காலம் ஓர் ஆண்டு ஆகும். இந்த வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் இருக்கும்.

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய்
* தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்
பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்
திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு :

கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4

சுபிட்சத்துக்கும் தாராளமான தண்ணீர் வசதிக்கும்

பம்புடன் கூடிய

Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்

நம்பத்தகுந்தது



நல்ல மகசூல்

விவசாயிக்கு சுபிட்சத்தை அளிக்கிறது

தாராளமான தண்ணீர்



நல்ல மகசூலே அளிக்கிறது

பம்புடன் கூடிய நம்பத்தகுந்த ஒரு

Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்

தாராளமான தண்ணீர் வசதியை அளிக்கிறது.



கிர்லோஸ்கர் எலக்ட்ரிக் கம்பெனி லிட்.,
த. பெ. எண் 1017; பெங்களூர்-3, இந்தியா
பூரண விநியோகஸ்தர்கள்: **பாரி & கம்பெனி லிட்.,**
த. பெ. எண் 12. மதருஸ்-1. ● த. பெ. எண் 208, கல்கத்தா-1
த. பெ. எண் 506, பம்பாய்-1. BR. ● த. பெ. எண் 172, புது டில்லி-1.

கிர்லோஸ்கர்-ஆசியா டைரக்ட்-ஆன்-லைன் ஸ்டார்ட்டர்கள் 10 எச்பி வரையிலும், ஸ்டார்/டெல்டா ஸ்டார்டர்கள் 60எச்பி வரையிலும் ஸ்லிப்ரிங் மோட்டார் ஸ்டார்டர்கள் 70 எச்பி வரையிலும் உடனடியாகக் கிடைக்கும்.

Bensons-1282 TAM

திட்டப் பணிகளின் அடித்தளம்

மாண்புமிகு
கே. ஏ. மதியழகன்

"யோஜனா" இதழின் தமிழ் வடிவமான "திட்டம்" என்ற இதழின் முதல் வெளியீட்டை வெளியிடும்படியான நல் வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்காக மைய அரசின் அமைச்சர் திரு. குஜ்ரால் அவர்கட்கு என் நன்றியறிதலைத் தெரியப் படுத்திக் கொள்கிறேன். மறைந்த மாமேதையும் நம் இதயத் தெய்வமுமான பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்று ஒரு திங்கள் கழித்து உங்கள் இதழுக்கு அனுப்பிய செய்தியை, இத்தமிழ் இதழின் முதல் பக்கத்தில் நீங்கள் வெளியிட்டிருப்பது சாலப்பொருத்தமுடைய ஒரு செயல் என நான் கருதுகிறேன். மக்களுடைய உணர்வுகள், நம்பிக்கைகள், எண்ணங்களை முன்னிறுத்தி, அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துத் தீட்டப்படும் திட்டம்தான் உண்மையான பயன் அளிக்கும் என்று அறிஞர் அண்ணா அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார். திட்டத்தை அடிமட்டத்திலிருந்து தீட்டுதல் என்ற அடிப்படையை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில்தான் திட்டத்தினால் பயன் ஏற்படுகின்ற ஒரு நிலையை நாம் அடைய முடியும். இந்த முறையில் செயலாற்ற வேண்டுமென்றால், திட்டம் தீட்டுவோர், அதனால் பயன்பெறும் மக்கள் — ஆகிய இரு சாராரும் நல்ல முறையில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, கலந்து செயலாற்றுவது மிகமிக இன்றியமையாததாகும். எந்தத் திட்டமும் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமென்றால், அது பொதுமக்களின் எழுச்சியையும் ஆர்வத்தையும் தூண்டுவதாக இருக்க வேண்டும். மக்கள் திட்டத்தை உருவாக்குவதில் தீவிரப் பங்கேற்றுச் செயல் புரியவில்லையென்றால், எந்த ஒரு திட்டமும் மக்களிடையே ஓர் ஆர்வத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தமுடியாது. திட்டத்தைப் பற்றி நல்ல முறையில் மக்களுக்கு எடுத்துக் கூறும் பணியை 'யோஜனா' நெடுங்காலமாகச் சீரிய முறையில் செய்து வருகிறது. இந்தப் பணியை மேலும் பரவலான முறையில், தமிழ் வடிவமான 'திட்டம்' என்ற இதழ் மூலம் மக்களில் பெருவாரியான பிரிவினருக்குச் செய்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதுகண்டு, மெத்த மனமகிழ்வடைகிறேன். நிறைந்த மனமகிழ்வுடன் இந்தத் தமிழ் இதழை வெளியிடுகிறேன்.

நம் மக்களிடையே, பொருளாதாரத் துறையில் ஏற்படும் பிரச்னைகள், சிக்கல்கள், உண்மைகள் பற்றி எடுத்துக் கூறுவதில் இதய சுத்தி நிறைந்ததும் ஆக்க முறையிலுமான ஒரு செயல்முறை இல்லாதது நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளில் மிக முக்கியமானதாகும். நாட்டில் திட்டமிட்டுப் பணி

யாற்றல் என்பதுபற்றி எல்லா வகையினரின் கருத்துக்களையும் எடுத்துக் கூறுகின்ற ஓர் இலட்சியத்தைத் 'திட்டம்' கொண்டுள்ளதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இப்படிப் பட்டசெயல்கள் மூலம்தான், திட்டம் பற்றியும், அதனுடைய நோக்கங்கள், செயல்முறைகள், நுணுக்கங்கள் பற்றியும் நம்முடைய மக்களிடையே நாம் பரப்பமுடியும். திட்டத்தைச் செயல்படுத்தி வைப்பதில் மக்கள் காட்டுகின்ற உற்சாகம், இதயசுத்தியான நம்பிக்கை, ஆர்வம் இவற்றைப் பொறுத்தே திட்டத்தின் வெற்றி அமைந்துள்ளது. யாருக்காகத் திட்டம் தீட்டப்படுகிறதோ, அந்த மக்களைக் கலந்து, அணைத்துச் செல்லாத எந்தத் திட்டமும் வெற்றிபெற முடியாது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். நம்முடைய விவசாயத் துறையில் இன்று நவீன முறைகள் பல புகுத்தப்பட்டுள்ளன. தரமான விதைகள், இரசாயன உரத்தை உபயோகித்தல் போன்ற நவீன முறைகள் உள்ளன. இந்த விஞ்ஞான ரீதியான நவீன முறைகளை விவசாயத்தில் விவசாயி புகுத்தும் பொழுது, அவற்றைப் பற்றி அவன் பெறுகின்ற பயன்பற்றி அவனுக்கு நல்ல முறையில் எடுத்துச் சொல்லப் படாமலிருந்தால், அவற்றை அவன் தெரியாமலிருந்தால் எந்த நவீன முறைகளை விவசாயத்தில் புகுத்தினாலும் உருப்படியான பயன் கிடைக்காது. அதைப் போலத்தான், எல்லா வேலைத் திட்டங்களும். திட்டத்தைச் செயல்படுத்தி வைக்கும் பணியில் மக்களே ஈடுபட்டுப் பணியாற்றுகின்ற ஒரு நிலை தோற்றுவிக்கப் படவில்லையென்றால், நாம் போடுகின்ற திட்டங்கள் அத்தனையும் வெறும் காகிதங்களாகத்தான் இருக்கமுடியுமே தவிர உருப்படியான பயன் ஒன்றும் அவற்றில் ஏற்படாது.

ஜனநாயகம் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால், மிக அவசியமாக ஒன்று செய்யப்படல் வேண்டும். நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் முக்கியமான முடிவுகளை எடுக்கும் உயர்மட்டத்தில் உள்ளோரை, அவர்களுக்கு யார் வாக்களித்து உருவாக்கினார்களோ, அந்த மக்கள் சரியான முறையில் மதிப்பீடு செய்கின்ற ஒரு முறையை நாமே உருவாக்கவேண்டும். அதே சமயத்தில் திட்டங்களைத் தீட்டுவோர், மக்களின் எண்ணங்களை, இதய உணர்வுகளைப் புரிந்து கொண்டு — மக்களின் தேவைகள் என்ன என்பதை அறிந்து செயலாற்றுகின்ற வகையில் இருத்தல் வேண்டும். திட்டம் போடுவோர், மக்கள் ஆகிய இரு சாராரிடையே, இப்படிப்பட்ட நல்லுறவு நிலவுவது மக்களாட்சி வெற்றிபெற இன்றியமையாததாகும். திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதில் மக்களிடையே ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துகின்ற ஒரு திட்டத்தை உருவாக்குகின்ற இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதில் 'திட்டம்' போன்ற இதழானது அற்புதமான, ஆக்கரீதியான உறுதுணையாக அமையும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

"திட்டத்தின் முதல் இதழை வெளியிட என்னை அழைத்தமைக்காகத் திரு. குஜ்ரால் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்ப் பெருமக்களிடையே நல்லதோர் எழுச்சியுணர்வை உண்டாக்குவதிலும், தமிழ் மக்கள் திட்டப் பணிகளில் மேன்மேலும் பங்கேற்றுச் செயல்படுகின்ற ஒரு நிலையைத் தோற்றுவிப்பதிலும், 'திட்டம்' அருமையான முறையில் பணிபுரியும் என்பதில் எனக்குத் துளிகூட ஐயமில்லை.

['யோஜனா' ஆங்கில இதழின் தமிழ் வடிவமான "திட்டம்" முதல் இதழை வெளியிட்டுத் தமிழ்நாடு நிதியமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய உரை. சென்னை 2-8-69.]

———

சத்தூட்டத் திட்டத்திற்கு சத்தூட்டுவோம்

[பவானிசாகரில் நடந்த சத்தூட்டத் திட்டக் கருத்தரங்கப் பேச்சு --- 30-7-1969]

மாண்புமிகு மா. முத்துசாமி
உள்ளாட்சித் துறை அமைச்சர்

கடந்த 7 ஆண்டுகாலமாகச் செயற்பட்டுவரும் சத்தூட்டத் திட்டத்திற்குச் சத்தூட்டும் வகையில் என்னென்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமென்ற கருத்துக்கள் இம்மாமன்றத்திலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு நல்ல காரியத்தைத் தொடங்குவதானாலும் நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

''எண்ணித் துணிக கருமம்
துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு'' என்ற

வள்ளுவர் வாய்மொழிக்கேற்பப் பலமுறை எண்ணிப்பார்க்கவேண்டும்; அப்படி எண்ணிப் பார்த்தபின், பிறர்க்கு எடுத்துச் சொல்லவேண்டும்; எடுத்துச் சொல்லப்பட்ட கருத்தைப் பின்னர்ச் செயற்படுத்தவேண்டும். இம்மூன்று காரியங்களையும் சரியாகச் செய்தால்தான் நம் இலக்கினை நாம் எட்டிப் பிடிக்கமுடியும்.

நாம் எடுத்துக்கொண்டுள்ள எண்ணங்கள் உயர்ந்த எண்ணங்கள்தான். ''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற வள்ளுவர் வாக்குப்படி மிகவும் உயர்வாகத்தான் எண்ணியுள்ளார்கள். சொல்லவேண்டியவர்களிடம் நாம் சொல்லியும் இருக்கின்றோம். எண்ணமும் எண்ணத்தின் வழியாக வந்த சொல்லும், எவ்வளவு தூரம் செயலாற்றப்பட்டிருக்கின்றன என்பதைக் கணக்கிட்டுப் பார்ப்பதுதான் இக் கருத்தரங்கின் முக்கிய நோக்கம்.

இக் கருத்தரங்கின் அறிக்கைகளைக் காணுகின்ற நேரத்தில், எதிர்காலத்தில் நடைமுறையில் செய்யப்படவேண்டியவை பற்றிக் கூறியிருப்பதைக் காணுகின்ற நேரத்தில், நாம் இத் திட்டத்தினை இதுவரை எதிர்பார்த்த அளவுக்கு வெற்றிகரமாகச் செயற்படுத்தவில்லை என்பது தெளிவாகின்றது.

ஆக, நடைமுறையில் உள்ள இடர்ப்பாடுகள் என்ன என்பதை ஆராய்ந்து அந்த இடர்ப்பாடுகளைப் போக்குவதில் எந்த அளவு முயற்சித்து ஈடுபடவேண்டும் என்பது பற்றியும் இந்த இரண்டு நாட்களாகக் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு பல வேறு பிரச்னைகளைச் சொல்லியிருக்கின்றீர்கள். அவற்றில் பலவற்றிற்குக் கீழ் நிலையில் பணிபுரியும் ஊழியர்கள் முடிவுகாண வேண்டியிருக்கின்றது. சிலவற்றிற்கு மாநில அரசு பரிகாரம்

காண வேண்டியிருக்கிறது. மற்றும் சிலவற்றிற்கு அனைத்து நாட்டுக் குழந்தைகள் நிறுவனம் தீர்வுகாண வேண்டியிருக்கின்றது. ஆக இந்த மூன்றிலும் தொடர்புகள் ஒன்றுக்கொன்று அதிகமாகிக் காரியங்கள் நடைபெற்றால்தான் இத்திட்டத்தின் முக்கியத்துவம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறமுடியும்.

நம் குழந்தைகளின் எதிர்காலம் செழிப்பானதாக அமையவேண்டும் என்பதுபற்றி நம்மில் யாருக்கும் என்றும் கருத்து வேறுபாடு கிடையாது. இன்றைய நம் குழந்தைகள் நாளை நம் நாட்டை ஆளப்பிறந்தவர்கள். அந்த ஆளப்பிறந்தவர்கள் முறையாக வாழ வழிசெய்யவேண்டியது நம் பொறுப்பாகும்.

நம் குழந்தைகளின் உடலும், மூளையும் சரியாக இருந்தால்தான் அறிவைக் கிரகித்துக்கொள்ளக்கூடிய சக்தியை அவர்கள் பெற்றிருப்பர். மாணவரின் உடலும், உள்ளமும், மூளையும் சரியான வளர்ச்சி அடையாதபோது நாம் எவ்வளவுதான் சொல்லிக் கொடுத்தாலும் அது பயன்படாது.

பழைய காலத்தில் வாழ்ந்தவர்களின் வலிவோடு, நம்முடைய வலிமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மலைக்கும் மடுவுக்குமுள்ள அளவுக்கு வேறுபாடு தெரிகின்றது. கடந்த காலத்தில் 100 ஆண்டு வாழக்கூடியவர்கள் என்பது சாதாரணமான காரியம் என்ற நிலையிருந்தது. அவர்கள் பார்வைக்காகக்கூடக் கண்ணாடி அணிந்தார்களில்லை; கைத்தடி வைத்திருப்பவர்களாகவுமில்லை; தங்களுக்கேற்ற உணவைப் பெறக்கூடிய உழைப்பையும் பெற்றிருந்தார்கள்.

ஆனால், இங்கு இக்கூட்டத்தில் குழுமியிருப்பவர்களில் பாதிப்பேர் என்னையும் உள்ளடக்கிக் கூறுகின்றேன், 40 வயதிற்குட்பட்டவர்கள் கண்ணாடி அணிந்திருக்கின்றோம். சூழ்நிலையைப் பார்க்கின்றோம். அந்த அளவுக்கு நம் உடல்நலம் கெட்டுப் போயிருக்கின்றது. அதைக் காட்டிலும் நம்முடைய குழந்தைகளின் உடல்நலம் எண்ணிப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருக்கின்ற நிலையில் உள்ளது.

இதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள். அன்றைய உணவுப் பழக்கங்களை நாளுக்குநாள் மாற்றிக் கொண்டது முதற் குற்றம். அன்று சோளம், ராகி போன்ற கிராமப்புறத் தானியங்களை மனமுவந்து உண்டார்கள். அவற்றிலிருந்து ஊட்டச் சத்துக்கள் ஒழுங்காக அவர்களுக்குக் கிடைத்தன. நாகரிக உலகத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டு அரிசியிலிருக்கும் சத்தையும் நீக்கிவிட்டு வெண்மையாக உண்டால்தான் நாகரிகத்தின் சின்னம் என்று எண்ணுகின்ற நிலையில் இன்று நாம் இருக்கின்றோம்.

கைக்குத்தலரிசியை உண்ணுவதே கேவலம் என்று கருதுவதும், அதைச் சாப்பிட்டு ஜீரணிக்கமுடியாத நிலைமைக்கு நாடு போயிருப்பதும் கண்கூடாகத் தெரிகின்றது. அதே நேரத்தில் சப்பான் நாட்டில் எந்த ஓர் அரிசி ஆலையிலும், சத்துப்போகாத அளவுக்கு நெல்லை அறைவை செய்யுமாறு அவர்கள் அந்த ஆலைகளை அமைத்திருக்கிறார்கள். அதனையே சாப்பிடுகின்றார்கள். அதனைச் சாப்பிட்டு உலகிலேயே முதன்மையான இடம்பெற்று, உடல் வலிவிலும், பொருளாதாரத்திலும் முன்னேறும் காட்சியைப் பார்க்கின்றோம்.

ஆனால், நம் நாட்டில் நம் குழந்தைகளோ, இதற்கு முற்றிலும் வேறுபட்ட நிலையிலிருக்கிறார்கள். குழந்தைகள் வளரும்போதும், பள்ளிக்கூடத்திற்கு வரும்போதும், பின்னரும் வளர்ச்சியின்றித் தளர்ந்த நிலையில், மாறுபட்ட நிலையில் போய்க்கொண்டிருக்கின்றனர். மாணவருக்கு ஏற்படும் கதி இது. அந்த மாணவர்கள்தான் 20 அல்லது 25 ஆண்டுகளுக்குப் பின்னர் பெற்றோர்களாக மாறிவிடுகின்றனர். திருமணமான ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு குழந்தை ஒன்று என்று தவறாமல் நாட்டுக்கு ஈன்றுவரும் சிறப்பைப் பெற்றிருக்கின்றனர். ஆக அதன் விளைவாக வரும் குழந்தைகளும் சக்தியில்லாமற்போய், குழந்தைகளை ஈன்றெடுக்கும் தாயும் சக்தி இல்லாமற் போய் சமுதாயமே சீரழிந்துவரும் நிலையைக் கண்கூடாகக் காணுகின்றோம். இது நம் நாட்டின் சாபக்கேடான நிலை.

ஆகவே இவற்றையெல்லாம் மாற்ற இரண்டு வகைகளில் கவனம்

செலுத்தவேண்டும். ஒன்று, சத்துள்ள உணவைப் பெற்று உடல் நலத்தைப் பெருக்கவேண்டும். ஊட்டமிக்க உணவை உண்ணவேண்டும் என்ற உணர்வை ஊட்டவேண்டும். அவரவர்களே அந்த ஊட்ட உணவை உண்டாக்கிக்கொள்ளும் வழிவகைகளை அவர்களுக்குக் காட்ட வேண்டும். இரண்டாவது, எவ்வளவு தான் உணவைப் பெருக்கினாலும், அதன் தேவையை மிஞ்சுமளவுக்கு முன்னேறிவரும், நம்முடைய மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஒரு பக்கம் உணவைப் பெருக்க வேண்டும். மறுபக்கம் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டும். இவ்விரண்டு காரியமும் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட வேண்டும். அப்படியில்லாமல் நாமோ எதிர்த் திசையில் போய்க் கொண்டிருக்கிறோம். எதைப் பெருக்க வேண்டுமோ அதில் இன்னும் சரியாகக் கவனம் செலுத்தவில்லை. மக்கள் பெருக்கத்தைக் குறைத்து எதிர்காலம் தன்னிறைவு பெற்றுச் செழிக்க அதிகக் கவனம் செலுத்தவில்லை. இன்றைய நம் நாட்டில் மக்கள் பெருக்கம் வளர்ந்துகொண்டே போகின்றது. தற்போதைய புள்ளி விவரப்படி $1\frac{1}{2}$ விநாடிக்கு 1 குழந்தை என்ற வீதத்தில் குழந்தைகள் பிறந்த வண்ணமிருக்கின்றன. நாம் இங்கு பேசிய இந்த நேரத்தில் 50,000 புதிய குழந்தைகள் பிறந்துவிட்டிருக்கும். 1950இல் 36 கோடியாக இருந்த மக்கள் தொகை இன்று 53 கோடியாக உயர்ந்திருக்கிறது. இது உலகத்திலிருந்து சந்திரனில் கால் வைத்து அங்கிருந்த மண்ணையும் கல்லையும் அள்ளிக்கொண்டு வந்திருக்கும் அமெரிக்காக்காரர்களும் சாதிக்க முடியாத சாதிப்பாகும்; ஆளில்லாத கலத்தைச் சந்திரனுக்கு அனுப்பிய ரஷ்யாக்காரர்கள் சாதித்ததைவிடப் பெரியதாகும். நாம் அதிகமாகச் சாதித்திருப்பது குழந்தைகளைப் பெற்றிருப்பதுதான். தமிழகத்தில் குழந்தைச் செல்வம் மிகப் பெரிதாக மதிக்கப்படுகின்றது. ''குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' என்ற குறளைப் படித்தவர்கள் நாம். ''பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறு அல்ல பிற'' என்ற குறளுக்குச் சொந்தக்காரர்கள் நாம்.

குழந்தைகளை ஏராளமாகப் பெற்றெடுக்கிறோம்; தாராளமாகப் பெற்றெடுக்கிறோம்; குறைவின்றிப் பெற்றெடுக்கிறோம். பெற்றெடுத்த குழந்தைகளை அந்த அளவுக்கு வளர்க்கும் பொறுப்பு நம்மிடையே இருக்க வேண்டும். ஆயின் எதற்கும் சமாதானம் சொல்லிப் பழக்கப்பட்டவர்கள் நாம். மரம் வைத்தவன் தண்ணீர் விடமாட்டானா? ஆண்டவனிருக்கிறான் அவன் பார்த்துக் கொள்ளமாட்டானா? என்று சொல்லுகின்றோம். இன்று 6 குழந்தைகளுக்குச் சொந்தக்காரனைப் பார்த்து 'திருமாணமாகி 5 ஆண்டுகளில் 6 குழந்தைகள் இருக்கின்றனவே என்றால் எல்லாம் ஆண்டவன் அருள்' என்கிறான். ஆண்டொன்றுக்குப் பிள்ளையொன்று பெற்றெடுப்பது ஆண்டவன் கையிலா இருக்கின்றது? நம் கையில்தானிருக்கின்றது. தன் மேலுள்ள பாரத்தை நீக்க, அக்கம் பக்கத்தார் யார் மீதாவது பழியைச் சொன்னால் சண்டைக்கு வந்து அவன் வாதிட முடியும். ஆண்டவன் மேல் சொன்னால் அவனிடம் யாரும் போய் வாதிடமுடியாதல்லவா?

அதே ஆண்டவனின் அருளைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். சத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆண்டவனின் குழந்தைகளின் அறிவைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கிருக்கவேண்டும். 'அவனன்றி அணுவும் அசையாது' என்று கூறிக் கொள்கிறோம். குழந்தை ஏன் நோஞ்சானாக இருக்கிறான் என்றால் ஆண்டவன் அனுக்கிரகம் என்கிறான். ஆண்டுக்கு ஒரு குழந்தை என்று பெற்றெடுத்தால் அதற்கு ஆண்டவனா பொறுப்பு? ஆண்டுக்கொன்று என்று 3 குழந்தைகளைப் பெற்ற 20 வயது மங்கை 70 வயதை எட்டிப் பிடித்த நிலையில் காட்சி தருகிறாள். அதற்கும் நாம் சொல்லும் சமாதானம் ஆண்டவன்தான். அதற்கும் மேல் போனால் ''இன்றைக்கிருப்பவன் நாளைக்கிருப்பானோ என்பது சதமில்லை'' ''காயமே இது பொய்யடா, இது காற்றடைத்த பையடா'' என்று வேதாந்தம் பேசித் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறோம்.

[தொடரும்]

அமோக
விளைச்சலுக்
யூரியா
NEYVELI UREA
NITROGEN CONTENT
GROSS WT. 50 KG
இது ஓர்
நெய்வேலி
லிக்னைட்
கார்ப்பொரேஷன்
தயாரிப்பு
FDSNLC

தமிழ்ப் பண்பால் உயர்ந்தவர்

சி. வேங்கடசாமி. எம். ஏ.

காந்தி அண்ணலின் வாழ்க்கையே ஒரு தியாக காவியமாகும். அடிமை இருளில் அல்லற்பட்டு நின்ற இந்திய நாட்டு மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்த அறப்போர் வீரர் அவர்.

திருவள்ளுவர் வகுத்த வாழ்க்கை இலக்கணத்திற்குக் காந்தியடிகள் வாழ்வு ஓர் இலக்கியமாகத் திகழ்ந்தது. ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்ற நூலில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் இதை மிகவும் அழகாக விளக்கியுள்ளதைக் காணலாம்.

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'' என்ற

தமிழ்மறை மொழிக்கு உயர்ந்த சான்றாக, தலைசிறந்த சான்றோராகக் காந்தியடிகள் வாழ்ந்தார்.

திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு விழாவும், காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவும் இவ்வாண்டு ஒருங்கிணைந்து நடைபெறுவதும் தனிச் சிறப்புடைய நிகழ்ச்சியாகும்.

இந்த இருவரின் கொள்கைகளை மக்களிடையே பெரிதும் பரப்பி, புதிய சமுதாயத்தை உருவாக்க உழைத்தவர் அமரர் அண்ணா அவர்கள் ஆவார். அன்பின் உருவமாக நம்மிடையே வாழ்ந்த அண்ணா அவர்களின் மணிவிழாவும் இவ்வாண்டு சேர்ந்தது நம் மகிழ்ச்சிப் பெருக்கை மேலோங்கச் செய்தது.

''காந்தியடிகள் ஒரு தனி மனிதர் என்ற முறையில் கவனிக்கவேண்டியவர் அல்லர்''

''காந்தியடிகள் காலத்தின் சின்னம்''

''ஓர் எழுச்சியின் அடையாளம்''

''ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்''

''அவர் எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தார்'' —என்று அமரர் அண்ணா அவர்கள் புகழாரம் சூட்டினார்.

அப்புகழுக்குரிய காந்தியடிகள் தமிழ்ப் பண்பால் உயர்ந்ததில் வியப்பேது?

தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் பொதுநலத் தொண்டாற்றிய போது அவர் தொண்டுக்கெல்லாம் உறுதுணையாகவும் ஊன்றுகோலாகவும் நின்றவர்கள் தமிழ்ப் பெருங்குடி மக்கள் ஆவார்கள். குறிப்பாகத் தில்லையாடி வள்ளியம்மை, நாராயணசாமி, நாகப்பன் முதலியோர் அவர் தொடங்கிய அறப் போராட்டத்திற்குத் தம், உடல், பொருள், ஆவியைக் காணிக்கையாகச் செலுத்தினார்கள். தமிழ் மக்களின் தொண்டால் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் உள்ளம், தமிழ்மொழி நூல்கள் மீதும் குறிப்பாகத் தமிழ் மறையாகிய திருக்குறள்மீதும் மிகுந்த பற்றுக் கொண்டது. திருக்குறளைப் படித்து அதில் கண்ட அறநெறிகளை அவர் பெரிதும் போற்றினார்.

தமிழ்மொழியைக் கற்கவும் தொடங்கினார். தமிழில் கையெழுத்திடவும் முடிந்தது. இந்தக் குறிப்புகளை எல்லாம் அவர் எழுதிய வாழ்க்கை நூலான 'சத்திய சோதனை'யில் விளக்கியுள்ளார்.

தமிழ்நாட்டுக்குக் காந்தியடிகள் சுற்றுப்பயணம் செய்தபோது தமிழ் மக்களின் வாழ்விலே புதிய எழுச்சியை உண்டாக்கினார். அதுமட்டுமன்று; தமிழ்ப்பண்பாட்டின் எளிமை

காந்தியடிகளின் வாழ்விலேயே குறிப்பாக ஆடை அணிவதில் ஒரு புதிய திருப்பத்தையே ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் உழவர்களும் மற்ற ஏழை எளியோர்களும் அரை வேட்டித் துணியோடு இருப்பதை நேரில் கண்டபின் தான் அணிந்திருந்த தலைப்பாகை, நீண்ட அங்கி முதலிய வற்றைத் துறந்தார். இந்த எளிமையே அவரை உலகப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

காந்தியடிகள் தொடுத்த அறப் போரில் தோற்றோடிப்போன அந்நிய ஆதிக்கவாதிகள் எல்லாம் மனங் குமுறி அவரை வசைபாடும்பொழுது 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று குறிப்பிட்டனர். ஆயின் இச்சொற்றொடரே 'ஏழை பங்காளர்' என்பதை மெய்ப்பித்தது. பாமர மக்களின் உள்ளங்களில் எல்லாம் குடியேறினர் காந்தியடிகள்.

காந்தியடிகள் உடையை மாற்றிக் கொண்டதை நினைவு கூர்ந்திடும் வகையில், மதுரையில் செப்டெம்பர் திங்கள் 23ஆம் நாள் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் முன்னிலையில் 'காந்தியடிகள் உடை மாற்று'ச் சிறப்புவிழா நடைபெற்றது. மதுரை மாசி வீதியிலுள்ள கதர் கிராமக் கைத்தொழில் அலுவலகத்திலே தான் அவ்விழா நடைபெற்றது. இங்குதான் காந்தியண்ணல் உடையை மாற்றிக்கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

காந்தியடிகள் தென்னப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியவுடன் முதன் முதலாகத் தமிழ்நாட்டுக்கு வந்தவுடன் தன்னுடன் தியாகப் போராட்டத்தில் ஈடுபட்ட வள்ளியம்மாளின் ஊரான தில்லையாடிக்குச் சென்றார்.

காந்தியடிகள் நூற்றாண்டு விழா நினைவாகத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த செம்பனார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த தில்லையாடி கிராமத்தில் 'வள்ளியம்மை நகர்' அமைக்க, கிராம வளர்ச்சிச் சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

அண்ணல் காந்தியடிகளைத் தமிழ் மக்களின் தியாக உணர்வு கவர்ந்தது.

அவர் தமிழ் மறைக்குச் சான்றாக விளங்கினர்; தமிழ்ப் பண்பாட்டையும் எளிமையையும் விரும்பினர்.

தமிழ்ப் பண்பினால் உலகப் புகழின் உச்சிக்குச் சென்றார்; உலகம் போற்றும் உத்தமரானார்.

அண்ணல் நூற்றாண்டுவிழா நினைவாக உலகப் புகழுக்குரிய அப் பண்பை, நாட்டு மக்கள் அனைவரும் கடைப்பிடித்து 'உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவோமாக!'

அண்ணல் காந்தியடிகள்பற்றி ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்

காந்தியடிகள் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தார்; தம் சொந்த நாட்டினர் புரிந்த தீமைகளையும் எதிர்த்தார். எதிர்த்து ஆர்வ மிகுதியுடன் போராடினர் ஆயினும் அந்தப் போராட்டத்திற்கு நடுவிலே தம் கரங்களைத் தூய்மையாய் வைத்துக் கொண்டார். யாரிடமும் குரோதம் செய்யாமல், யாருக்கும் துரோகம் செய்யாமல், யாரையும் பகைக்காமல் அவர் போராடினர்.

சீரணி அரங்கம்

துவக்கம்: 21-8-1969 திறப்பு: 14-9-1969 தொலைபேசி எண்: 83123

பேரறிஞர் அண்ணு அவர்கள் 'சீரணி'யைத் துவக்கிய போது அனைத்துக் கட்சிகளின் உபயோகத்திற்கெனச் சென்னைக் கடற்கரையில் சிறப்பான பொதுமேடை ஒன்றை அமைக்க வேண்டுமெனச் சீரணியினரைக் கேட்டுக்கொண்டார்கள். அண்ணு அவர்களின் 61ஆம் பிறந்த நாள் நினைவாகச் சென்னை மண்டலச் சீரணியினரால் இப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. குறைந்தது 6 மாத காலமாவது ஆகும் என்று கருதப்படும் இவ்வேலையைச் சீரணித் தொண்டர்கள் 24 நாட்களில் செய்து முடித்துள்ளனர். 1800 சீரணித் தொண்டர்கள் பகலில் ஒரு பகுதியினரும் இரவில் ஒரு பகுதியினருமாகப் பிரிந்து இடையருது உழைத்தனர். மேடை 30 அடி நீளம் 18 அடி அகலமுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. மேடைக்குக் கீழே தலைவர்கள் இருக்க ஓர் அறையும், மின்சாரம், ஒலி பெருக்கி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த ஓர் அறையும் உள்ளன. மேடையின் இருபுறங்களிலும் படிகள் அமைக்கப் பட்டுள்ளன. தலைவர்கள் தங்கும் அறையிலிருந்து நேரே மேடைக்கு வருவதற்குச் சுழற்படியுள்ளது. மேடையின் முகப்பில் சீரணிச் சின்னமும், இரு புறங்களிலும் எவ்வெக் கட்சிக் கூட்டங்கள் நடைபெறுகின்றனவோ அவ்வக் கட்சித் தலைவர்களின் படங்களை மாட்ட வசதியும் செய்யப்பட்டுள்ளன. கடற்கரைப் பெருவழியிலிருந்து அரங்கம்வரை காரில் செல்லத் தக்கவாறு சாலை போடப்பட்டுள்ளது. அச்சாலையின் இரு புறங்களிலும் பக்கத்திற்குப் பத்தாக மின் குவி விளக்குகள் உள்ளன.

இவ்வரங்கைப் பராமரிக்கும் பொறுப்பைப் பொதுப் பணித்துறையினர் மேற்கொள்வர். அரங்கைப் பயன்படுத்த அனுமதிவேண்டுவோர் பொதுப்பணித் துறையினரை அணுக வேண்டும்.

சென்னை மண்டலச் சீரணி அலுவலகததின் முன்பு 14-9-1969 அன்று மாலை 5-30 மணிக்கு அண்ணா அவர்களின் சிலையினைத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்கள். விழாவுக்கு உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் தலைமையேற்றார்கள். சிலைக்கான செலவு அனைத்தையும் சீரணித் தொண்டர்களே ஏற்றனர்.

சிலையைத் திறந்து வைத்த முதலமைச்சர் அவர்கள், 'மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட 'சீரணி' நல்ல பல பணிகளைச் செய்து நாட்டோரின் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ளது. அண்ணா அவர்கள் சீரணியின் மூலம் என்னென்ன செய்யவேண்டுமென்று எண்ணினார்களோ அவற்றை மனத்தில்கொண்டு சீரணித் தொண்டர்கள் ஒவ்வொருவரும் செயற்படவேண்டும். அதன்மூலம் இந்த அமைப்பின் உயர்வை உலகுக்கு எடுத்துக்காட்டவேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

மேலே: சீரணியினர் சென்னை நகர வீதிகளைத் துப்புரவு செய்யும் பணியினை மாண்புமிகு முதலமைச்சரின் துணைவியார் தயாளு அம்மையார் துவக்கி வைத்தார்கள். இத் துப்புரவுப் பணி ஆகஸ்ட் 25 முதல் 30 முடிய நடைபெற்றது. ஏறத்தாழ 90 சாலைகளைச் செப்பனிட்டுத் துப்புரவு செய்தனர்.

கீழே: சீரணி அரங்கம் அமைக்கப் பணிபுரிந்த கல்லூரி மாணவர்களுடன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்களும் சேர்ந்து வேலை செய்தார்கள்.

தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் ஆருவது கூட்டம்
சென்னை இராசாசி மண்டபத்தில் செப்டெம்பர் 9, 10 நாட்களில் நடைபெற்றது;
கூட்டத் தொடரைத் துவக்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் உரையாற்றினர்கள்.

காந்தி அண்ணல்

மணவை ப. கீரன்

உள்ளத்தே ஊறுகிற உண்மையெனும் தேனமுதம்
தள்ளரிய ஆணை தரணியிலே ! — கொள்கையதை
வாழ்வினிலே கொண்டு வழுவாமல் ஆய்வதிலே
மூழ்கினரே காந்தி முனைந்து !

கொல்லாமை எல்லாமும் கும்பிடுதல் வள்ளுவரே
சொல்லிமிகப் போற்றியுளார் தோய்ந்தேதான் — நல்லார்
அறப்போரால் ஒன்றூர் அகம்நோகாப் பாங்கால்
சிறப்புற்றூர் காந்தியவர் சீர்த்து !

சேலத்தில் ஏர்பிடித்தோர் சீலை முழமாகச்
சாலத்தன் ஆடைவிட்ட சான்றோரே — சீலத்தால்
நாட்டோர்போல் கோலமுற்று நாடாளும் மன்றுற்றும்
மேட்டிமை மிக்கார் மிளிர்ந்து !

அப்பருழ வாரப் படையேபோல் அண்ணலவர்
எப்பொழுதும் கைராட்டை ஏற்றவராய் — ஒப்பற்றே
இந்தியர்கள் தம்கையைத் தாம்நம்பும் எண்ணத்தைத்
தந்துயர்ந்தார் தந்தை யவர் !

அரசியலில் ஆன்ற அறங்கொண்டு வாழ்ந்தே
நிரலான வாழ்வுற்ற நேயன் — மரபினிலே
புத்தொளியைக் காட்டும் புகழ்சமயச் சான்றோர்போல்
நித்திலமாய் நீள்வாரே நேர் !



அன்புள்ள சீரணி நண்பா,

பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட சீரணி நாடு முழுவதும் பரவி நல்ல பல பணிகள் ஆற்றி வருவதை நாடு அறியும். சென்ற திங்களில் குமரி மாவட்டத்தில் சிறப்பான பணிகள் சீரணித் தொண்டர் களால் செய்து முடிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து உள்ள படியே பூரிப்பும் பெருமையும் அடைந்தோம்.

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில்மட்டும் 12,000 ரூபாய் பெறுமானமுள்ள பள்ளிக் கட்டடத்தை 4,000

குமரி மாவட்டத்தில் சீரணிப் பணி

ரூபாய் செலவில் கட்டி முடித்திருக்கிறார்கள் என்றால், உள்ளபடியே சீரணித் தொண்டர்களின் பணி மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். இதேபோன்று, திருவட்டார் பகுதியில் தேமானூர் குளத்தைத் தூர் எடுக்கும் பணியில் ஈடுபட்டு 3,000 ரூபாய் பெறுமானமுள்ள பணியை ஆயிரம் ரூபாய் செலவில் செய்து முடித்திருக்கிறார்கள். மேலும், மேலப்புறம் பகுதியில் நெய்யாறு வாய்க்காலை யும், குருந்தென்கோட்டில் முகுந்தன் குளத்தையும் தூர் எடுக்கும் பணியிலும் குமரி மாவட்டச் சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதேபோன்ற பணிகள் உங்கள் பகுதியிலும் நிறைய உண்டு. ஆகவே, சீரணி கண்ட அண்ணா அவர்களின் நினைவாக அவர் நமக்கு விட்டுச் சென்ற இப்படிப்பட்ட இலட்சியப் பணிகளைப் பூர்த்தி செய்வது சீரணித் தொண்டர்களாகிய நம் கடமையாகும்.

அக்டோபர் திங்கள் 14க்குள் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் அண்ணாவின் பெயரில் ஒரு பள்ளிக் கட்டடம் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுப் பணிகள் நடந்து வருவதை நாம் எல்லோரும் அறிவோம். இப்பணி சிறப்பாக முடியச் சீரணித் தொண்டர்களின் இடைவிடாத உழைப்பும், ஆதரவும் மிகுந்த அளவில் தேவை என்று சொல்லத் தேவையில்லை. அண்ணாருக்கு நாம் செய்யும் காணிக்கை சீரணி என்ற அமைப்பு வலிவோடும், பொலிவோடும் விளங்க நம்மாலான எல்லா உதவிகளையும் செய்யவேண்டும் என்று உறுதி எடுத்துக்கொள்வதுதான். தென்ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் அப்பகுதியைச் சார்ந்த சீரணித் தொண்டர்கள் மூன்று பள்ளிக் கட்டடங்களைக் கட்டி முடித்திருக்கிறார்கள் என்று அறிந்து நாம் பெருமை அடைகிறோம். இதேபோன்று எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் தனிக் கவனம் செலுத்தி இதுபோன்ற சிறப்பான பணிகளைச் செய்ய வேண்டுகிறேன்.

அன்புள்ள
பரமசாமி
சீரணித் தனி அலுவலர்

கதர்த் திட்ட வளர்ச்சி - தமிழ்நாடு அரசின் சாதனைகள்

		1967—68	1968—69
1. நூல் உற்பத்தி :			
(i) கைராட்டை (சிட்டங்கள் எண்ணிக்கை)		88,43,691	113,63,536
(ii) அம்பர் ராட்டை ,,		93,19,298	125,70,111
2. கதர் உற்பத்தி :			
(i) பருத்தி மீட்டரில்		29,83,913	35,09,162
மதிப்பில் ரூ.		98,00,291	118,87,747
(ii) பட்டு மீட்டரில்		1,90,416	2 06 522
மதிப்பில் ரூ.		45,38 716	48,71,016
3. கதர் விற்பனை ரூ. :		208,56,853	214,43,507
4. வேலை வாய்ப்பு : (எண்ணிக்கை)	நூற்போர்	90,075	93,432
	நெய்வோர்	2,959	3,377
	ஏனையோர்	81	81
5. ஊதியம் பெற்ற தொகை ரூ.	நூற்போர்	41,55,350	52,34,208
	நெய்வோர்	28,53,847	40,45,954
	ஏனையோர்	65,123	75,125

கதர் வேலைத் திட்டம் சுமார் ஒரு லட்சம் நூற்பாளர்கள், நெசவாளர்கள், ஏனைய பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் நல்ல முன்னேற்றம் காட்டியுள்ளது. ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய்க்குமேல் தொழிலாளர்களுக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது. சென்ற இரண்டு ஆண்டுகளில் இவ்வரசு எடுத்துக்கொண்ட சிறப்பு முயற்சியின் காரணமாகத் தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின்போது கதர் விற்பனை குறிப்பிடத்தக்க அளவு பெருகியது. அவ்வமயம் கதர்த் துணி விற்பனைக்கு சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டது. 1967-68ஆண்டில் ரூ. 208·56 இலட்சம் மதிப்புள்ள கதர் துணி விற்கப்பட்டது. 1968-69இல் 214·43 இலட்சம் மதிப்புள்ள கதர்த் துணி விற்பனை செய்யப்பட்டது. கதர்த் துணியின் இருப்பு தேக்கமடையாமல் இருப்பதற்காக, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 167 விற்பனை நிலையங்களை இயக்கி வருகின்றது.

நீர் உயர
நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகுங் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC

PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம், எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி, யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS STATE SMALL INDUSTRIES CORPORATION LTD.

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்
35/2, உட்ஸ் ரோடு,
சென்னை-2.

தமிழ்நாட்டில் காந்தியடிகள்



காந்தியடிகள் தமிழ் நாட்டினிடத்தில் எப்போதும் ஒரு தனிப்பட்ட ஈடுபாடு கொண்டிருந்தார். இதனை அவரே பலமுறை குறிப்பிட்டும் இருக்கிறார். ''வள்ளியம்மாள், நாகப்பன், நாராயணசாமி ஆகியவர்களோடு சேர்ந்து பணிபுரியும் வாய்ப்பு எனக்குத் தென்னாப்பிரிக்காவில் கிடைத்தது. இப்படிப்பட்ட எண்ணற்ற தியாக வீரர்களை அளித்த தமிழகம், நாடு நம்மிடம் எதிர்பார்க்கும் தியாகங்களைக் கண்டு நிச்சயம் பின்வாங்காது'' என்று காந்தியடிகள் 6-4-1910இல் பம்பாயில் இருந்து தமிழகத்திற்கு அனுப்பிய செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். தமிழகமும் காந்தியடிகளின் கொள்கைக்கு மிகுந்த ஆதரவு திரட்டித் தந்து சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்றது. காந்தியடிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல முக்கியமான நிகழ்ச்சிகளும் தமிழ் மண்ணில் நடந்துள்ளன.

இவ்வாறு தமிழகத்திடம் தனிப்பற்றுக் கொண்டிருந்த காந்தியடிகள் பல முறை தமிழகத்திற்கு வந்திருக்கிறார். மொத்தம் பதினைந்து முறைகள் காந்தியடிகள் தமிழகம் வந்தார் என்று கூறப்படுகிறது. இங்கு அவருடைய முக்கியமான சில தமிழகப் பயணங்களை மட்டும் பார்ப்போம்.

தெ. இராமாநுசம்

காந்தியடிகள் முதன் முதலில் 1896ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். அப்போது அவர் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நல்வாழ்விற்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்தார். அதற்கு ஆதரவு திரட்டும் நோக்கத்துடன் சென்னை வந்தவர் அதில் வெற்றியும் கண்டார். இப்பயணத்தைப்பற்றிப் பின்னர் ''பாலசுந்தரம் நிகழ்ச்சி சென்னையில் நடந்த கூட்டத்தினரிடையே ஆழப் பதிந்து விட்டது'' என எழுதி இருக்கிறார்.

தென்னாப்பிரிக்காவிற்குச் சென்று குடியேறிய பாலசுந்தரம் என்ற தமிழர் கிழிந்த உடையுடனும் உடைந்த பற்களுடனும் இரத்தம் கசியும் வாயுடனும் தென்னாப்பிரிக்காவில் அப்போது வழக்கறிஞர் பணியாற்றி வந்த காந்தியிடம் ஒரு நாள் வந்து தன்னுடைய ஐரோப்பிய முதலாளியிடம் தான் பட்ட கொடுமைகளை விவரித்து உதவி கேட்டார். காந்திக்குத் தமிழ் புரியவில்லை என்றாலும் என்ன நடந்திருக்கிறது என்பது புரிந்தது. பரிந்து ஆவன செய்தார் காந்தி. காந்தியடிகள் குறிப்பிட்டது இந்நிகழ்ச்சியைத்தான்.

அதன் பிறகு 1915ஆம் ஆண்டு பாலசுந்தரம், வள்ளியம்மாள், நாகப்பன் ஆகியவர்களின் குடும்பங்களைப் பார்க்கத் தமிழ் நாட்டிற்கு வந்தார். காந்தியடிகள் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து இறங்கினர். இதைப்

பற்றி அசோசியேட்டட் பிரஸ் ஆப் இந்தியாவின் நிருபராக இருந்த ஏ.எஸ். அய்யங்கார் எழுதியிருப்பது: ''காந்தியடிகள் சென்னை வரவேண்டிய நாளன்று சென்ட்ரல் ஸ்டேஷனில் எள் விழ இடமின்றி மக்கள் எவ்வாறு குழுமி இருந்தனர் என்பது எனக்கு நினைவிருக்கிறது. இரயில் உள்ளே வந்ததும் காந்தியடிகளைக் காண ஆவலுடன் காத்திருந்த மக்கள் முதல் வகுப்புப் பெட்டிகளை நோக்கி ஓடினர். ஆனால் அப்படி ஒருவர் முதல் வகுப்பிலும் இல்லை, இரண்டாம் வகுப்பிலும் இல்லை! நானோ கூட்டத்தினரால் இரயிலின் பின்பகுதிக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தேன். எல்லோரும் காந்தி எங்கே இருக்கிறார் என்று தேடிக்கொண்டிருந்தார்கள். நானும் காந்தியை இதற்கு முன் பார்த்ததில்லை. இந்திய ஆலைத் துணியும் டர்பனும் அணிந்த மெல்லிய ஒருவரும் அவருடைய மனைவியும் மூன்றும் வகுப்புப் பெட்டியிலிருந்து மிகவும் நிதானமாக இறங்கினர். அவர் 'திரு. நடேசன் எங்கிருக்கிறார்?' என்று என்னிடம் கேட்டார். 'அவர் முதல் வகுப்புப் பெட்டிக்கருகில் காந்தியைத் தேடிக் கொண்டிருக்கிறார்' என்று பதிலளித்தேன். அவர் அதைக் கேட்டுச் சிரிக்கக்கூட இல்லை. பக்கத்தில் இருந்த வேறொரு குஜராத்திக்காரர் 'அவர்தான் காந்தி' என்று என்னை மெதுவாகக் கூப்பிட்டுச் சொன்னார். இச் செய்தி உடனே கூட்டத்தினருக்கு எட்டியது. எல்லோரும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து முட்டி மோதிக்கொண்டு காந்தியைக் காண ஓடி வந்தனர். பின்னர் அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வண்டியின் குதிரைகளை அவிழ்த்து விட்டுவிட்டுப் பொதுமக்களே அவ்வண்டியில் காந்தியையும் அவர் மனைவியையும் அமர்த்தி இழுத்துச் சென்றனர். காந்தி தம்பதி திரு. ஜி. நடேசன் வீட்டில் தங்கியிருந்தனர். இப்பயணத்தில் சென்னையில் அவர் ஒன்பது நாட்கள் தங்கி இருந்ததாகத் தெரிகிறது. சென்னையைத் தவிரக் கடலூர், தில்லையாடி, திருச்சி ஆகிய ஊர்களுக்கும் பயணம் செய்தார்.

அடுத்ததாக 1919ஆம் ஆண்டு அப்போது 'இந்து' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த திரு. கஸ்தூரி ரங்க அய்யங்காரின் அழைப்பின் பேரில் சென்னைக்குக் காந்தியடிகள் வந்தார். கதிட்ரல் சாலையில் 4ஆம் எண் இல்லத்தில் தங்கியிருந்ததால் அவ்விடத்தில் இப்போது நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. இப்பயணம் காந்தியடிகளின் வாழ்க்கையில் முக்கியதுவம் வாய்ந்ததாகும். காந்தியடிகள் அப்போது அமுலுக்கு வந்திருந்த ரவுலத் சட்டத்தை எதிர்க்க வகையறியாது தவித்துக் கொண்டிருந்த நேரம் அது. சென்னையில் தங்கியிருந்தபோது விடியற்கால நேரக் கனவில் அச் சட்டத்தை எதிர்க்கச் சத்தியாக்கிரகம் செய்யும் எண்ணம் அவருக்கு உதித்தது. திரு. இராஜகோபாலாச்சாரியை முதன்முதலாகக் காந்தியடிகள் சந்தித்ததும் இப்பயணத்தின் போதுதான்.

அதன் பிறகு இந்திய அரசியலில் தீவிரமாகப் பங்கு கொண்டபின் காந்தியடிகள் தமிழகம் வந்தார். ஏப்ரல் 9, 1920இல் சென்னை வந்த காந்தியடிகள் திலகர் கட்டத்தில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசும்போது நாட்டின் விடுதலைக்காகப் போராட இந்திய மக்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.

ஐந்தாவது முறை காந்தியடிகள் 1921ஆம் ஆண்டில் ஏறக்குறையத் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். தமிழ்நாட்டில் விவசாயப் பெருங்குடி மக்கள் அரை நிர்வாணக் கோலத்தில் இடுப்பில் கட்டிய ஒரே ஆடையுடன் வயலில் வேலை செய்வதைக் கண்டார். மனம் புழுங்கினார். இந்திய மக்கள் யாவருக்கும் உடுத்தப் போதிய ஆடை கிடைக்கும் வரை தாமும் அரை நிர்வாணக் கோலத்திலேயே இருப்பதென உறுதிகொண்டார். அன்றிலிருந்து 'அரை நிர்வாணப் பக்கிரி' கோலங் கொண்டார்.

பின்னர் 1925ஆம் ஆண்டு வைக்கம் போகும் வழியில் சென்னையில் ஒரு நாள் தங்கினார் காந்தியடிகள். தற்போதைய கேரள மாநிலத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரில் அரிசனங்கள் ஆலய நுழைவுப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

அதில் பங்குகொள்ளவே காந்தியடிகள் அங்குச் சென்றார். அப்போராட்டத்தைத் தமிழர் ஒருவர் பங்கு கொண்டு முன்னின்று நடத்துவது கண்டு பேருவகை கொண்டார். அவர்தான் வைக்கம் வீரர் என்று புகழ்பெற்ற தந்தை பெரியார் அவர்கள்.

பின்னர் 1927இல் சிலோன் சென்று திரும்பியபோது டாக்டர் அன்சாரி தலைமையில் நடந்த இந்திய தேசியக் காங்கிரசின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

காந்தியடிகளின் தமிழகப் பயணங்களிலேயே மிகவும் முக்கியமானது அரிசனங்களின் நலனுக்காக நிதி திரட்ட மேற்கொண்ட பயணமே. இரயில் மூலமாகவும் கார்மூலமாகவும் அவர் 18 நாட்கள் தமிழகமெங்கும் பயணம் செய்தார். சுமார் இரண்டாயிரம் மைல்களுக்கும் அதிகமாகச் சுற்றுப்பயணம் செய்தார். 112 ஊர்களுக்குச் சென்று வந்தார். அவர் 23-2-1934 முதல் 22-3-'34 வரை தமிழகத்தில் தங்கி இருந்தார். பதினெட்டு நாட்கள் ஓய்வின்றிச் சுற்றுப் பயணம் செய்த பின் கூனூரில் எட்டு நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டார். தமிழக மக்கள், அரிசன நிதிக்காகத் தங்கம், வெள்ளி, தக்களி, சர்க்கா, பேனாக்கள், வெள்ளிச் சாமான்கள், தங்க நகைகள் போன்ற எல்லாவிதமான பொருள்களையும் ஏராளமாக வழங்கினர். அதன் விளைவாகத் தமிழகத்தில் மட்டும் அந்த நிதிக்கு ரூ. 16,708·76 வசூலாயிற்று.

இப்பயணத்தின் போதுதான் காந்தியடிகள் குற்றாலம் அருவியில் நீராடச் சென்றார். ஆனால் அரிசனங்கள் அங்கு நீராட அனுமதிக்கப்படுவதில்லை என அறிந்து, 'அரிசனங்கள் எப்போது அங்கு நீராட அனுமதிக்கப்படுகின்றனரோ அப்போதுதான் நானும் அதில் குளிப்பேன்' என்று கூறிவிட்டு நீராடாமலேயே திரும்பி விட்டார்.

கடைசியாக 1946ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 12ஆம் நாள் தமிழகம் வந்தார். தமிழகத்தில் அரிசனங்களை ஆலயத்திற்குள் அனுமதிக்கும் ஆலய நுழைவு மசோதா 1946இல் சட்டமாக்கப் பட்டது. ஆனால் அதற்கு முன்பே மதுரை மீனாட்சியம்மன் கோயில், பழனியில் உள்ள பழனியாண்டவர் கோயில் ஆகிய கோயில்களில் அரிசனங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அது குறித்து மகிழ்சியடைந்த காந்தியடிகள் தாமும் அக்கோயில்களுக்குச் சென்று வந்தார்.

இவ்வாறு பலமுறை தமிழகம் வந்த காந்தியடிகள் ஒவ்வொருமுறையும் தமிழ் மக்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்ட விதத்தைக்கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார். ''தமிழகத்தில் எங்கு நான் சென்றாலும் தமிழ்நாட்டு மக்கள் என்னிடம் கொண்டுள்ள ஆழ்ந்த ஈடுபாட்டைத் தவிர நான் வேறெதுவும் காணவில்லை. அவர்கள் என்னுடைய திட்டங்களில் கொண்டிருக்கும் முழு நம்பிக்கையையே இது காட்டுகிறது'' என்று காந்தியடிகள் தம் தமிழக அனுபவம் பற்றிக் கூறியுள்ளார்.

இன்று காந்தியடிகள் நம்மிடையே இல்லையென்றாலும் அவருடைய அன்பைக் கவர்ந்த தமிழகம் அவருடைய அறிவுரைகளை மறக்காமல் கடைப்பிடித்து வருகிறது. ஆகையால் உள்ளபடியே காந்தியடிகள் மறைந்து விட்டாரா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டது போல, ''காந்தியடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிறார்; நம்முள் இருக்கிறார்; நம்முடன் கலந்துவிட்டார். என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மறைந்திடவில்லை. அவற்றை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திடவேண்டும்.''

காந்தியடிகளின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் நாம் அவருக்குச் செய்யும் உண்மையான தொண்டு அதுதான்.



குடும்ப ரகசியம்

"கலைமாமணி" ப. கண்ணன்

உறுப்பினர்கள்

1. முத்தையன் — ஊராட்சித் தண்டலர்
2. பாலசுந்தரம் — தெளிவற்ற முரடன்
3. சித்தலிங்கம் — தன்னலம் மிகுந்த செல்வர்
4. பொன்னன் — சித்தலிங்கத்தின் பணியாள்
5. மணிமாலை — முத்தையனின் நல்ல மனைவி
6. கோமதி — பாலசுந்தரத்தின் பொல்லாத மனைவி
7. பொற்கொடி — சிறுமி

மற்றும் சிலர்

காட்சி 4

இடம்: சித்தலிங்கம் வீடு.
காலம்: மாலை

[சித்தலிங்கமும் பொன்னனும் இருக்கின்றனர்]

சித்த: கடையிலேருக்கிற தேங்காயை எடுத்து வழியிலே இருக்கிற பிள்ளையாருக்கு ஒடைச்சானும், ஒரு ஓசி பக்தன்!

பொன்: அப்போதைக்குக் கையிலே காசு இருந்திருக்காது, எசமான்.

சித்த: அப்படின்னா, வெறுங் கும்பிடோட நிறுத்திக்கணும். பக்தனோட திருப்திக்காகக் கடைக்காரன் கையறுத்துக்குவானா?

பொன்: வேணும் எசமான். அடுத்த நாளு ஒண்ணுக்கு ரெண்டாத் திருப்பிக் கொடுத்தா இலாபந்தானே?

சித்த: அதுக்கு வக்குவகை இருந்தாத்தானே?

பொன்: சொத்து இருக்குதுங்க பாலுவுக்கு. சொந்தவீடு பத்தாயிரம் பெறுமே!

சித்த: டேய் பொன்னு! ஒனக்குச் சங்கதியே தெரியாது. அது பாகப் பிரிவினை ஆகாத வீடுடா! தம்பிக்காரன் ஒத்துக்குவானா?

பொன்: அவுருக்குப் பாகம் இருக்கு தில்லே? கொடுக்கற பணத்துக்குப் பாதுகாப்புத் தேடிக்குங்க; ஆனு, பணம் இல்லேன்னு மட்டும் சொல்லிடாதிங்க. மூத்தையன் சொன்னுனே; கேட்டீங்கல்ல? ஏமாந்த என் ரெத்தம் கொதிக்குது. அந்தத் திமிருக்கு ஒரு முடிவுகாலம் வரணும் எசமான்!

[அப்பொழுது பாலசுந்தரம் வருகிறுன், தூக்குப் பையில் ஏதோ பொருளுடன்]

விதவையோட பணத்தாலே பிரபுத்துவமடைஞ்ச, ஒங்க குடும்ப ரகசியம் எனக்குத் தெரியும்னுனே; எவ்வளவு கேவலம்! எப்படிப்பட்ட இழிவு! அதை நெனேச்சா இப்பவும்

சித்த: வாப்பா பாலு! வா! வா! என்ன பையிலே?

பால: கை முறுக்குன்னு ஒங்களுக்கு ரொம்பப் பிரியமாச்சே; ஸ்பெஷலா என் வீட்டுக்காரியை

சுடச்சொல்லி கொண்டாந் தேனுங்க. (கொடுக்க)

சித்த : (வாங்கிக்கொண்டு) ரொம்ப சந்தோஷம்! பாலுன்னு பாலு. தான்! எனக்கு என்ன பிடிக்கும் கிறது ஒனக்கு நல்லாத் தெரியுமே! ஆமா, இப்ப ஏன் இந்தப் பக்கம் வர்ரதேயில்லே?

பால : வராமெ என்னங்க! புள்ளை குட்டிங்க அதிகமாயி, குடும்பம் பெருத்துப் போச்சு. அதுகளுக்குக் கால்கஞ்சி, அரைக்கஞ்சியாவது ஊத்தணுமே; அதுக்காக ஒரு சின்னக் கடை வச்சுக் குந்திட்டேனுங்க. முன்னையபோல வர முடியலே, போக முடியலே.

பொன் : இருந்தாலும் ஒங்களுக்குப் பிரியமான கை முறுக்கை மறக்க முடியலே பாருங்க. பெண்டாட்டி கையாலே போடவச்சு, தன்னுடை கையாலே கொண்டாந்திருக்காரு, இதல்லவா நட்பு!

சித்த : எங்களோட நட்பு எண்ணெயும் தண்ணீரும் போலல்லடா; பாலும் நீரும்போல!

பொன் : ஆமா எசமான்! அவுரு பாலு, நீங்க நீரு. ஆஹா! என்ன பொருத்தம்!

சித்த : பாலு! ஒன்னுடை திறமைக்கு ஒரு ஓட்டல் வச்சிருந்தா நல்லாருக்குமே, ஒன் வீட்டுக்காரி பலகாரம் போட்டுக்குவா, நீ வியாபாரம் பண்ணிக்கலாமே!

பால : ஆமா! ஓட்டல் வைக்கப் பண வசதி வேணுங்களே!

சித்த : என்னைக் கேட்டா நான் கொடுக்க மாட்டேனு? எவ்வளவோ உதவியெல்லாம் எனக்கு செஞ்சிருக்கறயே! ஒரு அம்பது நூறு கடனு கொடுக்கக் கூடவா என்னுலே முடியாது?

பொன் : எசமான் மனசு வச்சா எந்தக் காரியத்தைத்தான் சாதிக்க முடியாது? நீங்க கேட்டிருக்கணும்.

பால : அது சரி பொன்னு! மற்ற காரியங்களிலே எப்படியிருந்தாலும், இது பணக் காரியமாச்சே! இதிலே...

சித்த : நான் கண்டிப்புத்தான். இல்லேன்னு சொல்லலே. எல்லாத்து கிட்டேயும் அப்படியே இருக்க முடியுமா?

பொன் : அதுதானே கேட்டேன். பெண்ணுன்னுலும், தாயும் தாரமும் ஒண்ணுக முடியுமா?

பால : ரொம்ப சரி, பலகாரக்கடை பெரிசா வைக்கணும்னுதான் நானும் விரும்பறேன். சாமான் சட்டெல்லாம் வாங்கணும். ஒரு ஆயிரம் ரூபா கடனு கொடுங்க.

சித்த : அதுக்கென்ன பாலு! கொடுக்கறேன், வாங்கிக்க, அவ்வளவுதானே?

பால : அவ்வளவு போதுமுங்க. பாண்டு பத்திரம் வேணுமானுலும் எழுதிக் கொடுக்கறேன்.

சித்த : அதெல்லாம் முறைப்படி செய்யத்தான் வேணும். பிரிவினையில்லாத குடும்பம்பாரு. அதனுலே வீட்டுமேலே குதவை எழுதி, ஒந்தம்பியும் கையொப்பம் போடணும். அந்தப் பொறுப்பு ஒன்னுடையது.

பால : அதுக்கென்னங்க; நான் வாங்கிக் கொடுக்கறேன். ஆனு ஒண்ணு!

சித்த : என்ன?

பால : என்னைக் கடன்காரனு பாவிக்காமெ எப்பவும் போல நண்பனுகவே பாவிக்கணும்.

சித்த : என்ன பாலு இப்படிச் சொல்லிட்டே? எப்பவும் என்னுடை அந்தரங்க நண்பனல்லவா நீ? அதை மறந்திடுவேனு? இன்னிக்கு என் வீட்டிலே ஒனக்கு விருந்து, வா சாப்பிடப் போவோம்.

[பாலசுந்தரம் வியந்து வாய் பிளந்து நிற்கிருன்]

பொன் : ஏன்? என்னடா எலி அம்மணத்தோட போவுதேன்னு பாக்கறீங்களா? வீட்லே அம்மா இல்லே; ஊருக்குப் போயிருக்காங்க.

பால: ஓ! அப்படியா சங்கதி? அதனாலேதான் இந்த விருந்து. ஆமா; சமையல் யாரு பொன்னு?

பொன்: ஒரு அருமையான புது வேலைக்காரி, வயது இருபத்தி ஏழு, கட்டான ஒடம்பு; மெட்டான அழகு!

பால: (சித்தலிங்கத்திடம்) என்னங்க இது? இன்பமான சேதியாத் தெரியுதே! பொன்னன் சொல்றது மெய்தானா?

சித்த: கண்ணுக்கு மெய்யா காட்டிப் போடறேன் வா பாலு! ஒனக்கில்லாத இன்பமா? ஒனக்கில்லாத விருந்தா?...

[பாலசுந்தரம் கையைப் பிடித்து அன்போடு இழுத்துச் செல்லுகிறார் சித்தலிங்கம்]

விவசாயிகள் மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதில் புதிய சலுகை

உணவு உற்பத்திக்காகப் பயன்படும் மின்சார மோட்டார்களுக்கான மின்சாரக் கட்டணம் தற்பொழுது ஒவ்வொரு மாதமும் கட்டவேண்டியுள்ளது. இது விவசாயிகளுக்குக் கடினமாக உள்ளது. எனவே இதை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அறுவடைக் காலத்தில், குறிப்பாகப் பிப்ரவரி ஆகஸ்ட் மாதங்களில் செலுத்த வசதி அளிக்க வேண்டுமென, செப்டெம்பர் 9, 10 தேதிகளில் நடைபெற்ற ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுவில் கோரிக்கை எழுப்பப்பட்டது.

இந்தக் கோரிக்கையை அரசு தீர்க்கமாகப் பரிசீலனைசெய்து கீழ்க்கண்ட முடிவினை அறிவித்துள்ளது:

‘ஆறு மாதங்களுக்கொருமுறை செலுத்துவது என்றிருந்தால் கட்டுவோருக்குப் பளு அதிகமாகும். மின் வாரியத்தின் பண வசதியும் குறையும். ஆயினும் 6 மாதத்திற்கு உண்டான கட்டணத்தை முன்கூட்டியே விவசாயிகள் கட்டுவார்களேயானால், அதற்குத் தடையொன்றுமில்லை. இதற்குக் கணக்கு வைத்துக் கொண்டு மாதாந்திரக் கட்டண வசதிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.’

இன்று கலப்பை...



நாளை ட்ராக்டர்?



உங்கள் நிலத்தில் பசுமை படர்ந்து
வளமை கொழிக்க பாங்க் ஆஃப்
பரோடா குறைந்த வட்டியில்
விசேஷ கடன்களை வழங்குகிறது.

BANK OF BARODA

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ—

பாங்க் ஆ:ப் பரோடா

தலைமைக் காரியாலயம் : மாண்ட்வி, பரோடா.
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்
400க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன

Shilpi 10A/69 TAM

வானொலியும் வளர் அறிவும்

அ. பெ. அழகிரிசாமி, பி.ஏ., பி.எல்.
துணை இயக்குநர்
கிராம வளர்ச்சித் துறை

சேலம் மாவட்டம். 1937 அல்லது 1938 என்று நினைக்கிறேன். அந்தி சாய்கிற நேரம் என்று சொல்லப்படுகிற பகலும் இரவும் சந்திக்கிற இடைவேளை; உடல் வருந்தி உழைத்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் உழவப் பெருமக்கள் தங்கள் கிராமக் கோயிலின் அரசமரத்து மேடையிலிருந்து வருகிற இனியகுரல் - காற்றினிலே வரும் கீதம் - கேட்டு மகிழ்வுற்று வியந்து நிற்கின்றனர்.

மதுவால் வரும் கேட்டை உணர்ந்து மதுவிலக்கை அமுலாக்க நினைத்த அன்றைய அரசாங்கம் - அதற்கு மாற்றாக மக்கள் மனமகிழ்வு பெற ஒரு வழி கண்டனர். அதன்படி, கிராமத்திற்கு ஒரு வானொலிப் பெட்டியைப் பொருத்தி, அதன் மூலம் மக்கள் விரும்பிக்கேட்கும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினர். மக்கள் மது அரக்கனின் பிடிப்பிலிருந்து விடுபெற்று, உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபட, 'வானொலி' ஒரு 'மாற்று' என்று எண்ணிய அரசு இப்புதிய ஏற்பாட்டைச் செய்தது.

அன்று சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் இன்று பரந்து விரிந்து, நீலத்திரை கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி எல்லையிலிருந்து வடக்கே மாலவன் குன்றம் வரை பரவிக்கிடக்கும் தமிழகத்தின் குக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும் தன் கிளை அமைப்பை நிறுவி நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகிற விவரங்களை, செய்திகளை, நுணுக்கங்களை, விலைவாசி நிலவரத்தை, நிலத்தின் அபிவிருத்தியை, விவசாயப் பசுமைப் புரட்சியை, மனிதன் சந்திர மண்டலத்தில் கண்டு தெளியும் சாதனையை, நாட்டு நடப்பை, வீரத்தை, தீரத்தை, விளையாட்டுத் தரத்தை, தொழில் நுணுக்கத்தை, திட்டங்களை, செயல்திறங்களை... இவை அனைத்தையும் பற்றி எடுத்தியம்புகிறது.

இவை அனைத்தும் மக்கள் வாழ்க்கையில் இணைந்து பின்னிப் பிணைந்து கிடக்கிற விவரங்களைப்பற்றிக் கல்வி புகட்டுவதேயாகும். இதன் தனித் தகுதி எதுவெனில் (Education through Recreation) களிப்பூட்டிக் கல்வி புகட்டுவதாகும். ''சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக் கோமாளி வந்தேனய்யா'' என்று கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஒரு பாட்டுப் பாடுகிறார். ''பாடிக் கொண்டே சுதந்திரம் பெறுவோம்'' என்று அன்று தென்னக விடுதலை வீரர், தீரர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் கூறினார். அதுபோலவே, வானொலியின் மூலம் பரப்பப்படுகிற கல்வி — வாழ்க்கைக் கல்வி; வாழ்க்கையை ஒட்டிய கல்வி; வாழ்க்கையின் மூலம் கல்வி; வாழ்க்கை முழுவதும் கல்வி— என்ற பெரிய வித்தில் முளைத்துக் கிளர்ந்து எழுந்து விசும்பை முட்டுகிற கல்வியாகும். அக்கல்வி, பாட்டின் மூலம், பரவசமூட்டும் நகைச்சுவை நிகழ்ச்சிகளின் மூலம், வானொலி மூலம் பரப்பப்படுகிறது.

அண்மையில் 7-7-69இல் அகில இந்திய வானொலியில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நிகழ்த்திய உரையில் அருமையான, கருத்துக் கருவூலமான, தமக்கே உரிய சிறந்த சிந்தனைச் செறிவுடன் ''வானொலி

மூலம் கல்வி'' பற்றி ஒரு விளக்கம் தந்தார்கள். அந்த ஒலிபரப்பில் அவர் கூறினார்:

''பள்ளியில் ஆசிரியர்முன் உள்ள ஒரே கற்பிக்கும் கருவி 'பிரம்பு' தான் என்ற பழைய நிலைமை மாறி, இந்த உலகத்தையே பள்ளிக்கூட வகுப்பிற்குள் கொண்டுவந்து நிறுத்தக்கூடிய அளவுக்குப் பலவிதமாகக் கற்பிக்கும் கருவிகள் ஆசிரியரின் பணிக்குப் பயன்படுகின்றன.''

''மணலில் விரல் தேயத் தேய அரிநமோத்து சிந்தம் என்று எழுதிய காலம் போய், புளியங்கொட்டை வைத்துக் கணக்குச் சொல்லிய காலமும் மெல்லமெல்லத் தேய்ந்து, இன்று டெலிவிஷன்மூலம் கல்வி கற்பிக்கும் முன்னேற்றம் உதயமாகிக்கொண்டு இருக்கிறது. அந்நிலையைத் தமிழ்நாடு அடைகின்ற வரையில் வானொலி வாயிலாகக் கல்வி பரப்பும் பணியை நாம் இடையே மறந்திடலாகாது; தொடரவேண்டும் அத்தூய தொண்டு.''

''கல்வி பற்றிப் பேசியபின், வள்ளுவர் கல்லாமை பற்றிக் கூறி விட்டுக் கேள்விபற்றிக் கூறுகிறார்... ''கற்றிலன் ஆயினும் கேட்க'' என்று. அன்று அவர் கூறிய மொழி, இன்று வானொலி இயக்கத்துக்கே அளித்த ஒரு பொன்மொழிபோலத் தோன்றுகிறது.'' கல்விமட்டும் போதாது கேள்வியும் முக்கியம் என்பதை இந்த உரைகள் எடுத்தியம்பக் காண்கிறோம்.

மக்களின் அன்றாடப் பிரச்னைகளுக்கு வழி கோலுவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டுமென்பது காந்தி அடிகளின் கருத்தாகும். அவர் ஆங்கிலத்தில் வெகு அருமையாகக் கூறினார். ''Education is not merely the three 'R's only. It lies in the opening of the minds of thousands of villagers to the real problems of life.'' எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பது உண்மையே. ஆலைகள், சாலைகள் திறப்பதைக் காட்டிலும் மேலான சேவை எதுவெனில் கோடிக்கணக்கான மக்களுக்கு அவர்களுடைய அன்றாடப் பிரச்னைகள் எவையென்பது பற்றி அவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காக அவர்களின் ''கண்ணைத் திறந்து'' விடுவதேயாகும் என்பது காந்தியடிகளின் தெளிந்த கருத்தாகும். இதைச் செயலில் நித்தம் நித்தம் செய்துவருகிற வாய்ப்பை வானொலி நிறுவனம் பெற்றிருக்கிறது.

கல்வி என்பது மூன்று வகைப்படும். முன்னர் எல்லாம் தக்க குருவிடம் முறையாகக் கற்றுக்கொள்வதே கல்வி எனக் கருதப்பட்டது. இப்பொழுது கல்வி பற்றிய கருத்துக்கள் வெகுவாக மாறி, முன்னேறியிருக்கின்றன. தக்க குருவிடம் முறையாகக் கல்வி பயிலுவது ஆசிரியர் தொடர்பிணைப்பு (Teacher-Oriented) என்று சொல்லப்படுகிற கல்வியாகும். அதாவது ஆசிரியர் முழுப்பங்கேற்கும் முறையாகும்.

இரண்டாவது முறை, கூட்டு முறையாகும். பட்டி மன்றங்கள் அல்லது கருத்தரங்குகள் அல்லது விவாத மேடைகள் என்ற வரிசையில் வருவன ஆகும். கேள்விகள் கேட்பதன் மூலமும், வினாக்கள் தொடுப்பதன் மூலமும், விடைகள் பகருவதன் வாயிலாகவும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் முறையாகும். இவையனைத்தையும் இக் காலத்தில் நாம் பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே 'பெரும்பாலோருக்குக் கல்வி' - 'Mass education' என்ற இன்பத்தை, நயத்தை, நலத்தை நுகரச் செய்ய இயலும்.

மூன்றாவது முறை கற்பவரே முழுப் பங்கு கொள்ளும் முறையாகும்! நூலகங்களில் தனியொருவர் சென்று அங்கு தானே புத்தகங்களைத் தேர்ந்து எடுத்து, குறிப்பிட்ட பொருள்பற்றிக் குறிப்பெடுத்து, தானே முயன்று கற்பதாகும். ஏகலைவன் துரோணரின் சிலையை முன்வைத்து வில்வித்தை கற்றதுபோல், வானொலி கேட்போர் குருவின் உருவின் பிம்பமாக வானொலிப் பெட்டியை முன்வைத்து, கேட்டு, உய்த்து, உணர்ந்து அறிவு பெறுவதாகும். இந்த வகையைச் சேர்ந்ததே கர்ண பரம்பரையாக மூதாதையர் மூலமாகக் கேட்டுக் கேட்டுக் கலையின் நுட்பங்களையும், இலக்கியத்தின் சாற்றையும், கவிதையின் நயத்தையும், இதிகாசங்களின் கோட்பாடுகளையும் தெளிவுபெறக் கேட்டுப் பயன்பெறுவதாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் இவை அனைத்தையும் திறம்பெறப் பயன்படுத்தியே அறியாமை எனும் ஆமையை ஆற்றாமை என்ற சேற்றிலே இருந்து அப்புறப்படுத்தியாக வேண்டும். இல்லையெனில் பாரதி அழுது புலம்பிய ''நெஞ்சு பொறுக்குதில்லையே'' என்ற நிலையை இன்னும் நீடிக்கச் செய்யமுடியுமே ஒழிய, ஓட்டி ஒழிக்க இயலாது.

இந்தியத் துணைக்கண்டத்தில் நூற்றுக்கு முப்பதுபேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் என்று கூறுகிறபோது நாம் மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கிறோம் என்பதனை மறுக்கவோ மறைக்கவோ இயலாது. பேனாவைக் கையில் பிடித்து, சனி மூலையில் எழுத ஆரம்பித்து ஆசாணி மூலையில் தம் கையெழுத்தைப் பத்து நிமிடங்கள் வரை மிகச் சிரமத்தோடு எழுதி முடிக்கும் அந்த ஆசாமியையும் சேர்த்தே ''முப்பது சதவிகிதம்'' என்று கணக்கிட்டுச் சொல்கிறோம்.

இத்தகைய எழுத்தறியாமை மண்டிக் கிடக்கும் தமிழ்நாட்டில் அறியாமையைப் போக்குவது என்பது எளிதன்று.

பாரதி பாடிய மாதிரி,

''வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்,
நகர்க ளெங்கும் பலப்பல பள்ளி''

என்ற முறையில் வீதிக்கு இரண்டு பள்ளிகள் கட்டுகிறவரை இந்த அறியாமையின்மீது போர் தொடுக்காமல் கைகட்டி வாளாயிருத்தல் இயலாது; கூடாது. அதற்கு வழி எது எனக்கேட்பின் எண்ணும் எழுத்தும் தெரியாவிட்டாலும் ''கேள்வி ஞானம் எனும் பொது அறிவுப் பெருக்கத்தையாவது உண்டு பண்ணுதலேயாம். இது கைவரக் கூடிய வழி எதுவோ, அதுவே வானொலி வழியாகும்.''

முன்பெல்லாம் ''கல்வியா? செல்வமா?'' என்றோ அல்லது ''சுழலும் வாளா? எழுதும் கோலா?'' எது வலிவுடையது? என்று விவாதம் எழுவது வழக்கம். தற்போது ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' என்ற ஆங்கிலத் தினத்தாளின் தலைமை ஆசிரியர் திரு. பிரேங் மொரேஸ் இன்னொரு விவாதத்தைச் சுவைபட விளக்கி எழுதி இருக்கிறார். விவாதம் வேறு சூழ்நிலையில் வேறு காரணத்திற்காக எழுந்தது எனினும், இங்கு இக் கட்டுரைக்கு மிகப் பொருந்தும் என்ற காரணத்தால் அஃதை இங்குக் குறிப்பிட்டு எடுத்தாளும் அவசியம் ஏற்பட்டது. விவாதத்தின் தலைப்பு ''ஏகபோக உரிமை பத்திரிகைக்கா - வானொலிக்கா?'' என்பதே ஆகும். இக்கட்டுரையில் அவர் வானொலிக்கு மக்கள் மேல் உள்ள பிடிப்பைச் சுட்டிக் காட்டுகிறார். அக்கட்டுரையின் சுருக்கத்தினைக் கீழே காணலாம்.

மக்களின் அபிப்பிராயங்களை உருவாக்கும் துறையைப் பொறுத்தவரை அகில இந்திய வானொலி மிகப் பெரும் ஏகபோக உரிமையைப் பெற்றிருக்கிறது. ஆங்கில, இந்திய மொழிகளில் வெளிவரும் தினத்தாட்களைப் படிப்பவர்கள் ஏறத்தாழ 70 இலட்சம். ஆனால் வானொலிச் செய்தியோ மக்கள் தொகையில் சுமார் 70 சதவிகிதத்தினரைக் கவர்ந்து நிற்கிறது. அதாவது 30 அல்லது 35 கோடி மக்களை அது கவர்கிறது. எனவே, பத்திரிகை படிப்பவர்களைப்போல் 40 மடங்கு பேர்கள் வானொலியைக் கேட்கிறார்கள். எனவே அதிக வலிவுள்ளது வானொலியேயாகும். இந்திய மக்கள் தொகையில் 70 சதவிகிதத்தினர் படிப்பில்லாதவர்கள். ஆனால் இவர்கள் அனைவரும் வானொலியில் கேட்டுப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. எனவே வானொலி, பத்திரிகையைக் காட்டிலும் மிகமிக வலிவுள்ள ஒரு சாதனமாகும்.

அனுமதி பெற்ற 1 கோடி வானொலிப் பெட்டிகளும், அடுத்து 5 இலட்சம் அனுமதி பெறாத வானொலிப் பெட்டிகளும் நாட்டில் இருக்கின்றன. இதுபோக அரசு ஏற்று நிறுவியுள்ள வானொலிப் பெட்டிகள் கிராமங்களில் சுமார் 14 இலட்சங்கள் இருக்கும். ஆகமொத்தம் $1\frac{1}{4}$ கோடி வானொலிப் பெட்டிகள் இருக்கின்றன...என்று வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு பெட்டியிலும் செய்தி, பாட்டுக் கேட்பவர்கள் இருபதின்பமர் என்று கணக்கிட்டால், மேற்கண்ட கணக்குப்படி 25 கோடிப்பேர்

களாவது வானொலி மூலம் அறிவு விளக்கம் பெறுகின்றனர்.

பத்திரிகைகள் படித்து விவரஞ் புரிந்து கொள்பவர்கள் 1 கோடி எனில் வானொலிமூலம் விளக்கம் பெறுபவர்கள் குறைந்தது 25 கோடி பேர்கள் ஆவர்''.

இவ்வாறு அக்கட்டுரையில் ஆசிரியர் புள்ளி விவரம் தருகிறார். இது தெரிந்துகொள்ளவேண்டிய புள்ளி விவரம். இதன் அடிப்படையில் பார்த்தால் ''கற்றலின் கேட்க'' என்ற அறிவுரை எத்தகைய ''அற்றம் காக்கும் கருவியாக'' அமைய வல்லது என்பது தெற்றெனத் தெரியும்.

ஆகையால் இத்தொண்டில் ஈடுபட்டிருக்கிற ஊழியர்களின் கடமை சாலச் சிறந்தது என்பதோடல்லாமல், மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒன்றும் ஆகும்.

எனவே வானொலிப் பராமரிப்பு நிறுவனத்தில் இருந்து பணியாற்றும் அலுவலர்களும், ஊர்நலப் பணியாளர்களும் ஆற்றவேண்டிய கடமை எது என மாயூரத்தில் ஊர்நலப் பணியாளர்களுக்கு வானொலிப்பெட்டி வழங்கும் விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் ஆற்றிய பேருரை தெள்ளிதின் விளக்கி நிற்கிறது. அமைச்சரவர்கள் ஆற்றிய உரைக் கடலில் கிடைத்த நல்முத்துக்கள் சில கீழே உள.

''நாள்தோறும் நடக்கின்ற உண்மைகளை, விவசாயிகளுக்குப் பயன்படும் நவீனமுறைகளை, அனுபவங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறும் முறையை வானொலி மன்றங்கள் இன்றைக்குச் செய்து வருகின்றன. இஸ்ரேல் நாட்டில் இதற்கென ஒரு படை ஏற்படுத்தப்பட்டு அது நாள்தோறும் இத்தகைய கருத்துக்களை மட்டுமல்லாமல், நாட்டின் பழம் பெருமைகளையும், பாரம்பரியங்களையும் எடுத்துக்கூறும் பெரும் பொறுப்பினை ஏற்றுத் திறம்பெற நடத்தி வருகின்றது. இலங்கையில் இதுபோன்ற இளைஞர் படைகள் செயல்பட்டு, தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி வருகின்றன. இங்கு வானொலி மூலம் இதுபோன்ற கருத்துக்கள் வேளாண்மைத் துறைக்கு உவந்து கூறப்பட்டு வருகின்ற முறையை விரிவுபடுத்தும் வகையில் ஊர் நலப்பணியாளர்களுக்கு இப்போது வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன.''

''வானொலிப் பெட்டிகள் இல்லாத ஊர்களில் ஊர்நலப் பணியாளர்கள் விவசாயச் செய்திகளை ஏந்திச் செல்லும் திருத்தொண்டர்களாக, தமிழ்நாடு அரசின் தூதுவர்களாகச்சென்று கிராம மக்களுக்குப் பயனுள்ள முறைகளை எடுத்துக்கூறி அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அவர்களோடு ஒன்றிப் பணியாற்றவேண்டும். மெழுகுவர்த்தி போன்ற தியாக உணர்வோடு பணியாற்ற வேண்டும்.''

மேற்கூறிய அறிவுரையை நாம் எல்லோரும் மனத்தில் கொண்டு, அமைச்சரவர்கள் இட்டபணியை இட்டமுடன் ஏற்று, தக்க பயனளிக்கும் வகையில் கடமையாற்றுவோம் என்று உறுதிகூறி உழைப்போமாக!

சீரணியின் நவம்பர் வெளியீடு

குழந்தைகள் மலராக

விளங்கும்

அண்ணாமலை அழகு

முல்லை சக்தி

ஒரு காலத்தில், கார்த்திகைத் தீபத்தினால் பெருமை பெற்றது திருவண்ணாமலை. அதன் பின்னர் வெள்ளையரை எதிர்த்து நடந்த வேள்விக் காலத்தில் - விடுதலைப் போராட்ட நேரத்தில் - காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான பெரிய அண்ணாமலை அவர்களால் திருவண்ணாமலை, தனது பெருமைகளைப் பறை சாற்றிக் கொண்டது. என்னுடைய வருங் கால வாரிசு என்று அன்றொரு நாள் தியாகி அண்ணாமலை அவர்களால் பாராட்டப்பட்ட திரு. ப.உ. சண்முகம் அவர்களால் இன்று திருவண்ணாமலை பெரும் புகழ் பெற்றிருக்கிறது. தான் பிறந்த ஊருக்குப் பெருமை சேர்த்த ஒரு சிலரில் திரு. ப.உ.ச.வும் ஒருவர்!

அவருடைய நீண்ட கால அரசியல் பணியில் இரவும், பகலும் போலவே, வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வந்திருக்கின்றன. என்றாலும் அவர் தலைமைக்குத் திருவண்ணாமலையில் தோல்வியே கிடைத்ததில்லை! தன்னிகரில்லாத் தலைவராகத்தான் இன்றையத் தினமும் அவர் திருவண்ணாமலையில் விளங்கிவருகிறார். மக்களும் அவர்தான் எங்கள் தலைவர் என்று உறுதியோடு அறுதியிட்டுக் கூறுகின்றனர்! இன்று அவர் அமைச்சரவையில் இடம்பெற்றதால் கிடைத்த புதிய புகழ் அன்று இது! அவர் அமைச்சராக இல்லாத காலத்திலேயே - ஏன் - எந்தப் பதவியும் அவர் வகிக்காத நேரத்திலேயும்கூட அவர் திருவண்ணாமலை மக்களின் உள்ளத்தில் நிரந்தரத் தலைவராகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார். மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக அவர் ஒளி வீசிக்கொண்டிருந்தார். புகழ்பெற்ற தலைவர்களைக் கொண்டே வெளியூர்களில் கழகக் கூட்டங்களைக் கழகத் தோழர்கள் நடத்தி வந்த காலத்தில், திருவண்ணாமலையில் ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு பகுதியில் கழகக் கூட்டங்கள் நடைபெறும். நண்பர் ப.உ.ச.மட்டுமே பேசுவார்! கூட்டம் நிரம்பி வழியும். அவருடைய ஆணித்தரமான-ஆவேசமான-சொற்பொழிவைக் கேட்டு மக்கள் எழுப்பிய ஆரவார ஒலி இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது! வாரந்தோறும் அவர் பேசினாலும் மக்கள் சலிக்காது அவருடைய பேச்சைக்



கேட்பார். இதைப் பலமுறை நான் நேரில் கண்டு வியந்துள்ளேன்.

'உள்ளூர்ச் சரக்குக்கு வெளியூரில் தான் கிராக்கி' என்று ஒரு பழமொழி உண்டு. நண்பர் ப.உ.ச. வைப் பொறுத்த வரையில் அவருக்கு உள்ளூரிலும் கிராக்கி; வெளியூரிலும் கிராக்கி. இத்தகைய பெருமை ஒரு சிலருக்குத்தான் கிடைக்கும். அந்த ஒரு சிலரில் ப.உ.ச. ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமில்லை!

இந்த உன்னதமான இடத்தைப் பிடிக்க அவர் மேற்கொண்ட உழைப்பு, செய்துள்ள தொண்டுகள் ஏராளம்! நாட்டின் வரவு செலவுகளை தான் அவர் ஆராய்ந்தாரே தவிரத் தன் குடும்ப வரவு செலவுகளை ஆராய்ந்ததில்லை! நாட்டு மக்களின் வாட்டத்தைப் போக்கத்தான் அவர் பட்டிதொட்டிகளிலெல்லாம் கழகக் கோட்பாடுகளை எடுத்துச் சொன்னாரே தவிரத் தன்னுடைய வாட்டத்தை அவர் பெரிதாகக் கொண்டதில்லை! மக்களின் நல்வாழ்விற்காகத்தான் அவர் தன் காலத்தைச் செலவிட்டாரே தவிரத் தன் குடும்ப வாழ்விற்காக அவர் ஒரு கணமும் செலவிட்டதில்லை என்பதை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவார்கள். முழுக்க முழுக்கத் தன்னை மக்கள் பணிக்கே அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். ஓயாத உழைப்பு - சாயாத கொள்கை - மாயாத திறமை-குன்றாத அறிவு-வற்றாத அன்பு - இத்தனையும் இணைந்த திரு. ப.உ.ச. அவர்களை, எங்கெங்கேயோ மறைந்திருக்கும் மகரந்தப் பொடிகளைத் தேடி எடுத்து அவற்றைச் தேனாக மாற்றும் தேனீக்களைப்போல, எங்கெங்கேயோ மறைந்திருக்கும் திறமைசாலிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களின் திறமையை - அறிவை மக்களுக்குப் பயன்படுத்தச் செய்வதில் வல்லவரான என் அன்புச் சகோதரர் மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், தன் அமைச்சரவையில் இடம்பெறச் செய்தது இயல்பேயன்றோ!

''எதையும் அவசரப்பட்டு ஒப்புக்கொள்ளமாட்டான்; ஒப்புக்கொண்டால் அதனை வெற்றிகரமாக முடிக்காமல் விடமாட்டான்'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் நண்பர் ப.உ.ச.வுக்குப் புகழாரம் சூட்டினார்கள்! அறிஞர் பெருந்தகையின் வார்த்தைக்கு வடிவமாகத்தான் நண்பர் ப.உ.ச. அவர்கள் தன் நீண்ட காலப் பொதுப்பணியை நடத்தி வருகிறார். அவர் தொட்டது துலங்காமல் இருந்ததில்லை!

1947ஆம் ஆண்டு அவர் திருவண்ணாமலை நகரசபையின் தலைவரானார். அப்போது அவருக்கு வயது இருபத்திமூன்றுதான்! இந்தச் சிறிய வயதில் அந்தப் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் யாருமில்லை! மிகக் குறுகிய காலம்தான் அவர் அந்தப் பதவியில் இருந்தார். ஆனால் அதற்குள் அவர் ஆற்றிய பணியோ அளவிடற்கரியது.

சிமெண்ட் ரோடும், தார் ரோடும் அவர் காலத்தில்தான் நகருக்கு முதன்முதலாகப் போடப்பட்டன! பெண்கள் ஆரம்பப் பாடசாலை உயர்நிலைப் பள்ளியாக மாறியதும், தாய்மார்களுக்கு இலவசப் பேறுகால விடுதி ஏற்பட்டதும் இவர் காலத்தில்தான்!

மறைந்த மகாத்மாவுக்கு இன்று நூற்றாண்டு கொண்டாடிச் சிலை எழுப்பிச் சிறப்பிக்கிறோம். ஆனால் 1952ஆம் ஆண்டிலேயே புகழ்பெற்ற சிற்பி இராய் சவுத்திரியால் உருவாக்கப்பட்ட காந்தி அடிகளின் சிலையை நகரின் மையமான இடத்தில் வைத்துச் சிறப்பித்த பெருமை நகர சபைத் தலைவர் ப.உ.ச.வுக்கே உண்டு!

ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்காக, 'கல்லறை' என்ற நாடகம் எழுதி நடித்து அந்தக் காலத்தில் ஐந்தாயிரம் ரூபாய் வசூலித்துக் கட்டடம் கட்டியதும் அந்த இருபத்திமூன்று வயதுத் தலைவரான ப.உ.ச.தான்!

மூன்றாம்நிலை நகரசபையாக இருந்ததை மாற்றி இரண்டாம் நிலை நகர சபையாக்கியதும் இந்த இளைஞர் தான்!

திருவண்ணாமலையின் ஒவ்வொரு மூலையும் முடுக்கும் நண்பர் சண்முகத்தின் பெருமைகளைப் பாடிக்கொண்டிருக்கிறது!

இந்த அரிய பெரிய காரியங்களை

மிக இளம் வயதில் - மிகக் குறுகிய காலத்தில் அவர் திறம்பட முடித்ததைக் கண்டு அன்று கவர்னர்-ஜெனரலாக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ''இந்த நகர சபையைப்போல் ஒழுங்காக நடந்து வரும் மற்றொரு நகரசபையைக் காண்பது அரிது. திறமையோடு இதனை நடத்திவரும் தலைவரை நான் பெரிதும் பாராட்டுகிறேன்'' என்று புகழாரம் சூட்டினார். அவருடைய நிர்வாகத் திறமைக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு!

1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தன்னை அடுத்தவரைவிட 16000 வாக்குகள் அதிகம் பெற்றுச் சென்னை சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழகத்திலேயே அதிக வாக்குகள் வேறுபாட்டில் வெற்றி பெற்றவர் இவர் ஒருவர்தான்!

சட்டமன்றத்தில் அவர் ஆற்றிய பணிகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை யாகும். புள்ளி விவரங்களால்-அடுக்கடுக்கான வாதங்களால் - உணர்ச்சி மிக்க வார்த்தைகளால் அவர் 'ஆளுங் கட்சியைத் திணறடித்தார்!

''நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுகிறோம், கட்டுகிறோம் என்கிறீர்கள். அந்தப் புலி எப்போது வரும்? அது சீறுமா? பாயுமா? அல்லது சினிமாவில் வரும் புலியைப்போல இருக்குமா?'' என்று ஒருமுறை சட்ட மன்றத்தில் அவர் பேசும்போது குறிப்பிட்டார்.

அதற்கு மாண்புமிகு பக்தவச்சலம் அவர்கள் ''அது பசுத் தோல் போர்த்திய புலியாக இருக்கும்'' என்றார்.

உடனே ப.உ.ச. அவர்கள் 'அது நாட்டுக்குத் தேவை இல்லை' என்று பளீரென்று பதில் அளித்தார்!

தவறுகளை மிகத் தைரியமாகச் சட்டமன்றத்தில் கண்டிப்பதில் அவர் என்றுமே தயங்கியதில்லை.

இவருடைய ஆணித்தரமான வாதத்தை, புள்ளி விவரங்களோடு பேசும் ஆற்றலைக்கண்டு அன்றையத் தினம் அமைச்சராக இருந்த திரு. சுப்ரமணியம் அவர்கள் 'சண்முகம் விஷயத்தை நன்கு புரிந்துகொண்டு பேசுபவர்' என்று பாராட்டினார்.

இத்தகைய குணக்குன்றை, கொள்கைத் தங்கத்தை 1962ஆம் ஆண்டில் மீண்டும் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்கத் தவறிவிட்டது திருவண்ணாமலைத் தொகுதி! அந்தத் தேர்தலில் 'தங்கத்தை நான் உங்களிடம் தந்திருக்கிறேன். மீண்டும் தங்கத்தை என்னிடம் தாருங்கள்' என்று அண்ணா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் பணபலம் - அதிகார பலம் ஆகியவற்றினால் திரு. ப.உ.ச. அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்.

வெற்றி கண்ட காங்கிரஸ் உறுப்பினர் அகால மரணம் அடைந்ததால், மீண்டும் அங்கு உபதேர்தல் நடைபெற்றது. திரு. காமராஜ் முதற்கொண்டு எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும் திருவண்ணாமலையில் முகாமிட்டு, ப.உ.ச.வைத் தோற்கடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் மக்கள் பெரும் வெற்றியை அவருக்குத் தேடித்தந்தனர்! தங்கம் மீண்டும் சட்டமன்றத்தில் அமர்ந்தது! முதன் முதலாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இடைத் தேர்தலில் வெற்றி பெற்றது திருவண்ணாமலையில்தான்!

1967ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் அவர் தோல்வி அடைந்தார். ஆசிரியர் தொகுதியில் போட்டியிட்டு மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் அமைச்சரானார்! திரு. ப.உ.ச.வைப் பொறுத்த வரையில் அவர் தோல்விகளில் வெற்றி கண்டவர்!

அமைச்சராகப் பதவி ஏற்ற இந்தக் குறுகிய காலத்தில் உணவுத் துறையிலும், கால்நடைத் துறையிலும் அவர் எடுத்துள்ள புரட்சிகரமான திட்டங்கள் மக்களின் பாராட்டுதலைப் பெற்றிருக்கின்றன!

இத்தகைய புகழ் பெற்ற திரு. ப.உ.ச. அவர்கள் அரசியலில் கால் எடுத்து வைத்தது 1947ஆம் ஆண்டில் தான். என்னை அரசியலில் புகுத்தியவன் என் தம்பிதான் என்று பெருமையாக அவர் குறிப்பிடுவார்! அரசியல் வாழ்வில் அவருடைய குடும்பம் அவருக்கு மிகவும் உறு துணையாக நின்றது!

1949இல் அறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரிடம் இருந்து பிரிந்து

தி.மு. கழகம் துவக்கியபோது, ப.உ.ச.வும் அண்ணாவின் தொண்டரானார்! அண்ணனின் அன்புக்குப் பாத்திரரானார். அண்ணனின் தங்கத் தம்பியானார்! தி.மு.க. தலைவர்களில் ஒருவரானார்.

தி.மு. கழகம் நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் அவர் கலந்து கொண்டார்.

இரயில் நிறுத்தப் போராட்டம் - இந்தி எதிர்ப்புப் போராட்டம்- நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டிய போராட்டம் ஆகியவற்றில் பங்கேற்று, இன்முகத்துடன் சிறைவாசம் ஏற்றார்!

விலைவாசிப் போராட்டத்தில் அவருக்கு மூன்று மாதம் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது! வேலூர்ச் சிறைச்சாலையில் அறிஞர் அண்ணாவுடன் இருக்கும் பேறு அவருக்குக் கிடைத்தது!

வேலூர்ச் சிறைச்சாலையில் அறிஞர் அண்ணாவுடன் அவர் கழித்த நாட்களைப்பற்றி ''அண்ணாவுடன் அறுபத்திரண்டு நாட்கள்'' என்ற ஒரு புத்தகத்தை எழுதினார். சிறைச்சாலையில் நடைபெற்ற சுவையான சம்பவங்களையும் அறிஞர் பெருந்தகை அவ்வப்போது தெரிவித்த அரசியல் கருத்துக்களையும் திரட்டி இந்நூலில் அவர் தந்துள்ளார்.

திரு. ப.உ.ச. அவர்கள் ஒரு நல்ல பேச்சாளர் மட்டுமன்று; அவர் நல்ல எழுத்தாளருங்கூட. முரசொலியிலும், முத்தாரத்திலும் அவர் எழுதிய சிறு கதைகள் அவருடைய எழுத்துவன்மைக்கு நல்ல எடுத்துக் காட்டுக்கள்! சரளமான நடையில் சீரான கருத்துக்களைத் தீட்டுவதில் அவர் வல்லவர்!

திரு. ப.உ.ச.வின் குடும்பம் ஓர் இனிமையான காவியம். இதயத்தில் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கு ஏற்ப அவர் தன் குடும்பத்தை அமைத்துக் கொண்டவர். ஆம்! அவர் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். பல இன்னல்கள் - தொல்லைகளுக்கிடையே அவர் கலப்புத் திருமணம் செய்து கொண்டு மற்றவர்களுக்கு வழி காட்டியானார்! அவருக்கு மக்களாக ஆசைக்கு ஒரு பெண்ணும், ஆளுகைக்கு ஓர் ஆணும் இருக்கிறார்கள்!

காலஞ்சென்ற அவருடைய அன்னையார் திருமதி இராதாபாய் அம்மையார் அவர்களும், தந்தையார் திரு. உத்தண்டி அவர்களும் திரு. ப.உ.ச.வின் அரசியல் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்தனர். அவருடைய இளவல்களும் அவருக்குப் பக்கபலமாக இருந்து அவர் அரசியல் வானில் ஒளிவீசித் திகழ வழி வகுத்துத் தந்தனர்!

திரு. ப.உ.ச. அவர்கள் இனிமையான சுபாவம் கொண்டவர். 1947 ஆம் ஆண்டுதான் அவரை நான் முதன் முதலாகச் சந்தித்தேன். அப்போது அவர் திருவண்ணாமலை நகரசபையின் தலைவர். அவர் நடத்திய தி.க.மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர். அந்த மாநாட்டில் தான் அவரைச் சந்தித்தேன். அடுத்த சந்திப்பு எனக்கு ஒரு நல்ல நண்பரை, இல்லை, ஒரு சகோதரரை எனக்கு அளித்தது!

அன்று நான் திரு. ப.உ.ச.விடம் கண்ட அதே ஆர்வம்-அதே துடிப்பு - அதே இளமை - கலகலவென்று பேசும் அதே சுபாவத்தைத்தான் இன்றும் காண்கிறேன்.

இந்த அருங் குணங்கள்தான் அவருக்கு நல்ல வெற்றி ஆரங்களைச்சூட்டியிருக்கின்றன! இனியும் பல வெற்றி மாலைகளை அவருக்குச் சூட்டும் என்பதில் எனக்கு ஐயமில்லை!

அண்ணாமலையில் தோன்றி இன்று ஆட்சிப் பொறுப்பிலுள்ள அவர் நாட்டுக்கு 'அமுது' படைக்கும் அரிய பணியை மேற்கொண்டுள்ளார்!

திருவண்ணாமலை தந்த தீபம் இன்று நாடெங்கும் தன் ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. அந்த ஒளி நாளுக்கு நாள் மேன்மேலும் சுடர் விட்டுச் சிறக்கும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை! வாழ்க அவர்! வளர்க அவர் புகழ்!

அண்ணலின் அடிச்சுவட்டில்

தமிழ்நாடு

‘ நஜன் ’

தொழில் கருதித் தென்னுப்பிரிக்கா வுக்குச் சென்ற காந்தியடிகளைத் தேசப் பணியில் ஈடுபடுத்தியது தென்னுப்பிரிக்காவில் இருந்த தமிழர் களின் வீரமும் தியாகமுமே. இது பற்றி அவர் குறிப்பிட்டதாவது :

‘‘தென்னுப்பிரிக்க அறப்போரில் தமிழர்கள் மேற்கொண்ட பங்குக்கு ஈடுஇணையாக வேறு எந்த இந்தியரை யும் குறிப்பிட முடியாது. அதனல் தான் தமிழை நன்கு கற்றுத் தமிழர் களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும் என்று என் மனம் விரும்புகிறது. சென்ற ஒரு மாத மாகவே அம்மொழியைக் கற்று வரு கிறேன். எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து அம்மொழியைப் பயில் கிறேனே அவ்வளவுக்கவ்வளவு அம் மொழியின் அழகை உணருகிறேன்.’’

தென்னுப்பிரிக்காவிலிருந்து தாய் நாட்டிற்குத் திரும்பியதும் அவர் முதல் வேலையாகத் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார். ஒவ்வொருதடவை தமிழ்நாட்டிற்கு வந்தபோதும் அவ ருக்குப் புதுப்புதுக் கருத்துகள் தோன்றின என்பதை அவரே குறிப் பிட்டிருக்கிருர். அவரை ‘‘அரை நிர்வாணப் பக்கிரி’’ யாக்கியதும் தமிழ்நாடுதான்.

தமிழர்களும் அவர் ஆரம்பித்த ஒவ்வோர் இயக்கத்திற்கும் முழு ஒத்துழைப்பை அளிக்கத் தயங்கிய தில்லை. நாடு விடுதலை பெறவேண்டும் என்பது அவருடைய முக்கியக் குறிக் கோளாக இருந்தும் சமூகப் பொரு ளாதாரத் துறையில் மக்கள் தலை சிறந்து விளங்கவேண்டும் என்று தன் 14 அம்ச நிர்மாணத் திட்டங்களை வகுத்தார். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு இந்த நிர் மாணத் திட்டங்களைச் செயல்படுத்து வதில் முன்னணியில் இருந்திருக் கிறது என்பது பெருமைப்பட வேண் டியதாகும்.

மக்கள் எழுதப் படிக்கத் தெரியா மல் தற்குறிகளாக இருப்பதும், கள் குடித்து நெறிதவறி நடந்து நடைப் பிணங்களாக இருப்பதும், தீண்டா தவர் என்று ஒரு பகுதியினரை ஒதுக்கி வைத்து அவர்கள் உழைப்பை மட்டும் பயன்படுத்துவதும், வறுமையில் மக் கள் உழல்வதும், கிராமங்கள் சீர ழிந்து கிடப்பதும் காந்தியடிகளின் மனத்தை வேதனைக்குள்ளாக்கின. இந்தக் குறைகளை எல்லாம் தீர்க்கும் வகையிலேயே அவர்தம் நிர்மாணத் திட்டங்களை வகுத்தார். மக்கள் வாழ்வு சீர்படாத நிலையில் நாட்டிற் குச் சுதந்திரம் கிடைத்தும் பலன் இல்லை என்பதை அவர் அறிந்தார்.

மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு இந்தத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் அதிக ஊக்கம் காட்டியதுடன் முன்னேடி யாகவும் இருந்தது.

கல்வி : எல்லோருமே எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

அத்துடன் மட்டுமின்றிச் சிறு வய திலேயே ஒவ்வொருவரும் ஒரு தொழிலையும் பயிலவேண்டும். இத் தகைய கல்வியை ஊட்ட ஆதாரக் கல்விப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட் டன. அரியநாயகம், ஆஷாதேவி, தக்கர்பாபா, ஜாகீர்உசேன் ஆகி யோர் இக் கல்வியைப் பரப்பப் பெரிதும் பாடுபட்டவர்கள். தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட காந்தி ஆசிரமங்கள் இக்கல்வியைப் பரப்பு வதில் மிகவும் ஊக்கம் காட்டின. இத்தகைய ஆசிரமங்களில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது இராம நாதபுரம் மாவட்டத்திலுள்ள சிரு வயல் என்ற கிராமத்திலுள்ள காந்தி ஆசிரமம்தான். இதை ஆரம்பித்து நடத்தியவர் திரு ப. ஜீவானந்தம். கல்வி கற்கும் குழந்தைகளுக்கு மதிய உணவு தரவேண்டும் என்கிற யோசனையை வெற்றிகரமாகச் செயல்படுத்தியது தமிழ்நாடே.

இலவசக் கல்வி அளிக்கப்படவேண் டும் என்பது காந்தியடிகளின் குறிக் கோள். தமிழ்நாடு அரசு ஒருபடி மேலேயே சென்று புகுமுக வகுப்பு (பி.யூ.சி.) வரையில் இலவசக் கல்வியை வழங்கியுள்ளது.

உணவு ! உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்; உழவர்களுக்குப் பல வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்று மகாத்மா வற்புறுத்திவந்தார். தமிழ்நாட்டில் வாழை, தென்னை, பலா முதலியவை ஏராளமாக இருக்கும்போது அரிசியை மட்டும் நம்பிக்கொண்டிருக்கலாமா என்று காந்தியடிகள் தமிழக மக்களைக் குறித்து எழுதியிருந்தார். இவற்றை மனத்தில் கொண்டு தமிழ்நாடு எடுத் துள்ள நடவடிக்கைகளாவன :

1. புன்செய்ப் பயிர் நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக் கப்பட்டது.
2. ஒரு போகம் மட்டுமே விளை விக்கப்பட்டு வந்த பெரும் பரப்புள்ள பயிர் நிலங்களை இருபோகச்சாகுபடிக்குக் கொண்டு வந்து உணவு உற் பத்தியைப் பெருக்கியது.
3. நிலமில்லாத இலட்சக்கணக் கானவர்களுக்குப் பட்டா நிலங்கள் வழங்குவது.
4. அரிசிக்குப் பதில் கோது மையை உபயோகிக்கச் செய்த துடன் கோதுமை விளைகின்ற இடத்திலேயுள்ள விலையைக் காட்டிலும் கிலோவுக்குப் பத்து காசு குறைவாகவே தமிழகத்தில் கோதுமையை விற்பனை செய்து வருகிறது.

இந்த நடவடிக்கைகளின் காரண மாக வறட்சிநிலை ஏற்பட்டிருந்தும் உணவு உற்பத்தி பாதிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடவேண்டிய தாகும்.

கதர் - கைத்தொழில்: கிராமங்களி லுள்ள வறுமையை நீக்கக்கூடிய ஒரே சாதனம் கைராட்டை என்பது அடிகளின் அசைக்க முடியாத எண்ணம். இதை முழுவதும் முன்ன தாகச் செயல்படுத்தியது தமிழ் நாடே. இதன்மூலம் உடை வகை யில் தன்னிறைவு ஏற்பட்டது மட்டுமின்றி ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்தது. நாடு விடுதலையடைவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னரேயே கதர், கைத்தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு பெரும் திட்டமிட்டது. ஒரு தனித் துறை யையே 1956இல் ஏற்படுத்தியது. வேறு எந்த மாநிலமும் கதர் வளர்ச்சிக்கான கருத்தில் இத்தனை அக்கறை காட்டியது கிடையாது.

தீண்டாமை ஒழிப்பு: தன் நிர்மாணத் திட்டங்களிலேயே முதல் இடத்தைக் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப் புக்கு அளித்திருந்தார். சங்கரர், இராமானுசர் போன்ற சாதிபேத மற்ற மகான்களை அளித்த தமிழகமா தீண்டாமையைப் பின்பற்றுவது என்று அவர் மனம் வருந்திக் குறிப் பிட்டிருக்கிறார். தீண்டாமை ஒழிப் பில் மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட வர்கள் எனப்படுபவர்களின் வாழ்க் கைத் தரமும் தகுதியும் உயரத் தமிழ்நாடு மேற்கொண்டுள்ள நட வடிக்கைகள் கணக்கிலடங்கா.

தீண்டாமையைக் கூறுவதே குற் றம் என்கிற சட்டத்தை 1937இல் இராசாசி முதல் அமைச்சராக இருந்தபோது நிறைவேற்றி அரிசனங் களை ஆலயங்களுக்குள் சென்று வழி பட அனுமதிக்கவேண்டும் என்பதற் கான வழிவகைகளைச் செய்தார்.

1946இல் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்குக் கடைசியாக வருகை தந்த போது அரிசனங்கள் அனுமதிக்கப்பட்ட மதுரை மீனாட்சி கோவிலுக்கும் பழநி கோவிலுக்கும் சென்றார். இவற்றைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு செய்த பணிகள்.

1. சாதி ஒழிய-கலப்பு மணப் பரிசுத் திட்டம் வகுத்தது. காந்தியடிகளே பிறருக்கு எடுத்துக்காட்டாக இருக்கத் தம் மகனுக்கும் இராசாசி மகளுக்கும் 1933இல் கலப்பு மணம் செய்வித்தார்.
2. அறுபது ஆண்டுகளுக்குமுன் வீடுகட்டி வசித்து வந்த அரிசன மக்களுக்கு அந்தந்த இடங்களையே பட்டா செய்து கொடுத்தது.
3. பின் தங்கிய வகுப்பினருக்கென, தனித்துறை ஏற்படுத்தி அதற்கெனத் தனியோர் அமைச்சரையும் நியமித்தது.
4. பின்தங்கிய மாணவர்கள் 45 முதல் 50 சதவிகித மதிப்பெண்கள் வாங்கினால்தான் உதவிச் சம்பளம் தரப்படும் என்கிற ஏற்பாட்டைத் தளர்த்தி 40 சதவிகிதம் வாங்கினாலே போதும் என்று முடிவு எடுத்தது.
5. அரிசன மாணவிகளுக்கு மட்டும்கொடுக்கப்பட்டு வந்த இலவச ஆடைகளை மாணவர்களுக்கும் கொடுக்க உத்தரவிட்டது.

மதுவிலக்கு : எப்பாடுபட்டாவது மக்களை மது அரக்கனின் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும் என்பது காந்தியடிகள் திட்டம். மதுவிலக்கு அமுல் செய்த மாநிலங்கள் ஒவ்வொன்றாகக் கைவிட்டுவிட்டன. ஆனால் தமிழகம் மதுவிலக்கைக் கடைப்பிடிப்பதில் மிக உறுதியாக இருந்து வருகிறது. மது அரக்கனை ஒழித்துக் கட்டுவதில் எல்லா மாநிலங்களுக்கும் முன்னோடியாக இருந்தது தமிழகமே.

கள்ளுக் கடைகளை மறியல் செய்வதென்கிற முடிவு 1924இல் ஈரோட்டில் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் வீட்டில் செய்யப்பட்டது. தமிழ் நாட்டில் முதன்முதலில் மறியல் செய்தவர்கள் பெரியாரின் மனைவியான நாகம்மையாரும் சகோதரியான கண்ணம்மாவும்தான்.

மாதர் நலன் : பெண்களின் உரிமைகளுக்குப் பாடுபட்டவர் காந்தியடிகள். அவர் காட்டிய வழியில் செயல்பட்டது தமிழ்நாடு. 1947இல் மாதர் நலத்துறையை அரசு ஏற்படுத்தியது. அரசாங்கமும் தனிப்பட்ட மாதர்நல இயக்கங்களும் இணைந்து செயல்படுவது இத்துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டில்தான். குழந்தைகள் நலனிலும் முதன்முதலில் அக்கறை காட்டியது தமிழகமே.

ஊர் வளர்ச்சி : காந்தியடிகள் கண்ட கனவின்படியான ஊர் ஒன்று வள்ளியம்மை ஊராகிய தில்லையாடியில் அமைக்கப்படவிருக்கிறது.

செப்டம்பர் 15ஆம் நாள் முதல் தமிழ் நாடெங்கும் மாதந்தோறும் கிராமங்களுக்கு அதிகாரிகள் சென்று முறையீடுகளைப் பெற்று ‘மனு’நீதி வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கிராமங்கள்தோறும் குடிநீர் வழங்க 10 கோடிக்குத் திட்டமிட்டு உடனடியாக வேலை துவக்கப்பட்டுள்ளது. 1972க்குள் எல்லா கிராமங்களும் குடிநீர் வசதியைப் பெற்றுவிடும். (இதைக் காந்தியடிகள் மிகவும் வற்புறுத்தி வந்தார்.)

தமிழகத்தில் மின்வசதி பெறாத எல்லாக் கிராமங்களுக்கும் 1972க்குள் கூடுமான வரை மின் இணைப்புக் கிடைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஊராட்சித் தலைவர்களை நேரடியாக மக்களே தேர்ந்தெடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இப்போது கிராமங்களுக்கு நல்ல பாதைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் எல்லாம் ஏற்பட்டுள்ளதால் கிராமத்திலுள்ளவர்கள் நகரங்களை நாடவேண்டிய அவசியமே இல்லை.

காந்தியடிகள் இன்று உயிருடன் இருந்தால் தமக்குப் பிரியமான தமிழ்நாடு தம் அடிச்சுவட்டில் சிறப்பான முறையில் பெருமித நடைபோட்டு முன்னேறுவது கண்டு பேருவகையடைவார்.

> “தமிழர்கள் மிகவும் திறமைசாலிகள். நல்ல உழைப்பாளிகள். அவர்கள் என் நம்பிக்கையைச் சிதற அடிக்கமாட்டார்கள்” என்று காந்தியடிகள் அன்று கருத்துத் தெரிவித்தார். அவர் நம்பிக்கையைப் பொய்ப்பிக்காமல் அவர் காட்டிய அடிச்சுவட்டிலேயே செல்கிறது தமிழ்நாடு.

மா. முத்துசாமி
உள்ளாட்சித்துறை அமைச்சர்

வாய்மையே வெல்லும்

கோட்டை
சென்னை-9

தேதி 22-9-'69

தலைவர்
கதர் கிராமத் தொழில் வாரியம்.

தண்டமிழ் நாட்டுத் தண்ணளியீர்!
வணக்கம்.

உலகப்பொதுமறை தந்த திருவள்ளுவரின் ஈராயிரமாண்டு விழா, அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழா, அறிஞர் அண்ணாவின் அமரரான ஓராண்டு நினைவு விழா, ஆகிய மூன்றும் இணைந்த பெருமையைப் பெற்றுத் திகழ்கிறது இவ்வாண்டு!

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோமில்லையாயினும் அவருடைய உயர்ந்த வாழ்வின் சிறப்பை - திருக்குறளில் காண்கிறோம்! அத்திருமகன் எழுதிய

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்" என்ற நெறிக்கு

ஏற்ப வாழ்ந்து, இறவாப் புகழ் எய்தி, மறைந்தும் நம்மிடையே உயிரோவியமாய்த் திகழ்ந்து வரும் காந்தியடிகளும், அண்ணாவும் வாழ்ந்த காலத்தில் நாம் வாழுகிறோம் என்ற பெருமை நமக்குண்டு! அப்பெருமக்களை நினைத்து விழா எடுப்பது மட்டும் போதாது! அவர்கள் காட்டிய வழியிலே நடந்து அவர்களுடைய கருத்துக்களுக்குப் பெருமை சேர்ப்பதே நாம் அவர்களுக்குக் காட்டும் நன்றியாகும்.

காந்தியடிகள் தம் உயிரெனப் பேணிவந்த திட்டங்களில் கதர்த் திட்டம் தலையாயது. அடிகள் பிறந்த அக்டோபர் இரண்டாம் நாள் தொடங்கி நாடு முழுவதும் "கதர் விற்பனை இயக்கம்" நடைபெறும்! சென்ற இரண்டாண்டுகளாக நான் விடுத்த அன்பு வேண்டுகோளை ஏற்று, அறிவுரையேற்று, அனைவரும் ஒத்துழைத்து, விற்பனைத் தொகையைப் பெருக்கி

கதரை நம்பி வாழும் பெண்மக்களின் கஷ்டத்தைக் கேட்டுணர்ந்தே என் உளமார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன். காந்தியார் தினசரி நாள் மாலைப் பஜனையான் வைஷ்ணவ ஜனதோ அன்று அவர்கள் கீழ்க்கண்டவாறு மொழிப்பட்டார்கள்' " இதனால் அவர் புகழ் பாடப்படுமென்ன - அவர் வழி நடந்திட - அவர் காண விரும்பியதைக் கண்டிட - அவர் ஊட்டிய உணர்ச்சிக்கு உயிரோவியங்களாக்கிடப் பயன்பட வேண்டும். மாமுனியே மாண்பு மணக்கிறதே! வாழ்க்கையின் மாண்பு ஒளியானே!" என்பது அவர் பொன்னுரை!

காந்தி நூற்றாண்டு விழா பயனுள்ளதாக இருக்க வேண்டுமெனின் கதர் உற்பத்தி நம் செயலிலே நிறைந்து இடம்பெற வேண்டும்!

வறுமையால் துவண்ட நம் நூற்போர் பெண்மக்களின் துயர் துடைக்க ரூ 70 லட்சத்துக்கு நூல் வாங்கப்பட்டுள்ளது. வழக்கமான உற்பத்தியைக் காட்டிலும் இந்த 70 லட்சத்தையும் சேர்த்து உற்பத்தி செய்ய நாமே முயற்சிகள் மேற்கொண்டாக வேண்டும்!

சென்ற ஆண்டில் 2 கோடியே 14 லட்சத்துக்கு மேல் கதர் உற்பத்தியாகியுள்ளது. கதர் இயக்கத் தந்தையான் நூற்றாண்டு விழா நடைபெறும் இவ்வாண்டில் உற்பத்தித் தொகை மூன்று கோடியைத் தாண்டிச்செல்லும் என்று உறுதியாக நம்புகிறேன். இவ்வாறு நான் துணிந்து சொல்வதற்குக் காரணம் கடந்த காலத்தில் நாங்கள் அனைவரும் காட்டிய ஒத்துழைப்பு இவ்வாண்டும் கிடைக்கும் என்ற பெரு நம்பிக்கையேயாம்!

கதர் உற்பத்தியைப் பெருக்கி காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவைச் சிறக்கச் செய்யுங்கள் என்று கனிவோடு உங்களனைவரையும் வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

[signature]

வள்ளியம்மை

தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகள் தொடங்கிய அறப் போராட்டத்தில் பெண்கள் பலர் ஈடுபட்டனர். ''போராட்டத் தில் ஈடுபட்டே தீருவோம் என்று முன்வந்த சகோதரிகள் அத் தனைபேரும் தமிழ்ப் பெண்களே'' என்று காந்தியடிகளே மகிழ் வுடன் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவர்களுடைய பெயர்களையும் எழுதியிருக்கிருர்: 1. திருமதி தம்பி நாயுடு 2. திருமதி என். பிள்ளை 3. திருமதி கே. முருகேச பிள்ளை 4. திருமதி பெருமாள் நாயுடு 5. திருமதி பி.கே. நாயுடு 6. திருமதி கே. சின்னசாமி பிள்ளை 7. திருமதி என்.எஸ். பிள்ளை 8. திருமதி ஆர். ஏ. பூதலிங்கம் 9. திருமதி பவானி தயால் 10. செல்வி மீனுட்சிப் பிள்ளை 11. செல்வி முருகேச பிள்ளை.

பெண்களுடைய பெயர்கள் நினைவில்லாமையால் பெரும் பாலும் அவரவர்களுடைய கணவன்மார்களுடைய பெயரால் ஆங்கில முறைப்படி எழுதியிருக்கிருர்.

''அறப்போரில் சேர முன்வந்த பெண்கள் அனைவரும் தமிழ் நாட்டுப் பெண்களே'' என்று காந்தியடிகள் எழுதியிருப்பதைப் படிக்கும் தமிழன் எவனுக்குத்தான் தோள் பூரிக்காமல் இருக்கும்? இதைப் படித்த பிறகு பழைய தமிழ் நூல்களில் தமிழ்நாட்டு வீரத் தாய்மார்களின் அரும் பெருஞ் செயல்களைப் படிக்கும் போது அவை முன்னைக் காட்டிலும் உண்மை ஒளி அதிகம் பெற்று விளங்குமல்லவா?

அறப்போரில் கலந்து கொண்டமைக்காகத் தண்டனை விதிக் கப்பட்ட பெண்கள் சிறையில் வைக்கப்பட்டார்கள். சிறையில் அவர்கள்பட்ட தொல்லைகள் சொல்லிலடங்கா. அவர்களுக்குக் கொடுத்த உணவு வாயில் வைக்கமுடியாதது. சிறைக் கைதி களின் துணி வெளுக்கும் வேலை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சிறைபுகுந்த பெண்களில் பலர் வெளியில் வரும்போது எலும்புந் தோலுமாக வந்தார்கள்.

முதற்படையில் சேர்ந்த பெண்மணிகளைத் தவிர வேறு சில ரும் பிறகு அறப்போரில் பங்கு கொண்டார்கள். அவர்களில் வள்ளியம்மை பதினுறு வயது இளம் பெண். மூன்று மாதங்கள்

[அடுத்த பக்கம் பார்க்க

முன்பக்கத் தொடர்ச்சி]

சிறையிலிருந்துவிட்டு வெளி வந்தபோது வள்ளியம்மை மிக மெலிந்து எலும்புக் கூடாகக் காட்சியளித்தாள். காந்தியடிகள் அவ்வீரத் தமிழ்ப் பெண்ணைக் காண வந்தார்.

"வள்ளியம்மா, நீ சிறை சென்றது குறித்து வருத்தப்படுகிறாயா?'' என்று காந்தியார் கேட்டார்.

''வருத்தமா? மறுபடியும் என்னைக் கைது செய்தால் சிறைக்குப் போகத் தயார்'' என்றாள் வள்ளியம்மாள்.

''ஒரு வேளை உன் உயிருக்கு ஆபத்து வரலாம் என்பதை யோசித்துப் பார்த்தாயா?'' என்று காந்தியடிகள் கேட்டார். ''வந்தால் வரட்டும். தாய் நாட்டின் மானத்தைக் காப்பதற்காக உயிர்த் தியாகம் செய்வது பெரும் பேறு அல்லவா?'' என்றாள் அந்தப் பதினாறு வயதுப் பெண்.

இவ்வுரையாடல் நடந்த சில நாட்களுக்குள் வள்ளியம்மை இந்த மண்ணுலகை நீத்துச் சென்றாள். ஆப்பிரிக்காவில் வள்ளியம்மை செய்த பெருந் தியாகத்தைப்பற்றிக் காந்தியடிகள் குறித்திருப்பவை பின்வருமாறு:

''வள்ளியம்மையின் உடல் மறைந்துவிட்டது. ஆனால் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைபெற்றதாகிவிட்டது. வள்ளியம்மையின் நினைவு இன்றைக்கும் அநேக உள்ளங்களில் குடிகொண்டிருக்கிறது. இந்திய நாடு உள்ளவரை தென்னாப்பிரிக்க அறப்போர் வரலாறு மறக்கப்படமாட்டாது; தென்னாப்பிரிக்க அறப்போர் உள்ளவரை வள்ளியம்மையின் புகழும் நிலைபெற்றிருக்கும்.''

''தென்னாப்பிரிக்க அறப்போரில் ஈடுபட்ட பெண்மணிகளின் தியாகத்தை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகைப்படுத்துவதாகாது. அவர்களில் பலர் தாய் நாடாகிய இந்தியாவைப் பார்த்ததேயில்லை. அவர்களுக்கு இந்தியா என்பது ஒரு பெயர் தான். அவர்கள் செய்தித் தாட்கள் படிப்பவர்களும் அல்லர். அவர்களுடைய நாட்டுப்பற்று நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவின் பெருமை மாசு படுத்தப்படுகிறது என்பதைமட்டும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அந்தப் பெருமையை நிலைநாட்டுவதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்ய அவர்கள் முன்வந்தார்கள். அவர்கள் சிறைசென்றது மிகத் தூய்மையான தியாகமாகும். அத்தகைய தியாகமே இறைவனுக்கு உகந்தது. அப்படிப்பட்ட தியாகம் ஒரு நாளும் வீண் போகாது.''

— 'கல்கி' எழுதிய 'மாந்தருக்குள் ஒரு தெய்வம்' என்ற நூலிலிருந்து.

இவ்விதழில் ஓவியர் மணியம் வரைந்த அடிகளின் படங்களை வெளியிட வார்ப்படங்கள் தந்துதவிய மங்கள நூலகத்தார்க்கு எம் நன்றி.

கர்ப்பம் ஏற்பட்டுவிடுமே என்று அச்சமின்றி இல்லற வாழ்க்கையை இன்பமாக அனுபவியுங்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பத்திரமான முறை ஆண்களுக்கு இப்பொழுது உண்டு. அதுதான் **நிரோத்**

ஆடவர்களின் உபயோகத்திற்கு உகந்த உயர்தரமான குடும்பக் கட்டுப்பாடு சாதனம்.

நிரோத்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

மூன்றின் விலை 15 பைசா
அரசாங்க ஆதரவு விலையில்
கிடைக்கிறது.

davp 69/106

தொடர் கதை

4. ஏதங்கொண்டு ஊதியம் போகவிடல்:

வேணுகோபாலருக்கு ஒரே ஒரு மகன் மட்டுமே. அவன்தான் சோமு. மலர்க் கொடிக்கு அவளுடைய தந்தையார் பணமோ, துணி மணியோ அல்லது தின்பண்டமோ யாவையும் வேணுகோபாலர் மூல மாகச் சேர்ப்பார். இந்த வகையில் சோமு அவளை அடிக்கடிச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றிருந்தான். மலருக் காக ஒரு காரியம் செய்யவேண்டும் என்றால் அவனுக்குக் காலும் ஓடாது கையும் ஓடாது. உணர்வுதான் தலைதூக்கி நிற்குமே தவிர அறிவோ சிந்தனையோ அந்நிலையில் அவனிடம் இருக்காது. நடந்து சென்று செய்யும் காரியத்தை ஓடிக் கொண்டுதான் செய்வான். ஓடிச் செய்யவேண்டிய காரியத்தைப் பறந்து சென்று முடிப் பான். அவளிடத்தில் சென்று ஏழு கோணலாக வளைந்து நின்று தன் பரிதாபகரமான முகத்தைக் காட் டிச் சிரிப்பான். அவளும் மிருகக் காட்சிச் சாலையில் ஏதோ ஒன்றைப் பார்ப்பது போலப் பார்த்து மனதுக் குள் சிரித்துக்கொள்வாள். 'சிவகாமி யம்மாவுக்கு இப்படி ஒரு பிள்ளையா' என்று வருந்தவும் செய்வாள்.

சிவகாமியம்மாளுக்கு மலரின்மீது மிக்கப் பாசம் உண்டு. அந்தப் பாசத்தை, தான் அடிக்கடி செய்து அனுப்பும் பலகாரங்கள் மூலம் காட் டிக் கொள்வாள். சிவகாமிக்குப் பலகாரங்கள் செய்வது ஒரு பொழுது போக்கு. சோமு, தின்பண்டங்களை மலரிடம் சேர்க்கும்போது, அதைப் பிரித்து முதன்முதலில் அவனிடம் இரண்டைக் கொடுத்து விட்டுத்தான் மற்றதை விடுதி அறைக்கு எடுத்துச் செல்வாள் மலர். அவன் அதை வாங்கி ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு மற்றதைக் கடித்துத் தின்றுகொண்டே வீதியை வலம் வருவான்.

தந்தையார் சென்ற சிறிது நேரத் துக்கெல்லாம் சோமு மலரைச் சந்தித்தான்.

''ஓ ப்ளவர்! ஹவ் டு யு டு'' என்றான்.

வழக்கம் போலவே ''நலம்தான்'' என்றாள் மலர்.

''டுடே ஸ்பெஷல் ஒன்று தெரி யுமா'' என்று வியப்புடன் கேட் டான்.

அவனுக்கு ஏதாவது ஒன்றை வியப் பாகக் கூறுவது ஒரு பொழுதுபோக்கு என்று எண்ணிக்கொண்டே ''எந்த ஹோட்டலில் என்ன ஸ்பெஷல்'' என்றாள்.

''ஓ! ஹோட்டல் என்றவுடன்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு ஸ்வீட்டான சேதி சொல்லப் போகி றேன். ஆமாம் உங்க பாதர் இங்கு வந்தாரா?''

''உம்''

''அந்த ஆணழகன் வந்தானு. அதான் மிஸ்டர் யுனிவர் சிட்டி''

''யாரது? என்ன உளறுகிருய்!''

நாங்கள் அப்படித்தான் அழைப்போம். அவரவர் பெயரைச் சொல்லி அழைப்பது எங்களுக்குப் பிடிக்காது. அதற்காகத்தான் இப்படி ஏதாவது ஒரு பெயரை...''

''சரி சரி போதும் போதும்...வந்த வேலே என்னவென்று சொல் எனக்கு நாழி ஆகிறது.''

''ப்ளவர்! இப்போது நாழி ஆகிறது என்பாய். நான் சொல்ல ஆரம்பித்தால் 'சொல் சொல்' என்று கொஞ்சுவாய். மணிபோவது கூடத் தெரியாது''

''என்ன கற்பனே பண்ணுகிருய்''

''அதுதான். திருமால் இருக்கிருனே அவன் உங்கள் அப்பாவுடன் வந்தானு? அதைத்தான் கேட்கிறேன்.''

''ஆமாம் அதற்கென்ன?''

''அதற்கென்னவா? அந்த அஃறிணைக்கும் இதற்கும்தான் கல்யாணம் ஆகப்போகிறது'' என்று அவளேச் சுட்டிக் காட்டிச் சிரித்தான்.

அவள், யாராவது பக்கத்தில் இருந்துவிடப் போகிருர்கள் என்று பயந்து, படபடத்து ஒருமுறை தன்னேச் சுற்றிப் பார்த்துக் கொண்டாள். ''அய்யோ இவன் வேறு வந்து உயிரை வாங்குகிருனே. சம்பந்தமில்லாமல் எதையும் பேசுவானே'' என்று திகிலடைந்தாள். ஆனுல் மறுவினுடி அவள் உள்ளத்தில் ஒருவித மகிழ்ச்சி பிறந்தது.

'சத்தியமா மலரு. ப்ராமிசா சொல்றேன். அது அப்படித்தான். எங்கப்பாவும் அப்படித்தான் பேசிக் கொண்டார்கள். எங்கப்பாதான் எப்படியும் முடித்துவிடுகிறேன் என்று உறுதியாகச் சொன்னுர். அவரை வண்டியில் நான்தான் அனுப்பிவைத்தேன். அவர் போனவுடன் உங்கப்பா, அதான், என் மாமா வந்தார்.''

அதைக் கேட்பதற்கு அவளுக்கு எரிச்சலாக இருந்தது. அவன் சொல்வதிலும் ஏதோ உண்மையிருக்கிறது என்று நம்பியவள், மேலும் கேட்க ஆவல் கொண்டாள். ''உம் அப்புறம்'' என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''ஊஹூம் அப்புறம்'' என்ருன் அவன்.

''சொல் சோமு''

''உனக்கு நாழியாகிறது. போ, பத்திரமா உடம்பைப் பார்த்துக்கோ''

''சோமு. சோமு. என்ன விளேயாட்டு சோமு.''

''உன்னிடம் எனக்கு என்ன விளேயாட்டு. நான் எதையும் சொல்ல மாட்டேன்.''

''சோமு என்ன இப்படிப் பிடிவாதம்.''

''சரி சொன்னு எனக்கு என்ன தருவே.''

''மைசூர்பாகு தருவேன்.''

''சரி கொண்டா.''

''அப்புறம் தருகிறேன். இப்போது சொல்.''

''ஊஹூம் இப்பவே'' என்று சிணுங்கினுன்.

அவளுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ''இவன் ஒரு மனிதனும். இவனுக்குக் கல்லூரி ஒரு கேடு'' என்று எண்ணிக்கொண்டே ''போ! சொல்லவேண்டாம் போ. சீக்கிரம் இந்த இடத்தைவிட்டு நடையைக் கட்டு'' என்ருள்.

''சரி. நான் போகிறேன்'' என்று இரண்டடி எடுத்து வைத்துவிட்டான்.

''சோமு, சோமு இரு வர்றேன்'' என்று ஓடிப்போய் மூன்று மைசூர்ப்பாகுக் கட்டிகளே எடுத்துவந்து அவனிடம் தொலேத்தாள். அவன் அதை வாங்கி வாயில் வைத்துக் கடித்துக் கொண்டே கேட்டான்.

''என்ன சொன்னேன்?''

அவள் பொறுமை இழந்தாள். ''போ. உன் தலே'' என்ருள்.

"போ. போ சொல்லமாட்டேன்'' என்ருன் அவன். அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் அவனே இரண்டு அறை அறைந்து விடலாம்போல் இருந்தது.

''சோமு. சோமு'' கெஞ்சினுள் அவள்.

''எங்க அப்பா வந்தாரு. உம் அப் புறம்''

''கல்யாண சம்பந்தமாகப் பேசி ஞங்க. உனக்கும் திருமாலுக்கும் கல் யாணம் செய்து வச்சிடவேணும்னு எங்க அப்பா சொன்ஞரு. உங்க அப்பா எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே வந்தார்.''

''அப்புறம்''

"அப்புறம் என்ன அந்தப்புறம் அவ்வளவுதான்'' என்று கடுப்பாகச் சொன்ஞன்.

''எங்க அப்பா என்ன சொன் ஞங்க?''

அவர் ''உம் என்று இருந்தார். அது சம்மதம் என்றுதான் அர்த்தம். மலர்! இந்தச் செய்தியைத் திருமாலிடமும் சொல்லிவிட்டேன். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. எனக்கு என்னவோ ஒரே கவலையாக இருந்தது. அவன் தலையில் ஒரு பெரிய கல்லைப் போட்டுவிடலாம் என்றிருந்தேன்'' என்றான். அவன் மேலும் தொடங்கினான். ''மலர் நீ சாதாரண மலர் அன்று, ஸ்வீட் ப்ளவர். பாத்தியா நான் ரொம்ப நல்லவன் தானே. சரி. உன்மேலே எனக்கு உயிர் மலர்'' என்றான்.

அவள் ஏதோ நினைவிலிருந்து விழித்து எழுந்தவள்போல உணர்ந்தாள். அவனிடம் முகத்தை வெறுப்பாகக் காட்டினாள்.

''வந்து மலர்... மலரு'' என்று இழுத்தான்.

''சரி போ. இனி உன் வேலை முடிந்துவிட்டது.''

''வர்ரேன் மலர்! ஆனா ஒண்ணு சொல்றேன். திருமாலை நீ இனிமே பார்த்துப் பேசினால் நான் சும்மா இருக்கமாட்டேன். உங்க அப்பாவுக்கு எழுதிவிடுவேன். போஸ்டர் அடிச்சுக் காலேஜ் பூராவும் ஒட்டிவிடுவேன்'' என்றான்.

அவனுடைய வார்த்தைகள் அவளைச் சுட்டெரித்தன. அவள் உடல் நடுங்கியது. அவனுடைய எச்சரிக்கையின் மூலம் அவனைப்பற்றிப் புதிதாக ஒன்றை அறிந்துகொண்டாள். தான் நினைப்பதுபோல் அவன் கோழை என்றோ கோமாளி என்றோ இப்போது நினைக்கவில்லை. அவன் ஒரு பேதை என்றும் அவனுடைய பழக்கம் ஏதாவது விபரீதத்தை விளைவித்து விடும் என்றும் எண்ணி மிகவும் அஞ்சினாள்.

சிறிது தொலைவு நடந்துசென்ற சோமு ஏதோ நினைத்துக்கொண்டு திரும்பினான். ''மலர், மலர்'' என்று வாய்விட்டுக் கத்தினான்.

அவள் மான்போல் மிரண்டு சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டாள்.

அவன் அருகில் வந்தான். சற்று நேரம் பேசாமல் இருந்தான். ''மலர் மலர் நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய். உன்மீது எனக்கு'' என்று இழுத்தான்.

அதற்குள் முத்திக்கொண்டாள் மலர்.

''சோமு! என்னைத் தேடிக்கொண்டு நீ இந்த விடுதிப் பக்கம் எக்காரணத்தைக் கொண்டும் வரக்கூடாது. இனி நான் உன்னிடம் பேசமாட்டேன்'' என்று ஆத்திரத்தோடு பேசிவிட்டுத் திரும்பிப் பாராமல் விடுதிக்குச் சென்றுவிட்டாள்.

அக்கோணங்கி வெகுநேரம்வரை அந்த இடத்திலேயே நின்று சிரித்துக் கொண்டிருந்தான்.

காந்தியடிகள் பயன்படுத்திய பொருள்கள்



கள்ளத் தோணிகளில் இலங்கைக்குச் செல்லுதல்

நம் முன்னோர்கள் மரக்கலங்களில் மகிழ்ச்சியுடன் பற்பல நாடுகளுக்குச் சென்று, சென்றவிடங்களை யெல்லாம் சீர்பெறச் செய்து சிறப்பாக வணிகம் செய்துள்ளனர்.

காலஞ் செல்லச் செல்ல, நிலைமை பெரிதும் மாறியதால், வணிகம் காரணமாக வெளிநாடு செல்வதற்குத் தடைகள் பல விதிக்கப்பட்டன. இருப்பினும் அரசின் ஒப்புதலின்றிக் கள்ளத்தனமாகத் தோணிகளிலும், மரக்கலங்களிலும் நம்மில் சிலர் இலங்கைக்குச் செல்லத் தலைப்படுவாராயினர். தவிர, பொருள்களையும் ஏற்றுமதி இறக்குமதி செய்யத் தொடங்கினர். இவ்வாறாகக் கள்ளத் தோணிகளில் இலங்கைக்குச் செல்லுதல் தொடரலாயிற்று.

கள்ள வழியிற் செல்பவர்கள் மிகவும் பரிதாபத்துக் குரியவர்களாகின்றனர். தரகர்களின் மயக்கு மொழிகளில் மனத்தைப் பறிகொடுத்து, தம் கையிலுள்ள பொருள்களையும் கொடுத்துவிட்டுக் கரையில் அவர்கள் கதிகலங்கி நிற்கும் நிலையைப் பார்ப்போர் கண்ணீருகுப்பர்.

கள்ளத் தோணிகளில் இலங்கை செல்பவர்கள் தம் மனைவி, மக்கள், உறவினர்களிடம்கூட வெளிப்படையாகத் தம் எண்ணங்களைக் கூறாது தரகர்களையே தெய்வமென எண்ணிக் கரையில் காத்து நிற்பர். குறித்த நேரத்தில் படகு வராதுபோயின், தரகர் ஏமாற்றி விட்டனரோ என அஞ்சுவர். அப்படியே படகு வந்த பின்னரும் பயந்து பயந்து, புழுப் போலத் துடித்துக் கொண்டே பயணத்தை மேற்கொண்டு தொடருவர்.

பயணத்தினிடையில் என்ன ஏற்படினும் தரகர்கள் தலையிடுவதில்லை. கரையில் அரசு அலுவலர்களைக் காண்கின், இவர்களைக் கூசாது கடலில் தள்ளி விடவும் அஞ்சமாட்டார்கள். அலுவலர்கள் இல்லாவிடினும் கழுத்தளவு ஆழத்தில் தள்ளிவிட்டு விடுவர். நன்கு நீச்சல் தெரிந்தவர்களே மிக்க சிரமத்துடன்தான் இலங்கைக் கரையை அடைய முடியும்.

கரையேறிய பின்னரும் பயம்; பயம் மட்டுமே வாழ்வில் எஞ்சிநிற்கும். காவலர்களிடம் அகப்பட்டாலோ, தண்டனைக்கு ஆளாகி நாடு கடத்தப்படுவர். இத்துணை இன்னல்களைக் கடந்த பின்னரும், இலங்கையில் வேலை கிடைத்தாலும் மன அமைதி சிறிதுமில்லை.

அனுமதி பெறாது குடியேறியவர்களை, முதலாளிகள் ஏய்த்து, பெரும் உழைப்பைப் பெற்றுக் கொண்டு, சிறிது கூலியே தருவர்; அதையும் மனைவி மக்களுக்கு முறையாக அனுப்ப இயலாது.

இவர்களை அனுப்புதற்கு உதவும் தரகர்கள், கள்ளக் கடத்தல்காரர்கள் பிடிக்கப்பட்டால், அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கச் சட்டங்கள் இயற்றப்பட்டு, தீவிரமாகச் செயற்படுத்தப்படுகின்றன.

எனவே முன்னேறி வரும் நம் நாட்டிற்கு, உழைப்புச் சக்தி மிகுந்த ஆற்றல் படைத்த தொழிலாளர்கள் மிக்க அவசியம். அவர்கள், தம் தாயகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் செய்யாது, கள்ளத் தோணிகளில் சென்று, தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் இடையறாத இன்னலைத் தேடிக் கொள்வதுடன் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் உள்ள நட்புறவையும் கெடுத்து விடுகின்றனர்.

எனவே இந்த எண்ணங்களையெல்லாம் கைவிட்டு, தம் மனைவி, மக்கள், உறவினர்களின் நன்மையையும், சிறப்பாக நம் நாட்டின் கௌரவத்தையும் பேணிக்காக்க அவர்கள் முற்படுதல் வேண்டும்.

உப்பு வாங்க வரிசையில் நிற்க வேண்டும்

நேப்பாள நாட்டில் உப்பு உற்பத்தி செய்யப்படுவதில்லை. நம் நாட்டிலிருந்துதான் அங்கு உப்பு இறக்குமதியாகிறது. அதை நேப்பாள மக்கள் வரிசையில் நின்று வாங்கவேண்டும். ஒரு கிலோ உப்பு விலை ரூபாய் ஒன்று.

* * *

நேப்பாள மக்கள் அரிசி சாப்பிடுபவர்கள்; விழாக் காலங்களில் மட்டுமே கோதுமை உணவைச் சாப்பிடுகின்றனர்.

* * *

கூர்க்கர்கள் அனைவரும் நேப்பாள மக்கள்தாம்; ஆனால் நேப்பாள மக்களனைவரும் கூர்க்கர்கள் அல்லர்.

* * *

ஊராட்சி, ஊராட்சி மன்றம், வட்டார மன்றம் ஆகிய ஒவ்வொன்றிலும் படிப்படியாக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான், ஒருவர் நாடாளுமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

* * *

நேப்பாள நாட்டின் மக்கட்டொகை ஒருகோடி மட்டுமே

* * *

நேப்பாள அரசு இந்து மதச் சார்புள்ள அரசு

* * *

தமிழகத்தில் வருவாய்த் துறை மேலோங்கி நின்று, இதர துறைகளைக் கட்டுப்படுத்துவது போன்ற நிலை நேப்பாளத்தில் இல்லை; ஊராட்சித் துறைதான் அங்குச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

தொகுப்பு: எம்.ஏ.லத்தீப்

மிருத்துவத்திலும் இலக்கியத்திலும் கரும்பு

சிறுவை நச்சினார்க்கினியன்

தமிழ் நாட்டில் பொங்கல் புது நாள் வந்ததும் அங்கே கரும்பு காட்சியளிக்கும். தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் - ஏன் பட்டணங்களிலும்கூட, பல தெய்வ வணக்கங்களுக்கும் கரும்பு இல்லாமல் பூசை செய்யமாட்டார்கள். தமிழ்நாட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளுக்குக் கரும்பு முன்வந்து நிற்கும். அந்தக் கரும்பைப்பற்றிச் சுவையான பல நிகழ்ச்சிகள் ஆங்காங்கே மலர் தூவியதுபோல் இலக்கியம், வைத்திய நூல் முதலியவற்றில் காட்சியளிக்கின்றன. அம்மலர்களை ஒருங்கே சேர்த்துப் பார்த்து மகிழ முயல்வோம்; மகிழ்வது மட்டுமன்று; பல அனுபவங்களையும்பெறலாம்.

கரும்பின் வேறு பெயர்கள் :

புனர்பூசம், இக்கு, வேய் என்பன.

வேறு மொழிகளில் கரும்பின் பெயர்கள்:

தெலுங்கு: செருகு, கனுபுல செருகு.

மலையாளம்: கரிம்ப

கன்னடம்: கப்பு

சமஸ்கிருதம்: இக்ஷு ரசல

அரபு: காசபஸ் - சாகர், காசபி - சாகர்

பெர்ஷியன்: நை - ஷாகர்

துக்: கண்தா

இந்தி: கண்ணு

கரும்பைப் பகுத்துப் பார்த்தால்,

கருப்பஞ்சாறு, சருக்கரை, வேர் என மூவகைப்படும். இதனை மனிதன் தனிததனி உட்கொள்ளின் இதன் செய்கையும் தனித்தனி வேறுபடும்.

கருப்பஞ்சாறு:

உள்ளழலாற்றும் (Demulcent)

அழுகல் அகற்றும் (Antiseptic)

குளிர்ச்சியுண்டாக்கும் (Cooling)

சிறுகக் கழிச்சல் உண்டாக்கும் (Laxative)

சிறுநீர் பெருக்கும் (Diuretic)

உடலூட்டமாக்கும் (Nutrient)

என்று கருப்பஞ் சாற்றுக்குக் குணங்கள் உரைப்பர்.

கரும்பு வேர்:

உள்ளழலாற்றும், சிறுநீர் பெருக்கும்.

கருப்பஞ் சருக்கரை:

அழுகலகற்றும், உள்ளழல் ஆற்றும்.

மேலும் கருப்பஞ் சாற்றிலிருந்து நல்ல வெல்லம், பழுப்புச் சருக்கரை, சீனிச் சருக்கரை, கற்கண்டு முதலியவற்றை நாம் பெறுகின்ருேம். இதன் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிக் குணம் உண்டு. மேலும் சாற்றிலிருந்து காடி என்ற ஒருவகைப் பொருளைச் செய்வார்கள். அதற்குத் தனியே சில குணங்கள் உண்டு.

1. கருப்பஞ்சாறு மிகுதியாக உட்கொள்வோமாளுல் ஐய நோய் உண்டாகும்.

2. செங்கரும்பின் சாற்றைப் பதம் செய்து உண்ண, பித்தமெல்லாம் தீரும் என்பது சித்தர் வாக்கு.

3. நல்ல வெல்லத்தை மிதமாய் உட்கொள்ளின் பித்த குன்மம் போகும். மிதமாய் உட்கொள்ள வில்லையேல் ஐயத்தையும் வயிற்றுப் புழுக்களையும் நீரிழிவு நோயையும் உண்டாக்கும்.

4. பழுப்புச் சருக்கரையைச் சில மருந்துகளுக்கு அனுபானமாக உபயோகிப்பார்கள் மருத்துவர்கள். இது வாந்தி, பித்தம், சுவையின்மை ஆகியவற்றைப் போக்கும். மேலும் இது கெட்டிப்பட்ட கபத்தை இளக்கிக் குணந்தரவல்லது.

5. சீனிச் சருக்கரை, வாதசுரம், வாதநோய், வாந்தி, நுண்புழு, விக்கல் இவைகளைப் போக்கும்.

6. கற்கண்டு ஒரு தோலா எடுத்து அதனுடன் ஒரு வராகன் எடை பொரிகாரம் சேர்த்து ஏழு நாட்கள் சாப்பிட விந்து நீத்தல் நீங்கும் என்பர்.

7. சருக்கரைக்குள்ள பொதுவான சில குணங்கள்: சருக்கரையைப் பாகு செய்து உணவுப் பொருள்களைக் கெடாமல் சேமித்து வைக்க உதவும். அதனல் இதற்கு ''அழுகல் அகற்றி'' (Antiseptic) என்ற பெயரும் பொருந்தும்.

செம்பு, வெள்ளைப் பாடாணம், வீரம் முதலிய நச்சுப் பொருள்களை உட்கொள்ளுவதால் உண்டாகும் கேட்டிற்குச் சருக்கரை மிகச் சிறப்பான நஞ்சு முறிப்பாகப் பயன் படுகிறது.

மேலும் இதனை ஆருத புண்களுக்கு இட்டுக் குணப்படுத்துவர். சிலர் அடிபட்டு இரத்தம் பீரிட்டு வரும் பொழுது முதல் சிகிச்சையாகச் சருக்கரையை இட்டுக் குணம் காண்பர். மஞ்சள் மெழுகையும், சருக்கரையையும் சேர்த்துக் குழப்பிப் பருக்களுக்குப் போடலாம்.

சருக்கரையை நாட்பட்ட நோயாளிகளின் படுக்கை அறையில் புகைக்கச் செய்து சுத்தக் காற்று உண்டாகப் பயன்படுத்தி அவ்வறையைச் சுத்தப்படுத்துவர்.

8. காடி: கருப்பஞ் சாற்றைப் புளிக்கவைத்து ஒருவகைக் காடி செய்வர். இதற்குக் ''கருப்பங்காடி' என்று பெயர். இது பசியை உண்டு பண்ணுவதோடு, செரிப்பை மிகுதிப் படுத்தித் தாகத்தையும் அடக்கும் சக்திவாய்ந்தது. காடி ஒரு பங்கும் சுத்த நீர் 5 பங்கும் கலந்து, ஈயம் உண்ட நஞ்சாலுண்டாகும் நோய்களுக்குக் கொடுத்து உதவுவார்கள்.

தலைவலி, மயக்கம், தொண்டைப் புண், மூக்கின் வழி நீர் பாய்தல் முதலிய நோய்களுக்கு இக்காடியின் ஆவியை மூக்கின் வழியாய் ஏற்ற மிகுந்த குணமுண்டாகும்.

இரத்த மூத்திர நோய்க்கு, மேற்படி காடியைக் கடிதடம், தொடை இடுக்கு முதலிய இடங்களில் பூச இரத்த மூத்திரம் நீங்கும்.

மேலும் தேள், குளவி, தேனீ முதலியன கொட்டினதாலுண்டாகும் நோய்க்கும், சில பயிர்ப் பொருள்களின் சுணையினலுண்டாகும் நமச்சல் முதலிய நோய்களுக்கும் காடியைப் பூசச் சுகமுண்டாகும். இது மூலை வீக்கத்தைக் கரைக்கும்.

கரும்பு வேரின் சிறப்பு:

கரும்பின் வேரை முறைப்படிக் குடிநீரிலிட்டு உள்ளுக்குக் கொடுக்கச் சிறுநீர் எரிச்சலைக் குறைக்கும்.

மேலும் கரும்பின் சில சிறந்த குணங்கள்:

கரும்பை இரண்டாகப் பிளந்து, திப்பிலிப் பொடி, ஏலக்காய்ப் பொடி இவைகளை நடுவில் வைத்துச் செம்மண் சீலைசெய்து, கும்பியில் வைத்துப் பதமாகச் சுட்டு எடுத்து.

சிலையை நீக்கியபின் அதனைப் பிழிய வேண்டும். பிழிந்து எடுத்த சாற்றை விக்கலுக்குக் கொடுக்க உடனே விக்கல் தீரும்.

கரும்பைத் துண்டு துண்டாக வெட்டி, சுத்தி செய்த செம்புத் தூளைச் சட்டியிலிட்டு வறுத்து, வெட்டிய துண்டுகளால் கடைய, செம்பு, ஒருவகைப் பற்பகமாகும். இதனைச் செய்வதற்கு, குறைந்தது ஒரு பலம் செம்புத் தூளுக்கு மூன்று நான்கு முழுக் கரும்புகள் தேவையாகும். இதைக் கொண்டு பல நோய்களைத் தக்க துணை மருந்துகளால் போக்கலாம் என்பது வைத்தியமுறை.

இலக்கியத்தில் கரும்பு:

இதுவரை நம் கண்முன் பண்டிகைகளில் சிறப்பு நிகழ்ச்சிகளில் காட்சியளிக்கும் கரும்பு நம் மனித உடல் நலத்துக்கும், பிறவற்றிற்கும் எப்படிப் பயன்படுகிறது அல்லது எப்படியெல்லாம் பயன்பட்டு இருக்கிறது என்பதைப் பார்த்தோம். நம் இலக்கியத்தில், தத்துவத் துறையில் கரும்பு உவமையாக வந்து எப்படியெல்லாம் நமக்கு இன்பமூட்டுகிறது என்பதைப் பார்ப்போம்.

பழங்கால முதலே கரும்பு நமது நாட்டில் பயிரிடப்படுகிறது. வேதங்களில் கூடக் கரும்பைப்பற்றிக் குறித்திருக்கிறார்கள். சாணக்கியரும், சச்ருதரும் இதைப் பற்றி நுணுக்கமாக ஆராய்ந்ததாகத் தெரிகிறது. வெல்லம் செய்யும் கலையைக் கற்கச் சீனச் சக்ரவர்த்தி ஒருவர் சுமார் கி. பி. 600இல் பீகார் மாநிலத்துக்கு ஒரு தொழில் கமிஷன் அனுப்பியதாக வரலாறு. சமஸ்கிருதத்திலும், தமிழ் இலக்கியத்திலும் கரும்பு காமன் வில்லாகக் கூறப்பட்டுள்ளது. கரும்பு தமிழ் நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் பின்னப் பட்டுள்ளது.

''நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்''

— நான்மணிக்கடிகை

இங்கே புலவர் பெருந்தகை நிலத்துக்கு அழகு செய்வது நெற்பயிரும் கரும்புப் பயிரும் என்று கூறி மகிழ்கிறார்.

''வெண்பூக் கரும்பொடு செந்நெல் நீடி''

— பட்டினப்பாலை

எங்குப் பார்த்தாலும் வெண்மையான பூக்களையுடைய கரும்போடு செந்நெல்லும் வளர்ந்துள்ள காட்சியில் பெருமிதம் அடைகிறார் புலவர்.

அப்படிக் கரும்புப் பயிரில் வெண்மையான பூக்களைக் கண்ட புலவர் வேல் தொகுதி தொகுதியாக அசைந்து அழகு செய்யும் காட்சி உன் நாட்டில் அல்லால் வேறு எங்குக் காணமுடியும் என்கிறார்.

''தோடுகொள் வேலின் தோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்''

— புறநானூறு 35

மேலும்,

''கரும்பல்லது காடறியாப் பெருந் தண் பணை''

— புறநானூறு 16

இங்கே, கரும்பு காடுபோல் வளர்ந்திருக்கும்; அக்காடு தவிர வேறு காடுகளை அறியாத பெரிய வயல்கள் இருக்கக் கண்டேன் என்கிறார்.

''வெள்ளி விழுத்தொடி மென் கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயின் நுடங்க
மீன்சினை அன்ன வெண்மணல் குவைஇ
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி
ஊர்க்குறு மகளிர் குறுவழி விறந்த''

— அகம்-286

இங்கே புலவர், சிறு பெண்கள் காஞ்சி மரத்தின் நிழலில் கொடி போன்ற தம் நுண்ணிய இடை அங்கும் இங்கும் அசைய, மீனின் முட்டை போன்ற வெண்மணலைக் குவித்து, வெள்ளிப் பூண்போட்ட கரும்பின் உலக்கையால் குத்திக் குத்தி விளையாடினார்கள் என்கிறார்.

இப்படிச் சங்க காலத்தில் பெண்களால் விரும்பி விளையாடப் பட்டிருக்கின்ற இந்தக் கரும்பின் உருவத்தையும் கோவலன் கண்ணகியின் பெருந் தோளிலே எழுதி மகிழ்ந்தான் என்கிறார் இளங்கோவடிகள்.

''கரும்பும் வல்லியும் பெருந் தோள் எழுதி'' என்பது சிலப்பதிகாரம்.

உழவர்கள் மடை அடைக்கும் போது சோழநாட்டில் சோற்ருல் மடை அடைத்ததாகக் கூறுவர். அது போலத் திருமுனைப்பாடி நாட்டில் வெல்லக் கட்டியால் மடை அடைப் பர் என்று திருநாவுக்கரசர் வரலாற் றிலே சேக்கிழார் பெருமை கொள் கிருர்.

புடைபரந்து ஞிமிறெலிப்பப்
புதுப்புனல்போல் மடையுடைப்ப

உடைமடையக் கரும்படுகட்
டியினடைப்ப ஊர்கள்தொறும்''

— பெரிய புராணம்.

இவ்வாறு கரும்புப் பயிர்வளம் நிறைந்த தமிழ்நாட்டிலே, கரும்பு பிழியப்பட்ட இனிய சாற்றினைக் காய்ச்ச, அதனுல் எழும் புகையை மழை மேகம் என்று கருதினர்கள் மக்கள் என்று பெருமை பேசுகிருர் நைடதக்காரர்.

''பூங்கரும்பு உடைந்த தீஞ்சாறு

அடுபுகை புயலென்று எண்ணி''.

மேலும் இதனை விஞ்சும் அளவில் மற் றெருவர் கூறுகிருர்,

''மழைகண் டன்ன ஆலைதொறும்
ஞெரே ரெனக்

கழைகண் ணுடைக்கும் கரும்பின்
ஏத்தமும்''

— மலைபடுகடாம்.

இங்கே கரும்பாலைகள்தோறும் கணுக்களை உடைக்கும் ஓசை மேகக் கூட்டங்களிடை எழுந்த ஓசை போன்று இருந்ததாம்.

இவ்வாறு நாட்டைச் செல்வநிலை யில் வளப்படுத்திய கரும்புப் பயிரினை ஒரு நாடு மற்றெரு நாட்டுடன் போரிடும்போது, பகை நாட்டவர் இக் கரும்புப் பயிரினையும் அதனுடன் சேர்ந்து வளர்ந்து இருந்த நெற்பயி ரினையும் தீயிட்டு அழித்துவிட்டார் கள் என்ற செய்தியைப் புறப் பொருள்வெண்பாமாலை ஆசிரியர்,

''கரும்பொடு காய்நெற் கனையெரி
யூட்டி''

என்று கூறும்போது அக்காலத்திலும் மக்களின் முக்கிய உணவுப் பொருள் களைப் பாழாக்கும் இழிசெயல் இருந் தது என்பது நமக்குக் குறிப்பாகக் காட்டப்படுகிறது.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ரு கிய மணிமேகலையில்,

''சுரும்புநாண் கருப்புவில்
அருப்புக் கணைதூவச்

செருக்கயல் நெடுங்கண் சுருக்கு
வலைப் படுத்து''

என்ற அடிகளால் மன்மதனுக் குக் கரும்பு வில்லெனவும், அவ்வில் லுக்கு நாண் வண்டுகள் எனவும், கணைகள் மலர்கள் எனவும் குறிப் பிட்டுள்ளார்.

இன்பச் சுவையிலே, ''கரும்பு அடு சொல்லி'' பெண் பெயர். அதாவது கரும்பினும் இனிக்கின்ற சொல்லைப் பேசுபவள் என்பது. இப் பெயர் இன்று ஒரு கல்வெட்டு ஆசிரியரின் மகளுக்கு இடப்பட்டிருக்கிறது. அதா வது இன்றும் இப்பெயர் தமிழகத் தில் வழக்கில் உள்ளது என்பது எண்ணி மகிழத் தக்கது.

''அன்ன நடையும் அன்னமிலாஜயர்
நடையும் தளர்வெய்தக்

கன்னி நடக்கும் நடைகற்ருள் கரும்பு
கசக்கும் மொழி பெற்ருள்''

— பிரபுலிங்க லீலை.

இவ்வாசிரியர் மாயை என்னும் பெண், கரும்பும் கசக்கும்படி சுவை யாகப் பேசினுள் என்று வியந்து கூறு தல் சிந்தனைக்கு ஒரு நல் விருந்தாம். மக்கள் பண்புக்கு உவமையாக்கும் போது

''சொல்லப் பயன்படுவர்
சான்ருேர், கரும்புபோல்

கொல்லப் பயன்படும் கீழ்''

— குறள்-1078.

தெய்வப் புலவர், சான்ருேர்கள் தம்மைப் பிறர், வாயால் கேட்ட அளவிலேயே உதவிசெய்வர். கரும்பு ஆலையில் இட்டுக் கசக்கிப் பிழிந்தால் தான் மக்கட்குப் பயன்படும். அது போல் கீழ் மக்கள் தமக்குத் தொல்லை கொடுப்பவர்க்கு மட்டுமே உதவி செய்வர் என்கிருர்.

''கடித்துக் கரும்பினை கண்தகர
நூறி

இடித்துநீர் கொள்ளினும் இன்
சுவைத்தே யாகும்

வடுப்பட வைதிறந்தக் கண்ணும்
குடிப்பிறந்தார்
கூறுர்தம் வாயிற் சிதைந்து''
— நாலடியார்

இங்கு இவரோ, கரும்பினே வாயால் கடித்துத் தின்றாலும், ஆலே யில் இட்டுக் கசக்கிப் பிழிந்தாலும் கருப்பஞ்சாறு இனிக்கவே செய்யும். அதுபோலத் தம்மைப்பிறர் கொடுஞ் சொற் கூறித்திட்டினுலும் சான்றோர் தம் வாயால் இழிந்த சொற்களேக் கூறுர் என்கிறர். கரும்பைப் பிழிந்து சாறு எடுப்பதிலே இந்த இருபெரும் புலவர்களும் இருவேறு கோணங் களிலே பண்பை விவரிப்பது சுவைக் கத் தக்கதாகும்.

இவையெலாம் கடந்து மேலே
சென்றால்
''ஞானக் கரும்பின் தெளிவை
பாகை''
— திருவாசகம்

என்று இறைவனைப் பற்றிப் பேசு கின்றார் மாணிக்கவாசகர். இறைவன் எப்படி இருப்பான் என்ற கேள்வி யைத் தானே கேட்டுக்கொண்டு விடை இறுப்பதுபோல், ''இறைவன் ஞானமாகிய கரும்பின் தெளிவாக, பாகாக'' விளங்குகின்றான் என்று சொல்லி மகிழ்கின்றார்.

இதனையே நமது திருவருட்பிரகாச வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் இறைவனே

''பார்த்தாலும் நினைத்தாலும்
படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும்
பரிந்துஉள்உணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும்
கட்டியணைத் தாலும்
இத்தனைக்குந் தித்திக்கும்
இனித்தசுவைக் கரும்பே''

என்று பேசுகின்றார்.

ஆகவே கரும்பு உடலுக்கும் உயி ருக்கும் ஒரு நற்பயிர். அளவுடன் பயன்படுத்துதல் நலம் பயக்கும்.

அண்ணலின் மணி உரை

மேற்படிப்புக்காக வெளிநாடு சென்ற ஒருவருக்குக் காந்தியடிகள் கூறிய அறிவுரைகள் :

1. அளவோடு உரையாடு.
2. எவர் சொல்வதையும் கேள்; ஆனல் நேர்மையானதைச் செய்.
3. ஒவ்வொரு நொடியும் வீணுகாமல் கவனித்துக் கொள். எந்த வேலே யையும் உரிய காலத்தில் செய்து முடி.
4. எளிய வாழ்வை மேற்கொள்; செல்வச் செருக்குக் கொள்ளாதே.
5. நீ செலவு செய்யும் ஒவ்வொரு காசுக்கும் கணக்கு வைத்திரு.
6. உன்னிப்பாய்க் கற்றிடு.
7. ஒழுங்காக உடற்பயிற்சி செய்.
8. அளவுடன் உணவு கொள்.
9. அன்றாடம் நிகழ்வதை நாட்குறிப்பில் பதிந்து கொள்.

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பாஸ்

FACT

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பாஸ் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரைபடும் தன்மை உடையதால் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை பாக்டம்பாஸ் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பாஸ் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப் படுத்துகிறது.

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம் : 2-வது மாடி,
19, கமாண்டர்-இன்-சீப்-ரோடு,
சென்னை-8.

உரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானை மார்க்





Criterion FT 2203 TM

வறட்சி நிவாரணப் பணி ஒரு தன்மானப் பிரச்சினை

''தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்.''

தமிழகம் என்றுமே கண்டிராத அளவில் வானம் பொய்த்துப் பருவ மழை தவறியதால் சென்ற எட்டுத் திங்கள்களாக வறட்சி மேலிட்டு, மக்கள் குடிநீருக்கும் அவதியுறும் நிலை எங்கும் மிகுந்துள்ளது. ''உடுக்கை இழந்தவன் கைபோல்'' தமிழ்நாடு அரசு வறட்சி நிவாரணப் பணிகளைத் தமிழகம் முழுதும் மேற்கொண்டு செயலாற்றி வருகிறது.

சேந்தமங்கலம் வட்டாரம் சேலம் மாவட்டத்தில் மிகச் செழிப்பான கொல்லிமலைச் சாரலை ஒட்டிய பகுதி யாகும். தமிழகத்தில் செந்நெல், கரும்பு, வாழை மண்டிக் கிடக்கும் காவிரியின் கரை மருங்கிலுள்ள கழனிகளைத் தவிர்த்து, தோட்டக்கால் பகுதியில் இந்த வட்டாரத்தில் உள்ளது போன்ற செழிப்பான மண்ணும் நீரும் வேறு எப் பகுதியிலும் இல்லையெனக் கூறுவது மிகையாகாது.

''ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும்'' என்ற முதுமொழிக் கேற்ப இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் ஊக்கம் மிகக் கொண்டு விவசாயக் கிணறுகளை நூறு அடிக்கும் மேலாக ஆழப்படுத்தி உழவுத் தொழில் செய்து வருகின்றனர். இந்த வட்டாரத்கில் கொல்லி மலையை அணித்துள்ள வாழவந்தி, நடுக்கோம்பைப் பகுதிகள் கொல்லி மலையினின்றும் வரும் கருவாட்டாற்றின் பாசனம் பெறுவதால் காவிரிக் கரையைப்போல என்றுமே செழிப்புடன் விளங்கும். இந்த ஆற்றில் நீர் ஓட்டம் இல்லாத காலத்தில்கூட அதன் ஊற்று நீர்ப் பகுதி வற்றியதில்லை என விவசாயிகள் கூறுகின்றனர். அத்தகைய ஊற்று இந்த ஆண்டு வற்றிப்போய்விட்டது. இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள வறட்சி இங்குள்ள முதுபெரும் விவசாயிகள் தங்கள் நினைவு தெரிந்த காலம் முதல் கண்டிராதது ஒன்றென ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

பாசன நீருக்கே இத்தகு நிலை! ஆழம் குறைவாக உள்ள குடிநீர்க் கிணறுகளின் நிலையோ சொல்லால் விளக்கமுடியாத் துயர்தரு நிலை! எல்லாக் குடிநீர்க் கிணறுகளும் வற்றிப்போய் விட்டன. எனவே வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ், 78 குடிநீர்க் கிணறுகள் ரூ. 1,08,545 செலவில் ஆழப்படுத்தப்பட்டன. சில குடிநீர்க் கிணறுகளில் போதிய தண்ணீர் கிடைத்துள்ளது. பலவற்றில் போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த மாவட்டத்திற்கு வருகை தந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மா. முத்துசாமி, பி. ஏ., பி. டி., அவர்களை ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் சந்தித்து இந்தப் பிரச்னைக்கு அமைச்சர் தம் ஆலோசனையை வேண்டினர். மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் இச் சிக்கலான குடிநீர்ப் பிரச்னையைப் போக்குவதற்கும், வறட்சி நிவாரணப் பணியில் செலவிடப்படும் தொகையின் ஒவ்வொரு காசும் மக்களுக்குப் பலன் அளிக்கும் வகையில் பயன்படவும், அதே சமயத்தில் 'போர்க்கால விரைவு அடிப்படை'யில் மக்களுக்குத் தேவையான குடிநீர் வறட்சி நிவாரணப் பணிகள் சற்றும் தாமதமின்றி நடக்கவும் ஒரு புதிய கோணத்தை, நோக்கினை அளித்தார்கள். ஒரு கிராமத்தில் தெருக்கள் தோறும் உள்ள நூற்றுக்கணக்கான கிணறுகளை ஆழப்படுத்தி அதில் பெரும் தொகையைச் செலவிட்டுப் பயன் இன்றிப்போவதைத் தவிர்த்து அந்தக் கிராமத்தில் நல்ல நீரோட்டம், நீர் ஊற்று உள்ள கிணறுகளை மட்டும் ஆழப்படுத்தி அவற்றில் மின்விசை மோட்டார் பொருத்திக் குழாய்கள் மூலம் கிராமம்முழுவதற்கும் குடிநீர் விநியோகம் செய்தல் என்ற புதிய நோக்கிலும் கோணத்திலும் இப் பிரச்னையை அணுகும்படி பணித்தார்கள். அதன் விளைவாக இந்த மாவட்டத்தில் உருவாகிய பல திட்டங்களில் மிகப் பெரியதும் மிகுந்த பலன்தரத் தக்கதுமான திட்டங்களில் ஒன்றுதான் "சேந்தமங்கலம் நகர வறட்சி நிவாரண குடிநீர் விரிவினைக் குழாய்த் திட்டம்."

செ. குமரவேல், பி.ஏ.,
ஆணையர், சேந்தமங்கலம்
ஊராட்சி ஒன்றியம்

இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட சேந்தமங்கலம் பேரூராட்சியில் குடிநீர் விநியோக நிலைமை எந்த சூழ்நிலையில் இருக்கிறதென்பதையும், இந்தத் திட்டம் எத்தகைய பயனை அளிக்கவல்ல தென்பதையும் இங்குக் கூறவேண்டியது அவசியம் ஆகிறது. சேந்தமங்கலம் பேரூராட்சி சேந்தமங்கலம், காந்திபுரம், குப்பிநாயக்கனூர் என்ற மூன்று கிராமங்களை உள்ளடக்கி, சுமார் பதினைந்தாயிரம் மக்கட்டொகையுள்ள நகரமாகும். செழிப்பான காலங்களிலும் இப் பேரூராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தே வந்துள்ளது. இப் பகுதியில் சுமார் 30 குடிநீர்க் கிணறுகள் இருந்தும், அவற்றில் எந்த ஒன்றிலும் போதிய நீர் ஊற்று இல்லாததாலும் அவற்றிலிருந்து கிடைக்கும் குடிநீர் உப்பு உள்ளதாலும் நகர மக்களுள் பெரும்பாலோர் ஒரு மைலுக்கு மேற்பட்ட தொலைவில் இப் பேரூராட்சியின் எல்லையில் பொம்ம சமுத்திரம் பொதுப்பணித் துறை ஏரியின் அடிவாயில் அமைந்துள்ள கிணற்றிலிருந்துதான் குடிநீர் எடுத்து வருகின்றனர். பெண்களும், குழந்தைகளும், தாய்மார்களும் ஒரு குடம் தண்ணீருக்கு ஒரு மைல் ஒரு பர்லாங் தூரம் செல்வதென்பது எத்தகைய பரிதாபகரமான நிலை என்பதை விளக்கிக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

இப்பேரூராட்சி மிகப் பழமை வாய்ந்த ஒன்றாக 1886ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இப்பேரூராட்சியில் அங்கம் வகித்த பல பெரியோர்கள் பல முறை தக்கவொரு குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சி செய்துள்ளனர். இடம், பொருள், ஏவல் இம்மூன்றும் ஒருமுகப்பட்டுவராத காரணத்தால் அன்னார்தம் முயற்சிகள் வெற்றியளிக்கும் நிகழ்ச்சியாகவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு இக் கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கருவாட்டாற்றில் இருந்து குடிநீர் கொண்டுவரும் பொருட்டுக் 'கிராமக் குடிநீர்த் திட்டம்' என்ற மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் இருபத்திரண்டு இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. பேரூராட்சிகளுக்கு அத்தகைய திட்டம் ஏற்புடைத் தொன்றல்ல என்று மத்திய அரசு கூறியதால் கைவிடப்பட்டது.

மேலே கண்டுள்ள சூழ்நிலைகளையெல்லாம் ஆய்வு செய்து தற்போதைய திட்டம் மேற்கொள்ளப் பட்டது. கீழ்க்கண்ட அடிப்படையில் இத் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

1) இப்பேரூராட்சிப் பகுதியில் பொம்ம சமுத்திரம் ஏரிக்கரையை ஒட்டி ஒரு மைல் ஒரு பர்லாங் தூரத்தில் உள்ள கிணற்றில் மின்விசை

மோட்டார் அமைத்து, குழாய்மூலம் சேந்தமங்கலம், காந்திபுரம், குப்பி நாயக்கனூர் ஆகிய பகுதிகளின் மையங்களுக்குக் குடிநீர் கொண்டு வருதல்.

2) நகரின் மையங்களுக்குக் கொண்டுவரும் குடிநீரைத் தேக்கி வைக்க 5000 காலன் கொள்ளள வுள்ள இரண்டு பெரியமேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை அமைத்தல்.

3) அவ்வாறு அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி களில் இருந்து நகரின் மிக முக்கிய மான பகுதிகளில் மைய இடங்களில் மட்டும் குறைந்த அளவில் குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைத்தல்.

வரிசை எண் 1ல் கண்டுள்ள திட் டம் ரூ. 40,000 செலவில் செயற் படுத்தப்பட்டுள்ளது. 15 குதிரை வேகமுள்ள மின்விசை மோட்டார் கிணற்றில் பொருத்தப்பட்டு 3' விட்டமுள்ள குழாய் மூலம் 6,000 அடிகளுக்குத் தண்ணீரைக் கொண்டு வந்து இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் இணைக்கப்பட்டுள் ளது.

வரிசை எண் 2ல் கண்டுள்ள இரண் டாவது திட்டத்தில் ரூ. 40,000 செலவில் 5000 காலன் கொள்ளள வுள்ள இரண்டு பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் காந்தி புரம், சேந்தமங்கலம் ஆகிய இடங் களின் மையத்தில் அமைக்கப்பட் டுள்ளன.

வரிசை எண் 3ல் கண்டுள்ள மூன்று வது திட்டம் ரூ. 36,000 செலவில் காந்திபுரம், சேந்தமங்கலம், குப்பி நாயக்கனூர் ஆகிய கிராமங்களில் மிகவும் முக்கிய மையங்களில் மட்டுமே 13 இடங்களில் குடிநீர் விநியோகக் குழாய்கள் பொருத்தப் பட்டுள்ளன.

இத் திட்ட மொத்தச் செலவு ஒரு இலட்சத்துப் பதினாறாயிரம் ரூபாய். இந்தத் திட்டத்தில் சம்மந்தப்பட்ட கிணறு ஏரியின் அடி கரையில் உள்ள தால் இந்தக் கடுமையான வறட்சிக் காலத்தில்கூட வற்றாத நீர் ஊற்று டன் விளங்குகிறது. ஆண்டுதோறும் கோடைக் காலங்களில் மட்டும் ஏற் படும் வறட்சியைச் சமாளிக்கச் சேந்தமங்கலம் பேரூராட்சி தற்போ துள்ள கிணற்றுக்கு அருகில் பொம்ம சமுத்திரம் பொதுப்பணித்துறை ஏரிக் கரையின் உள்வாயில் மேலும் ஒரு பெரிய குடிநீர்க் கிணறுதோண்டி அந்தத் தண்ணீரையும் இத்துடன் இணைக்க முடிவு செய்துள்ளது. ஆண்டுதோறும் வானம் பொய்க்காத பகுதிகளில் கொல்லிமலையும் ஒன்று. சேந்தமங்கலத்தில் மழை பொழியா விட்டாலும், கொல்லிமலையின்மீது பொழியும் மழைத் தண்ணீர் பொம்ம சமுத்திரம் ஏரிக்கு வருவதால், இக் கிணற்றில் என்றுமே தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாது என்பது இத் திட்டத்தில் குறிப்பிடப்படவேண் டிய ஒரு தனிச் சிறப்பாகும்.

இருபத்திரண்டு இலட்ச ரூபாய் களைச் செலவழித்துத்தான் இந்தப் பேரூராட்சிக்குக் குடிநீர் விநியோகம் செய்ய இயலும் என்றிருந்த நிலைமை யில் ஓர் இலட்ச ரூபாயிலேயே நக ரத்தின் பெரும் பகுதிக்குக் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் இத் திட்டம் மிகவும் பயன்தரத் தக்க சாதனை எனக் கூறுவது மிகையாது. கனவாக இருந்த இத் திட்டம் கரு வாகி, உருக்கொண்டு, செயற்படக் காரணமானவர் மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சரே ஆவார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 10-8-69ம் நாள் சேலத்தில் வறட்சி நிவாரணப் பணித் திட்டங்கள் பற்றி விவாதித்த போது ''தமிழ்நாடு அரசு வறட்சி நிவாரணப் பணிகளை ஒரு மனிதாபி மானப் பிரச்னையாகவே மேற் கொண்டு செயலாற்றுகிறது. அர சியல், கட்சி பேதம் ஆகியவைகள் எக் காரணத்தை முன்னிட்டும் இத் தகைய மேன்மையான, தூய்மை யான பணியில் குறுக்கிடச் சற்றும் அனுமதியாது. குறிப்பாகச் சேந்த மங்கலம் பேரூராட்சி இந்த மாவட் டத்தில் காங்கிரஸ் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள ஒரே ஒரு சட்டமன்றத் தொகுதி. அந்தத் தொகுதியில் இத் தகைய பணி மேற்கொள்ளப்பட்டுள் ளது என்பதே இதற்கு ஓர் எடுத்துக் காட்டு'' எனக் குறிப்பிட்டுள்ளார் கள். இத் திட்டத்திற்கும் இப் பகுதி மக்களுக்கும் இதுவன்றோ பெருமை!

நாடி வந்த சுழற்கேடயம்

கோவை மாவட்டத்தின் சிறந்த ஊராட்சி ஒன்றியமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மொடக்குறிச்சி ஒன்றியம், ஈரோடு வட்டத்தில், ஈரோட்டிலிருந்து தெற்கே 9 கல் தொலைவிலுள்ளது. இவ்வொன்றியம் 13-3-1961 தொடக்கம் சிறப்புறச் செயல்படுகிறது.

மொடக்குறிச்சி ஒன்றியம் 27 ஊராட்சிகளைத் தன்னகத்தே கொண்டு, 87,075 மக்கள் தொகையுடன் இயங்குகிறது. இம்மக்களனைவரும் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துணைத் தொழில்களைத் தழுவி, சிறந்த, தெளிந்த மக்களாய் வாழ்கின்றனர்.

கல்வி:

இங்கு 14 ஊராட்சி ஒன்றிய உயர் தொடக்கப் பள்ளிகள், 79 தொடக்கப் பள்ளிகள், 7 தனியார் பள்ளிகள், ஓர் அரிசன நலப் பள்ளி ஆக 101 பள்ளிகள், 18,935 மாணவர்களுடன் நடைபெறுகின்றன. இவர்களில் 3887 குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது.

ஊர்ப் பெருமக்களின் உலகறிவை வளர்த்தற் பொருட்டு, 50 சமூகக் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 45 கிராம வானொலி மன்றங்களும் சிறப்புறச் செயல்பட்ட வண்ணமுள்ளன.

மகளிர் நலம்:

676 உறுப்பினர்களைக் கொண்ட 30 மகளிர் மன்றங்கள், மொடக்குறிச்சி ஒன்றியத்தில் இயங்குகின்றன. இவற்றில் 23 மன்றங்களுக்குத் தையல் இயந்திரங்களும், எஞ்சிய 6 மன்றங்களுக்குக் கடலை உடைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. 4 தையல் ஆசிரியைகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நன்முயற்சியால் 1967-68 ஆம் ஆண்டில் மட்டும் 542 மகளிர்க்குத் தையற்கலை கற்றுத் தரப்பட்டுள்ளது. 5 குழந்தைகள் காப்பகம் நிறுவப்பட்டு, சிறந்த முறையில் கவனிக்கப்படுகிறது. குழந்தைகள் அழகுப் போட்டி நடத்தப்படுகிறது.

குடும்ப நலத் திட்டத்தில் மொடக்குறிச்சி ஒன்றியம் முழு ஆற்றலையும் பயன்படுத்தி 79 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தும், 5 மகளிர்க்குக் கருத்தடை வளையம் பொருத்தியும், 1210 பெற்றோர்களுக்குக் கருத்தடைக் கருவிகள் வழங்கியும் அரும் பணியாற்றியுள்ளது.

வேளாண்மை:

பரிசுபெற்ற ஆண்டில் மட்டும் 27,210 ஏக்கர்களில் பொறுக்கு விதைகளைக் கையாண்டு வேளாண்மை செய்யப்பட்டது. இவற்றில் 10,500 ஏக்கர்களில் ஆடுதுறை-27 இனம் மட்டும் பயிரிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

பொறுக்கு விதைகளைக் கொண்டு சிறு தானியங்களும் 15,209 ஏக்கர்களில் பயிரிடப்பட்டன. கோ. 7 ராகி, கோ. 2 ராகி, கோ. 18 சோளம், எச்.பி. கம்பு, சி.எஸ்.எச். 1 சோளம் ஆகியவை இவற்றில் பெரும்பான்மையானவை.

220 கலவையுரக் குழிகள் தோண்டப் பெற்றன. இவற்றில் 1100 டன் எடையுள்ள உரம் உற்பத்தி செய்யப்பட்டது. பசுந்தாள் உரம் 905 ஏக்கர்களில் பயிரிடப்பட்டது.

கால்நடை:

இவ்வொன்றியம் முழுவதிலும் 'கிராமக் கேந்திரத் திட்டம்' செயற்படுத்தப்பட்டுள்ளது. 4 காங்கேயம் காளைகள், 6 முர்ரா எருமைகள் முன்பே அளிக்கப்பட்டுள்ளன. தவிர 1967-68 ஆம் ஆண்டில் மேலும் 3 முர்ரா எருமைகள் வழங்கப்பட்டன.

இவ்வகை எருமைகளால் 362 பொலிவுகள் செய்யப்பெற்று, 119 கன்றுகள் பிறந்துள்ளன.

தவிர 13 மேச்சேரி செம்மறியாடுகளும், 180 ஆட்டுக் குட்டிகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பயனற்ற 1020 காளைகள் காயடிக்கப் பட்டுவிட்டன.

தற்போது இவ்வொன்றியத்தில் 9 தனியார்க் கோழிப் பண்ணைகளுள்ளன. நாளொன்றிற்குச் சுமார் 1000 கோழி முட்டைகள் கிடைக்கின்றன.

கூட்டுறவு:

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் செயலற்ற கூட்டுறவுச் சங்கங்களே இல்லை. இங்கு 19 கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள், ஒரு கூட்டுறவு வேளாண்மை வங்கி, ஒரு கூட்டுறவு வங்கி, ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை, 2 நிலக்குடியேற்றக்கூட்டுறவுச்சங்கங்கள் பணியாற்றுகின்றன. இவற்றில் 12,360 உறுப்பினர்களுள்ளனர். 92 சதவீத மக்கள் இவற்றின் வாயிலாக நற்பயனடைகின்றனர்.

பற்பல முறைகளிலும் சிறந்து விளங்கி, சுழற்கேடயம் பெற்ற மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குச் 'சீரணி' வாழ்த்துக் கூறுகிறது.

காந்தியடிகள் சிறுவராக இருந்தபோது இலண்டன் மெட்ரிக் தேர்வு எழுதினார். வினாத்தாளில் 'பொன்னைவிடப் பெரியது எது?' என்ற ஒரு வினா இருந்தது.

அதற்கு அவர் எழுதிய விடை: 'உண்மை.'



"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து

பரிசுகள்! பரிசுகள்!! பரிசுகள்!!!

வெல்ல உற்பத்தியில் மிகச் சிறந்து விளங்கிய 'கொராலே' என்ற மிகச் சிறிய ஓர் ஊருக்கு இரண்டு முதற் பரிசுகள் கிடைத்துள்ளன. மகாராட்டிராவிலுள்ள, பூனா மாவட்டத்திலுள்ளது இவ்வூர். இதே மாவட்டத்தைச் சார்ந்த 'பரமாட்டி' வட்டம் வெல்ல உற்பத்தியில் மூன்று பரிசுகளைப் பெற்றுள்ளது.

திரு. ஹிம்மத்ராவ், திரு. ஆனந்த்ராவ் ஆகிய இருவரும் முதற் பரிசைப் பெற்ற முன்னணி உழவர்களாவர். இவ்விருவருக்கும் தனித் தனியே ரூ. 800 வீதம் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்பட்டுள்ளன. ஓர் ஏக்கர் நிலத்தில் திரு. ஹிம்மத் ராவ் 109 குவிண்டலும், திரு. ஆனந்த்ராவ் 124 குவிண்டலும் வெல்ல உற்பத்தி செய்து காட்டியுள்ளனர்.

இரண்டாம் பரிசு பெற்ற திரு. பாண்டுரங் அவர்கள், கால்வாய்ப் பாசன வாயிலாக ஓர் ஏக்கரில் 96 குவிண்டல் உற்பத்தி செய்து ரூ. 400 பரிசு பெற்றுள்ளார்.

கிணற்றுப் பாசனத்தைக்கொண்டு ஓர் ஏக்கர் நிலத்தில் 105 குவிண்டல் உற்பத்தி செய்தமைக்காக, திரு. இரவன் சிதப்பா என்பவருக்கும் ஓர் இரண்டாம் பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

ஆண்களே பரிசுகளைத் தட்டிக் கொண்டு செல்வதைக் கண்ணுற்ற ஒரு பெண் உழவர், திருமதி யமுனா பாய் அவர்கள், அதே ஓர் ஏக்கர் நிலத்தில் 97 குவிண்டல் வெல்ல உற்பத்தி செய்து, தமக்கும் ஒரு முதற் பரிசைத் தேடிக்கொண்டு, பெண் குலம் எதிலும் சளைத்துவிடவில்லை என்பதை நிலைநாட்டினார். இவர் உசுமானாபாத் மாவட்டத்தைச் சார்ந்தவர்.

அன்றைய அரசு அலுவலர் இன்றைய உழவர் தலைவர்

ஓய்வு பெற்ற அரசு அலுவலர் ஒருவர் வேளாண்மையில் முழு மனத்துடன் ஈடுபட்டுச் சிறந்த பணியாற்றுகிறார்.

அவர் எவ்வாறு வேளாண்மையில் ஈடுபட நேர்ந்தது?

திருக்கூர் (கேரள மாநிலம்) என்னுமிடத்தில் நடைபெற்ற கிராம சகாயக்குகள் கூட்டத்தைத் தொடக்கி வைக்குமாறு திரு. மேனன் அவர்களை—அவர்தாம் அந்த ஓய்வு பெற்ற அரசு அலுவலர்—கேட்டுக்

கொண்டனர். கூட்டத்தைத் தொடக்கிவைத்த பின்னர், ஊர் திரும்பலாம் என எண்ணிச் சென்ற அவர், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளிலெல்லாம் மிக்க ஆர்வத்துடன் பங்கு பெற்ருர். மூன்று நாட்கள் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் அவரே தலைமை தாங்கினுர்.

இதனுல் அவருடைய மனம் வேளாண்மையில் மிக்க ஈடுபாடு கொண்டது. ''இளமைக் காலத்திலிருந்தே எனக்கு வேளாண்மையில் மிகுந்த விருப்பம் உண்டு. ஆனுல் அதைச் செயலில்காட்ட இப்போது நல்ல தருணம் கிட்டியுள்ளது'' என்கிருர் திரு. மேனன்.

ஊருக்குத் திரும்பிய பின்னர் அவருடைய உள்ளத்தில் ஒரு திட்டம் உருவாகியது. ஊரிலுள்ள உழவர்களைத் திரட்டி, ஓர் 'உழவர்கள் கழகம்' நிறுவ அவர் பெரிதும் விரும்பினுர். கழகத்தின் வாயிலாக, உழவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உதவிகளனைத்தையும் பெறுதலே இதன் குறிக்கோளாகும்.

62 உழவர்களை ஒன்றுசேர்த்து உழவர்கள் கழகத்தை நிறுவினுர். இவர்களிடமுள்ள மொத்த நிலம் 75 ஏக்கர்களாகும். கழகத்தின் தலைவராகத் திரு. மேனன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. மேனன் அவர்களின் சலியாத உழைப்பு, திறமை மிக்க தலைமையினுல் அப்பகுதியிலுள்ள ஒரு போக நிலங்களனைத்தும் இருபோக நிலங்களாக மாற்றப்பட்டன. உறுப்பினர்களின் நன்மைக்காகவும், வசதிக்காகவும் பூச்சி மருந்துகள், விதைகள் மொத்தமாக வாங்கி வழங்கப்பட்டன. பொதுநீர்ப் பாசன வசதி செய்து தரப்பட்டது. நெல் கொள்முதலும் கழகத்தின் வாயிலாக மொத்தமாகச் செய்யப்பட்டது.

வட்டார அலுவலகத்திலிருந்து கடன் பெற்று, இறைவை இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் பற்பல உழவர்கள் கழகத்தில் சேருதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களும் கழகத்தில் சேர்ந்த பின்னர், மேலும் பல இறைவை இயந்திரங்கள் வாங்கி நிறுவப்படும்.

நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தில் கட்டப்பெற்ற புதிய அலுவலகத்திற்குக் கழகம் விரைவில் மாற்றப்படும். தற்போது அது வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது.

கழகத்திற்குக் கிடைக்கும் ஆதாயமானது, உறுப்பினர்களின் நிலப்பரப்பிற்கேற்பப் பகிர்ந்தளிக்கப்படும். திரு. மேனன் அவர்களின் தலைமையில், தங்களுக்கு நிறைந்த ஆதாயமும், நன்மைகளும் கிடைப்பது உறுதியென உறுப்பினர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இக்கழகத்திற்குப் பெரிதும் உதவினர். ''நான் அரசு அலுவலராக இருந்திருந்தும், வட்டார அலுவலர்களுடன் தொடர்பின்றி இருந்தேன். ஆனுல் அவர்களுடன் பழகியதில், நவீன இந்தியாவை உருவாக்குவதில் அவர்களின் சேவை மகத்தானதென்பதை மனப்பூர்வமாக உணர்ந்தேன்'' என்கிருர் திரு. மேனன்.

இதுவல்லவோ ஊர்!

497 பேர்கள் மட்டுமே வாழும் குவார்கடே (மகாராட்டிர மாநிலம்) ஊரிலுள்ள தகுதிபெற்ற தந்தையர்களனைவரும் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

இச்சிறந்த பணியில் முன்னணியில் திகழும் இவ்வூரைப் பாராட்டுதற்கென அரசு வழங்கிய ரூ. 530ஐ பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டது இவ்வூர்.

ஆனுல் அதிலிருந்து ஒரு சிறு தொகையைப் பெற்று, அவ்வூர் இளஞ் சிருர்களுக்கு, மூன்று நோய்த் தடுப்பு ஊசிகள் குத்தப்பெற்றன.

எண்ணங்கள் பொய்க்கவில்லை

"மழைக் காலங்களில் நன்கு பாடு பட்டு உழுது பயிரிடுவோம்; மழையில்லாவிடில் செயலற்று, விருப்பப்படி வாழ்வோம்; இந்த வாழ்க்கை எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று கூறினர் திரு. மேனகாமாரி, திரு. தானுபாரிக் என்ற இரு உழவர்கள். ஒரிசா மாநிலத்திலுள்ள இந்த இரு உழவர்களின் வாழ்க்கை முறைமட்டும் இவ்வாறு அமைந்திருக்கவில்லை. பிற உழவர்களும் இவ்வாறே ஆண்டின் பெரும் பகுதியை வீணடித்து வருகின்றனர்.

அன்றொரு நாள், வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட வேளாண்மை அலுவலர் இருவரும் திரு. மேனகாமாரி, திரு. தானுபாரிக் ஆகியோரைக் கண்டு, ஆண்டிற்கு மூன்று முறை வேளாண்மை செய்வதுபற்றி விளக்கிப் பேசினர். ஆனால் உழவர்கள் இருவரும் செவி மடுத்ததாகத் தெரியக் காணோம்.

நாட்டின் பிற பகுதிகளில் நிகழ்ந்து வரும் மாபெரும் பசுமைப் புரட்சிகளைப்பற்றியும், தீவிர உழவர்கள் விளைச்சலைப் பெருக்கி, தமக்கும் நாட்டிற்கும் பேருதவி செய்துவரும் செயல்களைப்பற்றியும், அலுவலர்கள் பெருவாரியாக விளக்கிப் பேசினர்.

இறுதியில் அவ்விருவரும் உருளைக் கிழங்கைப் பயிரிட இசைந்தனர். அதற்குரிய செயல்களிலும் ஈடுபடத் தொடங்கினர். வேளாண்மைப் பருவமில்லாத, ஒருகாலத்தில் உருளைக் கிழங்கைப் பயிரிட அவர்கள் முனைந்தது, அவ்வூரிலேயே ஒரு முக்கிய நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. ஊர்மக்கள் இதை வியப்புடன் நோக்கினர். இவ்வுருளைக் கிழங்குப் பயிர் நாசமடைவது உறுதியென முதியோர்கள், எல்லோரிடமும் கூறிக் கொண்டிருந்தனர்.

விரைவிலேயே உருளைக்கிழங்குப் பயிர் செழிப்புடன் வளரத் தொடங்கிற்று. 24 ஏக்கர் பரப்பளவில் கிழங்குப் பயிர் வளர்ந்து நின்ற காட்சி கண்ணைக் கவருவதாயிருந்தது. இதைக் கண்ணுற்ற பின்னரும், முதியோர்கள் தம் பொய்ப் பிரச்சாரத்தை நிறுத்தாதிருந்தனர்.

அறுவடை நாள் மலர்ந்தது. நெடு நாட்களாக அனைவரும் எதிர்பார்த்திருந்த நாளும் அதுவே. ஊர்மக்களனைவரும் ஒன்றுகூடி, அறுவடைக் காட்சிகளைக் கண்ணுற்றிருந்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வேளாண்மை அலுவலர்களும் வயல்களை அடைந்தனர். அவர்கள் துலாக் கோலையும் உடன் கொண்டுவந்திருந்தனர்.

இயற்கையன்னை அவர்களின் நெல்லெண்ணங்களைப் பொய்யாக்கிவிடவில்லை. அறுவடை சிறப்பாக நடைபெற்றது. விளைச்சல், நிறுவை செய்யப் பெற்றது. அதைக் கண்ணுற்ற ஊர்மக்கள் அனைவரும் வியப்பால் மூக்கில் விரல்களை வைத்தனர்.

ஓர் ஏக்கரில் 423 மணங்கு 14 கிலோ விளைச்சலைப் பெற்றார், திரு. தானுபாரிக். மாநிலத்திலேயே இதுதான் மிகுந்த உயர் விளைச்சலென்று அறிவித்தார் காய்கறி வளர்ச்சி அலுவலர். திரு. தானுபாரிக் அவர்களுக்குக் கிடைத்த மொத்த ஆதாயம் ஏக்கருக்கு ரூ. 6000 ஆகும்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், அங்குள்ள உழவர்களனைவரும் உருளைக் கிழங்கு பயிரிடத் தொடங்கிவிட்டனர். குளிர்ப்பதன அறையும் தேவையென அரசிற்கு விண்ணப்பஞ் செய்துள்ளனர்.

இவர்களின் வெற்றிக்கு முன்னோடியாகத் திகழ்ந்த திரு. காமாரி, திரு. பாரிக் இருவரும் புன்னகையுடன் இம்மறு மலர்ச்சியை உளமார வரவேற்றனர்.

எல்லாம் இங்கே!

மைசூர் மாநிலத்திலுள்ள புத்தூர் வளர்ச்சி வட்டாரம் சிறப்பான முன்னேற்ற மடைந்துள்ளது. அவ்வளர்ச்சியின் சில சிறப்புக்களை இங்குக் காண்போம் :

இவ்வட்டாரம் 72,691 மக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இங்கு 30 ஊராட்சிகளும் 18 கூட்டுறவுச் சங்கங்களும் செயற்படுகின்றன. வேளாண்மையைத் தழுவி 5,300 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கட்கு நெல் உற்பத்தியே தலையாய பணியாக விளங்குகிறது. சற்றேறத் தாழ 22,900 ஏக்கர்களில் நெல் பயிரிடப்படுகிறது. இவற்றில் சுமார் 8000 ஏக்கர்களில் ஆண்டிற்கு இரண்டு முறைகளும் சுமார் 300 ஏக்கர்களில் மூன்று முறைகளும் நெல் பயிரிடப்படுகிறது. தவிரச் சுமார் 1700 ஏக்கர்களில் பாக்கு உற்பத்தியாகிறது.

தற்போது 315 எண்ணெய் இறவை இயந்திரங்களும் 269 மின் இறவை இயந்திரங்களும், வட்டாரத்தில் பற்பல இடங்களில் இயங்கி, நிலையான பாசன வசதியைத் தந்துதவுகின்றன. சுமார் 18 ஊர்களில் தற்போது மின்வசதியில்லை. அங்கெல்லாம் மின்வசதி கிடைக்கப்பெற்றவுடன், அங்கும் மின் இறவை இயந்திரங்கள் பொருத்தப்படவிருக்கின்றன.

1968ஆம் ஆண்டுவரை 800 குவிண்டல் பொறுக்குவிதைகள், 1720 டன் இரசாயன உரங்கள், 31,731 கிலோ மற்றும் 12,729 லிட்டர் பூச்சி மருந்துகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக ரூ. 4·85 இலட்சம் வரை 380 உழவர்களுக்குக் கடன் வசதியளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளுக்கென 65 கட்டடங்கள் கட்டப் பெற்றுள்ளன. 40 குடிநீர்க் கிணறுகளும், ரூ. 48,443 செலவில் 23 ஊர்களுக்குச் சாலை வசதிகளும் அமைத்துத் தரப்பட்டுள்ளன. குடிநீர்க்கிணறுகள், பள்ளிக் கட்டடங்கள், இணைப்புச் சாலைகள் இல்லாத ஊர்களே புத்தூர் வளர்ச்சி வட்டாரத்தில் இல்லையென்று உறுதியாகக் கூறப்படுகிறது.

கிராமக் கைத்தொழில்களில் பயிற்சி பெறுதற்கென 19 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். மகளிர் மன்றங்களில் தையற் பயிற்சியளிக்கப்படுகிறது. 48 தையல் இயந்திரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 33 இளைஞர் மன்றங்கள், 5 மகளிர் மன்றங்கள் சிறப்பான முறையில் பணியாற்றுகின்றன.

அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினையொட்டிச் சில சிறப்பான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சுமார் 11,000 ஏக்கர்கள் தீவிர வேளாண்மைத் திட்டத்திலும், 2550 ஏக்கர்கள் மிகு விளைச்சல் திட்டத்திலும் கொண்டுவரப்படவிருக்கின்றன. தவிர வேளாண்மையின் முதன்மைத் தேவைகளான விதைகள், இரசாயன உரங்கள், உரங்கள், பூச்சி மருந்துகள், கடன்களின் தேவைகள் கணக்கிடப்பெற்று, அத்தகவல்கள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில், சங்கங்கள் உழவர்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றவேண்டும்.

மேற்கண்டவை செம்மையாக செயற்படுகின்றனவா என்பதை வேளாண்மை உட்குழு கவனித்து ஆவன செய்யும். சிறந்த ஊராட்சி, சிறந்த கூட்டுறவுச் சங்கம், சிறந்த உழவர்கள் தேர்தெடுக்கப்பட்டுப் பரிசுகளளிக்கப்படுவர். சமுதாயத்திலுள்ள எல்லாவகை மக்களையும் ஒன்றுதிரட்டி, அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் புத்தூர் வட்டாரம் மேலும் பல்வகை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

வெற்றியின் அடித்தளம்

அவருடைய எட்டு ஏக்கர் நெல் வயல் ஒரு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. அதிலுள்ள நீரூற்றுக்களின் வாயிலாக வயலில் நீர்ப் பெருக்கம் ஏற்படுவதால் அவ்வயல்களில் பல்லாண்டுகளாக ஆண்டுக்கொருமுறை மட்டுமே பயிர் செய்ய முடிந்தது. அதனுல் அவ்வுழவருக்கு வருவாய் மிகக் குறைவாகவேயிருந்தது.

ஆனுல் அவர் தன் மதிநுட்பத்தையும், அநுபவத்தையும் ஒன்று திரட்டி, அயராதுழைத்துத் தற்போது அதே வயலில் ஆண்டிற்கு இரண்டுமுறை பயிரிடுகிருர்.

விசாகப்பட்டின மாவட்டத்திலுள்ள பழங்குடி இனத்தைச் சார்ந்த திரு. கிருட்டிணன் ராசு அவர்கள், இன்று வாழ்வில் வளத்தோடு சிறப்புற்று விளங்க அவருடைய கடந்த கால உழைப்பே முழு முதற் காரணமாகும்.

மிகு விளைச்சல்தரும் நெல் விதைகளைப்பற்றிப் பலவாகக் கண்டு, கேட்டு, அறிந்திருப்பினும் கடந்த இரண்டாண்டுகள் வரையிலும் அவர் அவற்றைக் கையாளவேயில்லை. ஆனுல் சென்ற இரண்டாண்டுகளாக 'டெய்ச்சுங் நேடிவ்-1' இனத்தைப் பயிரிட்டு, ஏக்கருக்கு 2100 கிலோ வரை அறுவடை செய்துள்ளார்.

குறுகிய, நீண்ட பருவங்களிரண்டிலும் டெய்ச்சுங் நேடிவ்-1 ஐயே அவர் பயிரிட்டார்.

118 நாட்களுக்குள் அறுவடைக்கு நிற்கும் குறுகிய காலப் பயிருக்கு சனவரி 18ஆம் நாள் விதைகளிட்டார். 45 சென்ட் பரப்பளவுள்ள நாற்றங்காலில் மூன்று வண்டிச் சுமை பண்ணையுரமிட்டு 150 கிலோ எடையுள்ள விதைகளிட்டார்.

வயலை மூன்று முறை செம்மையாக உழுத பின்னர், ஏக்கருக்கு ஐந்து டன் வீதம் பண்ணையுரமடித்து வயலைத் தயாராக வைத்துக்கொண்டார். எவ்வித இரசாயன உரமும் அவர் இடவில்லை.

பிப்ரவரித் திங்கள் இரண்டாம் வாரத்தில் 27 நாள் வயதான நாற்றங்காலைக் கொண்டு, நடவு செய்தார். மூன்று விதங்களில் நாற்றுகள் நடப்பட்டன. 6 அங்குல அகலம் 4 அங்குல நீள அளவில் செய்யப்பட்ட நடவில்தான் விளைச்சல் அதிகமாகக் கண்டுள்ளது என்கிருர் திரு. கிருட்டிணன். நடவு முடிவுற்ற 20 நாட்களுக்குப் பிறகு 'எண்ட்ரின்' தெளிக்கப்பட்டது. மூன்று முறை களை யெடுக்கப்பட்டது.

மே திங்கள் 15ஆம் நாள் அறுவடை செய்யப்பட்டது. ஐந்து ஏக்கர் நிலத்தில் கிடைத்த மொத்த நெல் 10,500 கிலோவாகும். அஃதாவது ஏக்கருக்கு 2100 கிலோ விளைச்சல் அவருக்குக் கிடைத்துள்ளது.

ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் அவ்வப்போது அருளிய யோசனைகளும், உதவிகளும் தாம் இம்மிகு விளைச்சலுக்கு அடித்தளமானவை என்று கூறியுள்ளார், இந்தப் பழங்குடி உழவர் கிருட்டிணன்.

இருவருக்கும் வெற்றியே!

சம்பல் நதிக்கரையிலுள்ள சகட்பூரா ஊரினுள் (இராசஸ்தான் மாநிலம்) ஒரு ''ஜீப்'' ஊர்தி சென்று நின்றது.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அவ்வூர்தியிலிருந்து இறங்குவாராயினர். அவர்களின் தலைவர் சற்றுச் சோர்வுடன் காணப்பட்டார்.

அவருக்கு உள்ளச் சோர்வு எதனுல் ஏற்பட்டது? அன்றைய அவர்களின் அலுவலுக்கு ஒரு பெண் மருத்துவ

அலுவலர் தேவைப்பட்டார். ஆனால் அவரோ அங்குக் கிடைக்கவில்லை.

பெண்களிடம் கருத்தடை வளையத்தைப்பற்றிஎவ்வாறு விளக்குவது என்பதே அவருடைய அன்றையக் கவலை. ஆனால் விரைவிலேயே அக்கவலை மறைந்தது. எவ்வாறு? முகத்திரை யணிந்த ஒரு முஸ்லீம் பெண் அவரை அணுகி, ''கருத்தடை வளையம் என்றால் என்ன? அதைப் பொருத்திக் கொள்வதால் இரத்தம் மிகுதியாக வெளிப்படுமோ?'' எனக் கேட்டாள்.

இப்ராகீமின் மனைவியான ஈதா என்ற அப்பெண் இருபத்தெட்டு வயதிலேயே எட்டுக் குழந்தைகளுக்குத் தாயாராகிவிட்டாள். ஒன்றன் பின் ஒன்றாகக் குழந்தைகளைப் பெற்று, அனைவரையும் ஒரே நேரத்தில் வளர்த்துச் சோர்வுற்றுக் காணப்பட்ட அப்பெண், குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் பெரும் ஆர்வம் காட்டினாள்.

அவள் கேட்டாள், ''என்னுடைய பக்கத்து வீட்டுப் பெண்மணி கருத்தடை வளையம் அணிந்துள்ளாள். அதனால் அவளுக்குப் பெரும் இரத்தப் போக்கு ஏற்பட்டுள்ளது. அந்த நிலை எனக்கும் ஏற்படுமோ?

''உங்களுக்கு அந்நிலை ஏற்படாதென என்னால் உறுதியாகக் கூற முடியும். எட்டுக் குழந்தைகளுக்குத் தாயாரான உங்களுக்குக் கருத்தடை வளையம் மிக்கத் தேவையானதொன்றும்கூட'' என்றார் அலுவலர்.

நஞ்சைப்போல் ஏறி வரும் உணவுப் பொருட்களின் விலையொரு புறம்; பெருகிவரும் ஆடை அணிகளின் தேவை மற்றொரு புறம்; ஈதாவின் கணவர் இப்ராகீம் இறுதியில் இதையுணர்ந்தார். அலுவலரைச் சந்தித்து, ''என் மனைவிக்குக் கருத்தடை வளையம் வேண்டாம்; நாளை நானே வந்து கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்கிறேன்'' என்றார்.

இஃது இவ்வாறிருக்க, அதே ஊரிலுள்ள மோதியாபாய் என்ற பெண்ணின் மனத்தை மாற்றுவதோ ஒரு பெருஞ் செயலாகிவிட்டது. ஊர் முழுதும் நல்ல செல்வாக்குப் பெற்றுள்ள அவருடைய பேச்சைக் கேட்டு ஊர் மக்கள் அன்று அலுவலர்களை அணுகவே மறுத்துவிட்டனர். முன்னர் ஒருமுறை அவர்கள் மோதியாபாயினால் விரட்டியனுப்பப்பட்டுள்ளனர்.

மகளிர் ஊர்ப்பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியைகள், கருத்தடை வளையம் அணிந்திருந்தனர். அவர்களைக் கொணர்ந்து, அவர்கள் வாயிலாக அலுவலர்கள் மோதியாபாயுடன் தொடர்பு கொண்டனர். இறுதியில் மோதியாபாய்க்குத் தோல்வி; அவர்களுக்கு வெற்றி; சிறிது யோசிப்பின் இருவருக்குமே வெற்றிதாம்.

வளையம் பொருத்திக்கொள்ளத் தன் முதல் மருமகளுக்கு ஒப்புதலளித்தார், மோதியாபாய். பிறகு அடுத்த மருமகளும் கருத்தடை வளையம் அணிந்தார்.

தற்போது மோதியாபாயின் குடும்பம் சிறந்ததோர் எடுத்துக்காட்டுக் குடும்பமாக விளங்குகிறது. அவருடைய மக்கள் கல்லூரிகளில் கற்கின்றனர்.

செல்வாக்குள்ள மோதியாபாயின் சொல்லிற்குக் கட்டுப்பட்டு ஊர் மக்கள் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை வரவேற்று, அதை மேற்கொண்டுள்ளனர்.

பக்கத்து ஊரிலிருந்து வருவோரிடமெல்லாம்கூடக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப்பற்றிக் கூறி, வீட்டிற்கும் நாட்டிற்கும் நற்பணியாற்றுகிறார் திரு. மோதியாபாய். அவர் வாழ்க! தொண்டு வாழ்க!

எல்லாம் உங்கள் கைகளில்

குடும்பக் கட்டுப்பாட்டுக் கருவிகளிலொன்றான உறைகளை அவ்வப்போது பயன்படுத்துவதால் மட்டுமே 40 சதவீதம் தம்பதியர்களுக்குப் பயன் கிட்டியுள்ளதென்று தெரிந்துள்ளது.

இவற்றை முறையாகவும் தொடர்ச்சியாகவும் கையாள்வதால் நாட்டில் 2·5 சதவீதத்திற்குப் பிறப்பு விகிதத்தைக் குறைக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

உழவர்களின் உள்ளங் கவர

இதோ அதோ

ஜெயா **பத்மா**

நெல் விதைகளினுலகிலே ஒரு புதுமையை உண்டாக்க, தம் பெயர்களால் உழவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து, தன்மையால் விளைச்சலைப் பன்மடங்காக்க இதோ வந்து விட்டனர் ஜெயா, பத்மா இருவரும்.

உயர் விளைச்சலைத் தருதல் மட்டுமின்றி, டெய்ச்சுங் நேடிவ் 1, ஐ. ஆர். 8, இவற்றில் காணவியலாத சில அரிய குணங்களையும் இவ்வித்துக்கள் கொண்டுள்ளன.

ஐ. ஆர். 8 ஐக் காட்டிலும் பத்து சதவீதம் கூடுதல் உற்பத்தியைத் தருகிருள் ஜெயா. தென்னகத்தில் நீண்டகாலப் பயிராகவிருக்கும் ஐ. ஆர். 8 இன் பயிர்ப்பருவத்தைவிட 10 நாட்கள் முன்னரே ஜெயா கதிர் விடுகிருள்.

ஜெயாவும், ஐ. ஆர். 8 உம் பார்வையில் ஒன்றே போல் தோன்றினும், ஐ. ஆர். 8, அல்லது டெய்ச்சுங் நேடிவ்-1, போன்று தோகையினூடே ஜெயா மறைந்து கிடப்பதில்லை.

சமவெளியில் பயிரிடுதற்கு ஜெயா பொருத்தமானவள். குறைந்த வெப்பத்தில் ஜெயா நன்கு வளர்வதில்லை. எனவே இதைக் காஷ்மீர், இமாசலப் பிரதேசம் போன்றவிடங்களில் பயிரிட முடியா. ஆனுல் வெள்ளத்தால் அவதியுறும் இடங்களில்கூட ஜெயாவைப் பயிரிடலாம். நீரின் தேக்கத்தில்கூட இது நன்கு வளரக் கூடியது.

தானியத்தில் ஜெயாவிற்கும் ஐ. ஆர். 8க்கும் வேறுபாடில்லை. பச்சரிசியாக உண்ண ஜெயா மிக்க ஏற்றது.

தானியங்களின் தரம்தாம் அவசியமெனில், அதற்கு ஜெயாவும் பத்மாவும் தாம் முதலிடம் பெறுவர். ஐ. ஆர். 8 போன்று, பத்மா மிகு விளைச்சல் தராதிருப்பினும், அரிசியின் உயரிய தன்மையால், இழப்பு ஆதாயமாகி விடுகிறது.

நல்ல அரிசிச் சோற்றை உண்ணுதல் வேண்டின் பயிரிடுங்கள் பத்மாவை!

சகோதரிகள் பத்மாவும், ஜெயாவும், டெய்ச்சுங் நேடிவ் ஒன்றைவிட 10 நாட்கன் முன்பாகவே அறுவடைக்கு நின்று விடுவர்.

ஜெயா, பத்மா பயிரிடுவீர்! பயன் பெறுவீர்!

— 'இன்டென்சிவ் அக்ரிகல்சர்' இதழிலிருந்து.

பயிர்ப் பூச்சிகளின் இனப்பெருக்கம் எவ்வாறு?



பயிர்களைத் தாக்கும் ஒரு பூச்சி 1600 முட்டைகளிடும். அந்த முட்டைகள் பூச்சிகளாகி ஒரு பெரிய வலிமைமிக்க சேனைபோல், 1000 ஏக்கர் பயிர்களைத் தாக்கி, அவற்றை 8 நாட்களில் ஒழித்து முடிப்பதற்குள், ஒவ்வொரு பூச்சியும் 800 மடங்கு இனப்பெருக்கம் செய்திருக்கும்!

— 'இன்டென்சிவ் அக்ரிகல்சர்' இதழிலிருந்து

அம்மாடியோவ்....!

Articles reproduced from 'Panchayat Raj' & 'Intensive Agriculture' from pages 70 to 77 (8 pages)

ஊராட்சி அரசிதழ்
PANCHAYAT GAZETTE

ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் ஆறாவது கூட்டம்

எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்

ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுவின் ஆறாவது கூட்டம் சென்னை இராசாசி மண்டபத்தில் செப்டெம்பர் 9, 10 தேதிகளில் நடைபெற்றது. தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

குழு, மூன்று பிரிவுகளாகக் கூடி விவாதித்தது. முதல் குழு 'நிர்வாகம் மற்றும் பணிகள்' பற்றியதாகும்; இரண்டாவது குழு, சமுதாய வளர்ச்சிப் பிரிவில் உற்பத்தித் திட்டங்கள் பற்றியது; மூன்றாவது குழு சமுதாய வளர்ச்சித் துறையினரால் நிறைவேற்றப்படும் நலப்பணிகள், வேலைத் திட்டங்கள் பற்றியதாகும்.

நிர்வாகம் மற்றும் பணிகள் : கட்டடங்கள் கட்டுவது குறித்து 1962இல் போடப்பட்ட தடையானது நீக்கப்பட்டுவிட்டது; திட்டமிட்ட வகையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பாலங்கள் போன்றவைகளைக் கட்ட அரசு இப்பொழுது அனுமதி வழங்கி வருகிறது என்பது குறித்து முதலில் விளக்கிக் கூறப்பட்டது. வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால், கட்டட வேலைகள் பல அப்படியே அடித்தளம் போட்டதோடு நின்றுபோய் வேலை முடிவுறாமல் உள்ளன எனக் குழு உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். அப்படிப்பட்ட நிலையில் உள்ள எல்லாக் கட்டடங்களையும் கட்டி முடிப்பதற்கான வகையில் இதற்காக நிதி ஒதுக்கீடு உடனடியாகச் செய்யப்படுமென மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிவித்தார்.

கூடுதல் நிதிவசதி உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், தங்களுடைய பொது நிதியிலிருந்து 50,000 ரூபாயை, ஆரம்பப்பள்ளிக் கட்டடங்கள் கட்ட முன் பணமாக எடுத்துச் செலவு செய்ய அனுமதி வழங்கவேண்டுமெனக் குழு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இக் கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதுபற்றிய ஆணைகள் உடனடியாகப் பிறப்பிக்க ஏற்பாடுகள் செய்வதாகக் கூறினார்கள்.

கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்யும் குழுவில், மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் பணிகள் பற்றிய துணைக் குழுவின் தலைவரும்

இடம் பெறல் வேண்டும் என்ற பரிந்துரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதுபற்றிய ஆணைகள், நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் பற்றிய தலைமைப் பொறியாளரால் உடனடியாகப் பிறப்பிக்கப்படும்.

கிராமக் குடிநீர் வழங்கும் திட்டம் பற்றி விரிவான முறையில் கருத்துரை நடைபெற்றது. இப்பொழுது ஒதுக்கியுள்ள நிதி மிகவும் குறைவானது என்று பொதுவான கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் குறை நியாயமானதுதான் என்பதை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, இப்படிப்பட்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்ற நிதியினைப் பெற அரசு எடுத்துவரும் முயற்சிகளை விளக்கிக் கூறினார்கள். செலவு அதிகமாக ஆகிவிடாமல் தடுக்கவும், பராமரிப்புச் செலவைக் குறைக்கவும் வேண்டி இரண்டு அல்லது அதற்கும் அதிகமான கிராமங்களை இணைத்து ஒரு பிரிவாக எடுத்துக்கொண்டு, குடிநீர் வழங்கவேண்டும் என்ற முறையானது ஊக்குவிக்கப்படவேண்டும் என்ற கருத்து கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 131ஆவது பிரிவின்கீழ் இப்பொழுது அனுமதிக்கப்பட்டுவரும் உள்ளூர் பாதை மானியம் போதவில்லை என்று கோரிக்கை எழுப்பப்பட்டது. இக்கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, நடைமுறை ஆண்டிலிருந்து உள்ளூர்ப் பாதை மானியம் கூடுதலாக இருக்கும் என அறிவித்தார். இக்கூடுதலானது, ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகைக் கணக்கை ஒட்டியும், பாதைகளின் நீளம், ஒன்றியங்களின் வட்டார அமைப்பு ஆகியவற்றை ஒட்டியும் அமைந்திருக்கும்.

பேருந்து வழிகளை ஊராட்சி ஒன்றியங்களின்கீழ்க் கொணர்ந்து அதை வேகப்படுத்துகின்ற கருத்து மிகவும் பரிவுடன் ஆயப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆனால், இதனால் அரசுக்கு மிகப் பெரிய அளவில் பணச் செலவு ஆகுமாகையால், இது மிகவும் கவனத்துடன் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்பது தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இணைப்புச் சாலைகள் தொடர்பாக, மக்கள் நன்கொடையைக் கணக்கிடும்பொழுது, உள்ளூர் மக்களினால் நன்கொடை அளிக்கப்பட்ட நிலமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தினை உள்ளாட்சித்துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டார். இதுபற்றிய ஆணைகள் தனியாகப் பிறப்பிக்கப்படும்.

உற்பத்தித் திட்டங்கள்: செயல்முறைச் சிறுபண்ணைகளில் (Demonstration Plots) செய்திப் பலகைகள் தயார் செய்துவைக்கும் செலவை, ஊராட்சி ஒன்றியங்களின் பொதுநிதியிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கவேண்டுமென மாவட்ட வளர்ச்சி மன்ற உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டார். இதுபற்றிய ஆணைகளை ஊர் வளர்ச்சி இயக்குநர் உடனடியாகப் பிறப்பிப்பார்.

விவசாய மானியத்தின்கீழ் அந்தந்த வட்டாரங்களுக்குத் தகுந்த சிறப்பு வேலைத் திட்டங்களின் பட்டியலில் சமுதாயக் கிணறுகளும் சேர்க்கப்பட வேண்டும் என்று இராமநாதபுரம் மாவட்டவளர்ச்சிமன்றங்களின் பேராளர்கள் விடுத்த கோரிக்கையை உள்ளாட்சித்துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டார். நான்காவது திட்டத்தில் விவசாய வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவது குறித்து வெளியிடப்படும் வேலை விவரக் குறிப்புகளில் இது சேர்க்கப்படும்.

பொதுக் காரியங்களுக்காக நிபந்தனையின்றி, இலவசமாக வழங்கப்படும் நிலங்களுக்கு முத்திரை வரி விதிக்கப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும் என்ற கருத்தை உள்ளாட்சித்துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

விவசாய வேலைகளுக்காக, விவசாயிகளுக்கு, வாடகை முறையில், ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான டிராக்டர்களை வழங்குவதில் காலாண்டுமுறையில் வாகன வரி செலுத்துவது பற்றி மிகவும் ஆதரவுடன் கவனிக்க

வேண்டுமென அமைச்சர் கேட்டுக் கொள்ளப்பட்டார். இது பற்றி மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்துபேசி, சாதகமான உத்தரவு கள் விரைவில் பிறப்பிக்கப்படும் என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் அறிவித்தார்.

மாநில விவசாயக் குழுவில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இடம் பெறவேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரும் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரும் ஏற்றுக்கொண் டார்கள்.

சிறிய பாசனம் சம்பந்தமாக, குடி மராமத்து வேலைகள் முதலில் கருத் துப் பரிமாற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குடி மராமத் துக் கட்டணங்களை விதிப்பதில் தவ றுன அமைப்புமுறை உள்ளதன் காரணமாக, ஊராட்சிகள் போதிய அளவில் குடி மராமத்து வேலைகளை எடுத்துச் செயல்படுத்த இயலவில்லை என்ற கருத்து நியாயமானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேற் கொண்டு ரூ. 1·50 உடனடியாக அதி கப்படுத்திக் கொடுத்தல்வேண்டும் என்பது ஒத்துக்கொள்ளப்பட்டது. பயன்பெறும் விவசாயிகளிடமிருந்து இந்தத் தொகையை ஊராட்சிகள் வசூல் செய்ய அனுமதி அளிக்கப் பட்டது.

பாசனக் கிணறுகளுக்கு மின் விசை அளித்தல், பல்வேறு கிராம ஊராட்சி களுக்குத்தெருவிளக்குகள்அமைத்தல் அடுத்ததாகப் பேசப்பட்ட பொருள் களாகும். தமிழ்நாட்டில் உள்ள 10 இலட்சம் கிணறுகளில் ஆறு இலட் சம் கிணறுகளுக்கு மின் விசை அளிக் கப்பட்டுள்ளது என்றும், இந்த வேலை, திட்டமிட்ட முறையில் நடை பெற்று வருவதாகவும் மின்சாரத் துறை அமைச்சர் விளக்கினர். நடப் பாண்டில் 50,000 கிணறுகளுக்கு மின்விசை அளிக்கப்படவேண்டும் என்று இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. 1970-71இல் ஓர் இலட்சம் கிணறுகளுக்கு மின்விசை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த வகையில், எல்லாக் கிராமங் களுக்கும் வெகு விரைவில் மின் வசதி செய்யப்படவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. விவசாய பம்பு-செட்டுகளுக்கு விதிக்கப்படும் மின்சாரக் கட்டணவிகிதம் குறைக் கப்படவேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதல்ல என்று மின்சாரத் துறை அமைச்சர் விளக்கிக் கூறினர். இந்தியாவிலேயே குறைந்த அளவு மின்சாரக் கட்டணம் தமிழ்நாட்டில் தான் உள்ளது; மாநில மின்சார வாரியம், இதனுல் ஏற்படும் நிதி இழப்பினை உதவித் தொகை அளிப் பதன் மூலம் சரிக்கட்டுகிறது.

நலப்பணிகள் : நலப்பணிகள் பற் றிய ஊராட்சி வளர்ச்சிக் கருத் துரைக் குழுவின் கூட்டம் 10-9-69 மாலையில் நடைபெற்றது.

மேற்கொண்டு குறைந்த அளவு 50 ஆரம்ப சுகாதார நிலையங்களாவது செயல்படுகின்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப் பட்டது. இந்த 50 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 50 சதவிகிதமாவது, அதாவது 25 நிலையங்களாவது இந்த ஆண்டிலேயே துவக்கப்படல் வேண் டும் என்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும் என்றும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

பள்ளிகளில் துப்புரவு வசதிகள் (Sanitary facilities) செய்வதற்கான நிதிவசதியினைச் சுகாதாரப் பணிகள்-குடும்பக் கட்டுப்பாடுத்துறை இயக்கு நர், ஊர்வளர்ச்சி இயக்குநரிடம் ஒப் படைக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த வேலைத் திட்டத்திற்காகக் கிடைக்கின்ற பணத்தை ஊர்வளர்ச்சி இயக்குநர் செலவு செய்யவேண்டும்.

இந்தத் திட்டம் முழுக்க முழுக்க மானியங்களின் உதவியால் நடை பெறும் திட்டமாகும். இதனுல் ஒரு பள்ளிக்கு ரூ. 2,000 செலவு செய்ய லாம். இந்த ரூபாய் இரண்டாயிரத் தில் ரூ. 1,200 குடிதண்ணீர் வசதிக் காகவும் ரூ. 800 துப்புரவு வசதிகளுக் காகவும் ஒதுக்கப்படும்.

ஊராட்சி மருந்தகங்களைத் திட்ட மிட்ட முறையில், மாநில அரசே ஏற்று நடத்தும். ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஏற்று நடத்த அரசுக்கு ஒரு மருந்தகத்திற்கு ஏறத் தாழ ரூ. 1 இலட்சம் செலவு ஆகும். ஆகவே, நிலையான மற்றும் தொடர்ந்து ஏற்படும் செலவினங்

களுக்காக ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து கிடைக்கும் நன்கொடையின் அளவினைப் பொறுத்தே, மருந்தகங்களை மாநில அரசே ஏற்று நடத்துவது என்ற வேலை விரைவில் நடப்பதும் நடக்காததும் அமையும்.

ஊராட்சி நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டி, உள்ளாட்சி நிர்வாகத்தைத் துரிதப்படுத்தவும், திருத்தியமைக்கவும், மண்டல அளவில் மண்டலத் துணை இயக்குநர்களையும் மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி அலுவலர்களையும் நியமனம் செய்யும் கருத்து அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

தனித்தனியே பள்ளிகள், வகுப்புகள் என்ற அடிப்படையில் இல்லாமல், மொத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் என்னும் அடிப்படையில், ஊராட்சி ஒன்றியம் முழுவதிலும் பள்ளிகளில் புதிய வகுப்புகள் தொடங்க அனுமதி வழங்குவது என அண்மையில் முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கொள்கைக் கிணங்க, அத்தகைய பள்ளிகளுக்கும் வகுப்புகளுக்கும் கூடுதலாக ஆசிரியர்களை ஒதுக்குவது என்பது அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும்.

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க:

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற!

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்.



CODE MB-1/VL

தயாரிப்பவர்கள்:

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்,
மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள்:

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071
75, கலாசிபாளையம்
தபால் பெட்டி எண் 539
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2

கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 81227
38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 677
இராயப்பேட்டை, சென்னை-14

தமிழ்நாடு, குடிநீர் வழங்கல், வடிகால் வாரியம் அமைத்தல்

நகர்ப்புற மக்களுக்கும், கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்க வேண்டியதன் முக்கியத் துவத்தை அரசு உணர்ந்து அதைப் பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்து வந்துள்ளதுடன், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இதற் காக வேண்டிக் கணிசமான நிதியினை யும் அரசு ஒதுக்கி வந்துள்ளது. இருந் தும் இதற்காக எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் எல்லாம், வறட்சி நிலையைச் சமாளிக்கவேண்டிய நிலை யில் உள்ள இவ்வாண்டில், போதிய வையாக இல்லை. இவ்வேலைத் திட் டங்களைச் செயல் படுத்துவதில் போதிய நிறைவு இல்லாததற்கு, இதைச் செயல் படுத்திவைக்கும் செயல் நிறுவனங்களிடையே திறமை யான, கட்டுக்கோப்பான நெருக்க மும், இணைப்பும் இல்லாதது ஒரு காரணம் எனக் கருதப்படுகிறது.

குடிநீர் வழங்கும் வேலைத் திட்டங் கள் இப்பொழுது பல்வேறு துறை யினரால் கவனிக்கப்பட்டு வருகின் றன. கிராமக் குடிநீர் வழங்குவது, கிராம வளர்ச்சி - உள்ளாட்சித் துறையினால் கவனிக்கப்பட்டு வரு கிறது. நகராட்சிப் பகுதிகளிலும் பத் தாயிரத்திற்கு மேற்பட்ட பேரூ ராட்சிகளிலும் குடிநீர் வழங்கும் திட்டம், சுகாதாரம் - குடும்பக்கட் டுப்பாடுத் துறையினரால் கவனிக்கப் பட்டு வருகிறது. வீராணம் வேலைத் திட்டமும், மண்ணுக்கடியில் உள்ள நீரை வெளிக்கொணர்ந்து வழங்கும் வேலைத்திட்டமும் பொதுப்பணித் துறையினரால் கவனிக்கப்பட்டு வரு கிறது. முன்பே அனுமதிக்கப்பட்ட குடிநீர் வழங்கல், மற்றும் வடிகால் பற்றிய வேலைத் திட்டங்கள் செம்மை யாகவும், திறமையாகவும் செயல் படுத்தப்பட்டு, 1972க்குள்ளாக வேனும் எல்லா நகராட்சிகளுக்கும், முக்கியமான ஊராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு வது என்ற அரசின் இலட்சியமானது நிறைவேற்றப்படவேண்டி, இவ்வேலை களைச் செயல்படுத்தி வரும் பல்வேறு பட்ட துறையினரால் பணிகளைச் செம்மையான முறையிலும் திறமை யான முறையிலும் செயற்படுத்த இத்துறைகளுக்கிடையே இப்பணி களை நல்ல முறையில் இணைத்துப் பணி யாற்றிச் செயல்படுத்துவதற்கான ஒருமுறைபற்றி அரசு, சில காலமாகப் பரிசீலித்து வந்துள்ளது. எல்லா நக ராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதிகள் செய்து கொடுத்தல் என்ற பணியைச் செயல்படுத்தி வைப்பது, ஒரே ஒரு நிறுவனத்தின் அதிகார வரம்பின்கீழ் இருக்கவேண்டும் என அரசு முடிவு எடுத்துள்ளது. இதற் காக, குடிநீர் வழங்கல் - வடிகால் வாரியம் (Water Supply and Drainage Board) ஒன்றினை அமைப்பதென அரசு முடிவு எடுத்துள்ளது. இவ்வாரி யம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் - வடிகால் வாரியம் எனப் பெயரிடப் படும். இவ்வாரியம் உடனடியாக உரு வாக்கப்படும். அரசுச் செயலாளர் என்ற பதவி நிலையில், ஒரு முழு நேர அதிகாரி, இவ்வாரியத்தின் உறுப் பினர் - செயலாளராக நியமனம் செய்யப்படுவார்.

3. கீழ்க்கண்ட அதிகாரிகள் இவ்வாரியத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள் :

(1)	தமிழக அரசின் இணைத் தலைமைச் செயலர்	—	தலைவர்
(2)	அரசுச் செயலாளர், வருவாய்த்துறை	—	உறுப்பினர்
(3)	அரசுச் செயலாளர், பொதுப்பணித்துறை	—	,,
(4)	அரசுச் செயலாளர், நிதித்துறை	—	,,
(5)	அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி - உள்ளாட்சித்துறை		,,
(6)	அரசுச் செயலாளர், விவசாயத்துறை	—	,,
(7)	அரசுச் செயலாளர், சுகாதாரம் - குடும்பக் கட்டுப்பாடுத்துறை	—	,,
(8)	தலைமைப் பொறியாளர் (பொதுச் சுகாதாரம் பொறியியல்)	—	,,
(9)	பொதுத் துறையின் செயலாளர் (பதவியின் காரணமாக)	—	உறுப்பினர் செயலாளர்

4. நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் பற்றிக் கவனிக்கும் பல்வேறு துறைகளின் செயற் திட்டங்களை இவ்வாரியம் ஒன்றிணைக்கும்; குடிநீர் வழங்கல், வடிகால் பற்றிய வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், ஆராய்ச்சி, அமைப்பு முறை, செயல்படுத்தல் ஆகிய வகைகளில் காணும் முன்னேற்றங்களை இவ்வாரியம் ஆய்வு செய்யும். மண்ணுக்கடியில் உள்ள நீரை வெளிக்கொணரும் திட்டம் உட்பட, குடிநீர் வழங்கல் - வடிகால் வேலைத் திட்டம் சம்பந்தமான எந்த ஒரு திட்டமும் - இவ்வாரியத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். தன்னுடைய வேலையை அமுல் செய்ய வேண்டிய விதிமுறைகளை இவ்வாரியம் தயாரித்து அவற்றை அரசின் அனுமதிக்கு அனுப்பிவைக்கும். வருங்காலத்தில், நிர்வாக அதிகாரங்களும் பொறுப்புகளும் இவ்வாரியத்திற்கு அளிக்கப்படும். சட்டபூர்வமான அடிப்படையில் இது இயங்கவும், தன் ஆதாரங்களைச் சொந்தமாகத் தோற்றுவித்துப் பெருக்கிக்கொள்ளவும் இவ்வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்படும்.

6. உறுப்பினர் - செயலாளர் நியமனம் பற்றிய ஆணை தனியாகப் பிறப்பிக்கப்படும்.

[கிராம வளர்ச்சி - உள்ளாட்சித் துறையின் 23-9-69 தேதியிட்ட அரசு ஆணை எண் 1800இன் சுருக்கம்]

துறவு பூண்டது ஏன்?

காந்தியடிகள் துறவு பூணவேண்டும் என்பதற்காகத் துறவு பூண்டவரல்ல. 'ஈரப் படுக்கையில் தானாக விரும்பி ஒரு தாய் படுக்கமாட்டாள். ஆனால் உலர்ந்த படுக்கையைத் தன் குழந்தைக்கு அளிப்பதற்காக ஈரப் படுக்கையை அவள் மனமகிழ்வுடன் ஏற்றுக் கொள்வாள்.' - இந்த அடிப்படையில் மக்கள் பணி புரிவதற்காகவே காந்தியடிகள் துறவு பூண்டார்.

43 ஊராட்சிகள், பேரூராட்சிகளாகத் திருத்தியமைக்கப்படுகின்றன

1-10-'69 முதல் இது அமுலுக்கு வரும்

கீழ்க்கண்ட 43 ஊராட்சிகளை, பேரூராட்சிகளாக மாற்றியமைத்துக் கிராம வளர்ச்சி இயக்குநர் உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ்வூராட்சிகள் 1-10-69 முதல் பேரூராட்சிகளாக இயங்கும்:

வரிசை எண்	ஊராட்சியின் பெயர்	கோட்டத்தின் பெயர்	மாவட்டம்
1.	பள்ளிப்பட்டு	— திருவள்ளூர்	— செங்கற்பட்டு
2.	அச்சிறுபாக்கம்	— செங்கற்பட்டு	— செங்கற்பட்டு
3.	அம்மூர்	— இராணிப்பேட்டை	— வடஆர்க்காடு
4.	பெருமனல்லூர்	— செய்யாறு	— வடஆர்க்காடு
5.	கழிஞ்சூர்	— திருப்பத்தூர்	— வடஆர்க்காடு
6.	திருவல்லம்	— திருப்பத்தூர்	— வடஆர்க்காடு
7.	சேரகுப்பம்	— சிதம்பரம்	— தென் ஆர்க்காடு
8.	கிள்ளை	— சிதம்பரம்	— தென் ஆர்க்காடு
9.	மேல்பட்டாம் பாக்கம்	— சிதம்பரம்	— தென் ஆர்க்காடு
10.	அபதாரண புரம்	— சிதம்பரம்	— தென் ஆர்க்காடு
11.	தோரப்பாடி	— சிதம்பரம்	— தென் ஆர்க்காடு
12.	பார்வதிபுரம்	— சிதம்பரம்	— தென் ஆர்க்காடு
13.	அனந்தபுரம்	— திண்டிவனம்	— தென் ஆர்க்காடு
14.	கோட்ட குப்பம்	— திண்டிவனம்	— தென் ஆர்க்காடு
15.	கெலமங்கலம்	— ஓசூர்	— தர்மபுரி
16.	பருகூர்	— ஓசூர்	— தர்மபுரி
17.	ஊத்தங்கரை	— தர்மபுரி	— தர்மபுரி

வரிசை எண்	ஊராட்சியின் பெயர்	கோட்டத்தின் பெயர்	மாவட்டம்
18.	இலிப்பலி		
19.	நெரிஞ்சிப் பேட்டை		
20.	கெம்பநாயக்கன் பாளையம்	— கோபிசெட்டிப் பாளையம்	— கோயமுத்தூர்
21.	அத்தாணி		
22.	துடியலூர்		
23.	சரவணம் பட்டி		
24.	ஒத்தக்கால் மண்டபம்	— கோயமுத்தூர்	— கோயமுத்தூர்
25.	ஆலந்துறை		
26.	சின்னவேடம் பட்டி		
27.	சூளீசுவரன் பட்டி	— பொள்ளாச்சி	— கோயமுத்தூர்
28.	சித்தோடு		
29.	ஊத்துக்குளி	— ஈரோடு	— கோயமுத்தூர்
30.	குன்னத்தூர்		
31.	எரியோடு	— திண்டுக்கல்	— மதுரை
32.	பட்டிவீரன்பட்டி	— உசிலம்பட்டி	— மதுரை
33.	அன்னவாசல்	— புதுக்கோட்டை	— திருச்சிராப்பள்ளி
34.	கொளக்குடி	— முசிரி	— திருச்சிராப்பள்ளி
35.	கிருஷ்ணராயபுரம்	— கரூர்	— திருச்சிராப்பள்ளி
36.	பேரளம்		
37.	கீவலூர்	— நாகப்பட்டினம்	— தஞ்சாவூர்
38.	திட்டச்சேரி		
39.	மணல்மேடு		
40.	ஆனைக்காரன் சத்திரம்	— மாயூரம்	— தஞ்சாவூர்
41.	மல்லங்கிணறு	— சிவகாசி	— இராமநாதபுரம்
42.	பன்பொழி	— திருநெல்வேலி	— திருநெல்வேலி
43.	திருவேங்கடம்	— கோவில்பட்டி	— திருநெல்வேலி

[20-9-69 தேதியிட்ட கிராம வளர்ச்சி இயக்குநரின் நடவடிக்கைக் குறிப்பு எண். 85446/69-F. 2.]

———

ஆசிரியருக்குக் கடிதம்:

தேள்க் கடியும் பாம்புக் கடியும்

ஐயா,

இந்தியாவில் பாம்புக் கடியால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இறக்கின்றனர். பல கிராமங்களிலும், நகரங்களிலும் நூற்றுக் கணக்கான மக்கள் நாள்தோறும் தேள்களால் கொட்டப்பட்டு கொடிய வலியால் அவதியுறுகின்றனர். சிலர் இறந்தும் விடுகின்றனர். ஆகையால் தேள்க் கடியாலும், பாம்புக் கடியாலும் ஏற்படும் நச்சினை நீக்கச் சிறந்த மாற்று மருந்து ஒன்று எல்லாக் கிராமங்களிலும் கிராமவாசிகளாலேயே எவ்விதப் பயமுமின்றிப் பயன்படுத்த வசதி செய்வது பெரு நலம் பயப்பதாக இருக்கும்.

'சுகநாசா' என்று சமஸ்கிருதத்திலும், 'கிளிமூக்குக் கொன்னை' என்று தமிழிலும், 'குரோடாலேரியா லாபர்னி ஃபோலியா' என்று தாவர நூல் வல்லுநர்களாலும் அழைக்கப்படும் தாவரத்தின் விதைகளை மலையாளத்திலுள்ள என் ஆசான் (திரு. டி. கே. அனந்தராம ஐயர்) அவர்களிடமிருப்பதை அறிந்து, இவ்வரிய வித்து சஞ்சீவியைப் பெற்று நாங்கள் பலருக்கு நேர்முகச் சிகிச்சை செய்து, குணமடைந்ததைக் கண்டு நிறைவடைந்தோம். என் ஆசானின் ஆவலை நிறைவு செய்யும் பொருட்டும், நம் நாட்டு மக்களின் நலனை உத்தேசித்தும் இவ்வரிய விதைகளின் நன்மையை எடுத்துக்கூற முன்வந்துள்ளோம்.

இச்செடியை ஒவ்வொரு வீட்டின் கொல்லையிலும் மிகவும் எளிய முறையில், செலவு அதிகமின்றிப் பயிரிடலாம். இவ்விதைகளைப் பயிரிட மழை காலமாகிய ஆடி, ஆவணி மாதங்களே சிறந்த காலமாகும். இச்செடியிலிருந்து கிடைக்கும் விதைகளில் பாம்புக் கடிகளுக்கு 60 முதல் 300 விதைகளும், தேள்க்கடிக்கு 12 விதைகளும் சிகிச்சை செய்யப் போதியனவாக இருக்கும். மேலும் இச்செடியின் மஞ்சள் மலர்கள் தோட்டத்தை அலங்கரிக்கவும் உதவும்.

இவ்விதைகள் கடைகளில் கிடைக்கா. இவற்றைப்பெறவிரும்புபவர்கள் இச்செடியைப் பயிரிட விரும்பவேண்டும். இவ்வாறு பயிரிட வாய்ப்பு உடைய ஒவ்வொருவரும் குறைந்தது இரு செடிகளையாவது பயிரிட்டுப் பொதுமக்களுக்குப் பயன் படும்படி செய்யவேண்டும். இச்செடியைப் பயிரிட விரும்புவோர் எனக்கு எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தேள்க் கடியைக் குணப்படுத்துவதற்கு, கொட்டிய தேளின் உருவத்தைப் பொறுத்து 6 முதல் 15 விதைகளைச் சம எண்ணிக்கை மிளகுகளுடன் தண்ணீரைச் சேர்த்து அரைத்து உருட்டி விழுங்கவேண்டும். சிறிது அளவு மருந்தைக் கடித்த இடத்தில் தேய்க்கவேண்டும். எலி, சிலந்தி, பூரான் முதலிய நச்சுக் கடிக்கும் இதே சிகிச்சையைச் செய்யலாம்.

பாம்பு கடித்தால் முதலில் கடித்த இடத்திற்குமேல் ஒரு துணியைக் கிழித்து இறுக்கிக் கட்டவும். பாம்பின் வகையையும், நஞ்சின் கொடுமையையும் பொறுத்து 60 முதல் 300 விதைகளைச் சம எண்ணிக்கை மிளகுடன் தண்ணீர் விட்டு நன்றாக மெழுகுபோல் அரைத்து உருட்டி ஒரு தடவையிலோ அல்லது இரண்டு தடவைகளிலோ விழுங்க வேண்டும். கடித்த இடத்தின்மீதும் சிறிது மருந்தைத் தேய்க்கவேண்டும். பாம்புக் கடி பட்டவர் கடிபட்டது முதல் 24 மணி நேரத்திற்கு எந்தவித

உணவு உண்ணவோ, தூங்கவோ கூடாது.

நஞ்சுடையவை கடித்து உடம்பில் நஞ்சு ஏறுமல் இருந்துவிட்டாலும், இம் மருந்தை உபயோகிப்பதில் எத்தகைய விபரீத விளைவுகளும் ஏற்படாது.

இடம்: குத்தாலம்,

தேதி: 20-8-69

அன்பன்
K. S. ஆனந்தன்
நெ. 37, வாசுகி இல்லம்
இரயிலடி தோப்புத் தெரு, குத்தாலம் P.O. தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு

அரவினிடமும் அன்பு

ஒரு நாள் மாலையில் ஆசிரமத்தில் காந்தியடிகள், இறை வழிபாட்டுக்காகக் கூடுமிடத்தில் அமர்ந்து வழிபாட்டில் ஆழ்ந்திருந்தார். அவர் தோள்மீது போர்வை இருந்தது. ஒரு கரும் பாம்பு மெல்ல நெளிந்து வந்து அதில் தொற்றிக்கொண்டது. இராவ்ஜிபாய் படேல், அதைக் கவனித்து, அவர் மேலிருந்த போர்வையை மெதுவாக விலக்கி அந்தப் பாம்பை உதறித் தள்ளிவிட்டார்.

பின்னர் ஒரு சமயம் இந் நிகழ்ச்சி நினைவுக்கு வரவே, காகா சாகேப் காலேல்கர், காந்தியடிகளைக் கேட்டார்: ''உங்கள்மீது பாம்பு ஊர்ந்தபோது உங்களுக்கு எப்படி இருந்தது?'' அதற்கு அடிகள், ''சில கணம் நான் திடம் குலைந்து போனேன். அது சற்று நேரமே! என்னுடைய மனத்திண்மையை நான் மீண்டும் பெற்றேன். அப்போது எனக்கு என்ன தோன்றியது தெரியுமா? என்னைப் பாம்பு கடித்தாலும் யாரும் அதைக் கொல்லக்கூடாது என்பதே. ஆனால் அதன் போதாத வேளை, பாம்பைக் கண்டவுடனே அதைக் கொன்று போடத்தான் நமக்குத் தோன்றுகிறது. இதுவரை அம்மாதிரி யார் கொல்லப் புகுந்தாலும் நான் தடுத்ததே இல்லை. ஆனாலும் என்னை அந்நிலையில் பாம்பு கடித்திருப்பினும் அதை மன்னித்து அதற்கு உயிர்ப் பிச்சை தாருங்கள் என்று நான் கூறியிருப்பேன்!'' என்றார்.

அரவினிடமும் அன்பு காட்டும் இவ்வுயர் நோக்கு அண்ணல் காந்தியடிகளிடமின்றி வேறு யாரிடம் காணமுடியும்!

பார்த்தோம் படித்தோம் பட்டதைச் சொல்கிறோம்

சீரணி இதழ் உண்மையிலேயே இப்போது ஒரு புதுப் படைப்பாக வந்துள்ளது. நாடகம், கதை, கட்டுரையுடன் ஒரு புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது. ஆனல் அது எல்லா இடங்களிலும் கிடைக்கவில்லே. நான் நூலகத்தில்தான் சீரணி படிப்பதுண்டு. ஆனல் தற்பொழுது வரும் இதழ்களேக் கண்டவுடன் அதை நானே எனக்குச் சொந்தமாகச் சீரணியை வரவழைத்துப் படிக்க விரும்புகிறேன். 'சீரணி'யின் சந்தாதாரராக விளங்க விரும்புகிறேன்.

வீ. சடையாண்டி
பட்டிவீரன்பட்டி,
மதுரை மாவட்டம்.

'சீரணியில்' திரு. சோம மகாதேவனின் 'வாழ்வோடு கலந்தது' சிறுகதையின் ஒவ்வோர் எழுத்தின் மூச்சும் இந்த நாட்டுக் குடியானவனுடைய உயிரின் வீச்சு,

சீரணியில் இதுபோல் ஏழை உழவர் சமுதாயத்தின் மன ஆழத்தைப் படம் பிடித்துக் காட்டும் கதைகள் இடம் பெறட்டும்.

'காமதாசன்'
எளச்சிபாளேயம்
சேலம் மாவட்டம்.

கிராம முன்னேற்றத்தின் நலனேக் கொண்டு இயங்கும்'சீரணி' இதழைப் பயிலும் நேயரில் நானும் ஒருவன். தமிழின் வளர்ச்சிக்கு இவ்விதழும் பயனுறும் நிலேகண்டு பெருமகிழ் வெய்துகிறேன்.

புலவர் திருநாவுக்கரசு
கீழ் வேளூர்
நாகை வட்டம்.

ஐயா,

கிராம நலம் 'மே' இதழில் குறிப்பிட்டிருந்த கோதுமை உணவைச் செய்து உண்டு மகிழ்ந்தோம். கோதுமை உப்புமா செய்கின்ற முறையைச் சீரணியில் வெளியிட எழுதி அனுப்புகிறோம்.

கோதுமை உப்புமா:

முதலில் கோது[illegible] அரைத்தல் வேண்டு[illegible] யாக இருக்கும்படி [illegible] அரைத்து, பிறகு அ[illegible] வேகவைத்து, பாதி[illegible] அதை வடித்து விடவும்[illegible] ணீரில் உப்புப் போட்[illegible] சூப்பு போலக் குடிக்[illegible]

பாதி வெந்த [illegible] இரண்டு நாள் காய[illegible] வுக்குப் பயன் படுத்[illegible]

தேவையான பொருள்[illegible]

காயவைத்த கோது[illegible]
உப்பு- தேவையான [illegible]
நெய் - 2 தேக்கரண்[illegible]
பெரிய வெங்காயம் [illegible]
பச்சை மிளகாய் - 5
கடலே எண்ணெய் - [illegible]
கருவேப்பிலேக் கொத்[illegible]
தக்காளிப் பழம் பொ[illegible]
கடுகு சிறிதளவு

செய்முறை: முதலில் [illegible] ணையைச் சுடவைத்து, [illegible] தையும், பச்சை [illegible] எண்ணெயில் வறுத்[illegible] வேப்பிலே போட்டு [illegible] வரும்போது தக்கா[illegible] போடவும். $\frac{3}{4}$ ஆழ[illegible] அதில் ஊற்றவும்[illegible] வருகையில் காய்[illegible] அதில் போட்டுக் [illegible] யான அளவு உப்[illegible] இறக்கி வைத்து நெ[illegible] கிளறி 5 நிமிடங்கள் [illegible] எடுத்து உண்டால் சுவைய[illegible] கும். சிறிது சர்க்கரை[illegible] லாம்.

இதை நாங்கள் செ[illegible] ண்டு மகிழ்ந்தோம். சீரணியி[illegible] வதற்காக எழுதி அனுப்பு[illegible]

C. கே[illegible]
C. மது[illegible]
பத்தாம் வகுப்பு 'அ'
அரசினர் உயர்நிலேப் பள்ளி, ஒகு[illegible]

பற

12

ல்லூர்
வேலி,
சே 125